உ
ஓம் விநாயகநம


# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

மூன்றுவது
ஆண்டு மலர்
இதழ் 3 | சித்தார்த்தி வருஷம் புரட்டாதி மாதம் 5ம்திகதி வெள்ளிக்கிழமை [21-9-1979] | சுடர் 1

### சைவத்தின் தீபம் யோகசுவாமிகள்



### யோகசுவாமி சொல்வன

நாங்கள் சிவனடியார். எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. சிவ தொண்டு செய்வதே எங்கள் தொழில் அதற்காகவே நாங்கள் பூமியில் வாழ்கிறோம்.

சந்திரன் சிவதொண்டு ஆற்றுகின்றது. சூரியனும் ஏனைய கிரகங்களும் அத்திருப்பணியையே செய்கின்றன. தேவர்களும் அசுரர்களும் கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர்களும் அப்படியே தொண்டாற்றி வருகின்றனர்.

அனைத்துஞ் சிவன் செயல் அவனன்றி அணுவும் அசையாது. நாம் இழந்து போவதும் ஒன்றுமில்லை; ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. இருந்த படியே இருக்கின்றோம்.

நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை. நமக்கு இதம் அகிதம் இல்லை. மரணம் பிறப்பு இல்லை; வேண்டுதல் வேண்டாமை இல்லை. மண்ணாதி ஆசையில்லை. மனமான பே இல்லை. காலதேச வர்த்தமானம் நமக்கில்லை நாம் அனைத்துக்கும் சாட்சியாக விளங்குகின்றோம்.

ஓம் தத் சத் ஓம்

நீ உடம்பன்று மனமன்று புத்தியன்று சித்தமன்று நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இதுமகான்களுடைய அனுபவ சித்தாந்தம் இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக்கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு அதாவது தரும நெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய் கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்.

தெய்வத்தை நம்பு; முழுமனத்தோடு நம்பு உலகில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும் போதும் நிற்கும் போதும் நடக்கும் போதும் கிடக்கும் போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலுந் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக் கொள் எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான் கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

நான் உங்களுக்குச் சொல்லக் கூடியது ஒன்றுண்டு. நீங்கள் உங்கள் கடமையை வழுவாது செய்யுங்கள். உங்களுக்குப் பகவான் நல்லருள் புரிவார்.

எல்லாருக்கும் என் அன்பார்ந்த வணக்கத்தை செய்கிறேன்.

### உலக மக்கட்கு சைவ நெறி உணர்த்த வந்த சுவாமி

# துறவியும் கூட்டமும் காட்டி துன்பமும் இன்பமும் தோற்றி
## இன்பமும் துன்பமும் எல்லாம் கடந்தவர் காதலில் வாழும் கடவுள் எம்பிரான் சிவன்

இந்த வாக்கியத்தை எம்பிரான் சம்பந்தர் மொழிகின்றார். சிவனது அருள் நிலைகள் பற்றி மொழிகின்ற ஒரு தேவாரப் பதிகத்து இவை பேசப் படுகின்றது.

இந்த ஒரு திருவாக்கை நாம் உணர்தல் நன்று. நமது தமிழ் நாட்டில் முத்தி இன்பத்தை விழைந்த பெருமக்கள் பலர் இருந்தனர். இவர்கள் பிறவியின் பயனை உணர்ந்து பிறவியால் வருவது கேடு உள்ளது எனக் கண்டனர். இந்தக் கேடு பல வகையாகவும் பெருகும். யாரும் தடுத்திட முடியாது, பிறவியில் வரும் இன்பம் பின்னர் துன்பமாக மாறும், இது எவர்க்கும் பொருந்தும் எத்தேசத்து வாழும் எவர்க்கும் பொருந்துவது, இதை விடுத்து நீங்கினர் யாரும் இல்லை எனலாகும்.

### வன்கண்ணர் தன் கொடுமை உணரார்

இதை யாரும் இலகுவாக உணர முடியாதபடி சிந்தையை பிணித்த மாயை மறைத்துக் கொண்டிருக்கிறது. ஒருவர் ஒரு ஆலயத்து நான் நினைத்தபடியே செய்வேன் எனக்கு யாரும் புத்தி சொல்ல வேண்டியதில்லை என வீறுப்புக் கொண்டு கருமம் செய்யலாம். சிலருடைய ஆதரவைப் பெற்று தங்கள் செயலைச் செய்து அவலக்கூத்தாடி ஆலயத்தின் புனிதத்தைக் கெடுத்து ஆங்காரமுடன் நடக்கலாம். வலி உடையார் செயலிற்கு எல்லை எவ்வளவு என நாம் வகுத்துக் கூறமுடியாது. பெரும் பாலும் இவர்களுடைய செயல் கலகம் அடித்தல் கொலை செய்தல் இந்த நிலையில் வரும். இவருடைய செயலை யாரும் தட்டிக் கேட்க முடியாத நிலையில் இருக்கும். யாழ்ப்பாணத்தில் பல கோவில்களில் இவை நடை பெறுவதை கண்ணாரக் காண்கின்றோம், வலியிலாத மக்கள் உள்ளம் இவை கண்டால் என் செய்யும்? வேதனைப் படும். அவ்வளவுடன் அமையாது அந்த வேதனை நீளவே பெருகும். இவர்கள் வேதனைப்பட அடக்குமுறை வன்கண்ணர் இன்னும் இன்னும் தமது கொடுமைகளைக் கூசாது செய்வர், இந்த நிலையில் கோவிலில் தகாத செயலை புரிந்தார்க்கு அந் நேரத்து ஆனந்தமும் மகிழ்ச்சியும் தம் செயலில் ஓர் இறுமாப்பும் கொண்டு இன்பமுடன் நடந்து கொள்வார்.

### ஆங்காரத்தின் முடிபு துயரமாகும்

இந்த நிலையில் இவரது இன்பம் எப்பொழுது முடியும் அல்லது இவரது ஆங்காரச் செயலைக் கண்டு வருத்த முறுவார் என்று தம் கவலை நீங்குவார் என்றதற்கு சம்பந்தர் பெருமான் அந்த தமது வாக்கில் துறவியும் கூட்டமும் காட்டி துன்பமும் இன்பமும் தோற்றி எனவே மொழிந்துள்ளதைச் சிந்தித்தால் துன்பப் பட்டார்க்கு சிவன் இன்பம் தோற்றுவிப்பார் என்பது நம்பிக்கையாயது.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமது ஒரு பதிகத்து தோற்றம் உண்டேல் மரணம் உண்டு துன்பம் உண்டேல் இன்பம் உண்டு என மொழிகின்றார். இவ்வளவுடன் அமையாது இன்பமுண்டேல் துன்பமுண்டு ஏழை மனை வாழ்க்கை என மனை வாழ்க்கை பெருமை உடையதல்ல துயரத்திற்கு வித்தாகின்றது எனவே மொழிகின்றார். ஏழை ஒருவன் எவ்வாறு செல்வந்தர்க்குரிய வகை சிறப்புக்களைப் பெற முடியாது இருப்பானோ அவ்வாறே மனை வாழ்க்கையில் அழுந்தும் பலர் ஆத்மீக நெறியில் இன்ப நிலை அடையார்கள், ஆதலினால் வாழ்க்கையில் பெறும் சிறு இன்பங்களான பட்டம் பதவி பெண் போகம் வாகனம் முதல் பல நிலையால் வரும் இன்பப் பேறுகள் சொல்வொணாத அல்லலில் பின்னர் சேர்விப்பன என ஞானிகள் கண்டனர். அதனாலே இவற்றின் தாக்கம் பற்றி நாயன்மார் தம் பதிகங்களில் நன்கு விளக்கி உள்ளனர்.

### நாயன்மார்பாடல் நான்எனும் தன்மையிலாதது.

இந்த நிலையில் நாம் ஒன்றைச் சிந்தித்தாக வேண்டும். நாயன்மார் இந்த உண்மைகளைச் சொல்லும் போது எந் நிலையில் இதைச் சொன்னார்கள் என்றால் தாம் உண்மையை உணர்ந்து உலக மக்களின் நலன் கருதிச் சொன்னார்கள். அவர்கள் சொல்லும் போது ஓர் பிரசாரநோக்கமாகச் சொல்லினரோ என்றால் அது இல்லவே இல்லை. அவர்கட்கு எட்டுணையேனும் இச்செயலை பிரசார நோக்கமாகச் செய்யவில்லை.

இதில் இன்னொன்று விளங்கிடக் காணலாகும். நாயன்மார் யாவரும் பிறர்க்காகப் பாடவில்லை. தம்பாடல் தலைவனுக்காகவே பாடினர். தாம் பாடுகின்றோமே என்ற வகையும் அறியா வகை பாடினர். தாம் திறமையான நற்கருத்துடைய பாடலைப் பாடி விட்டோம், என்ற உளப்பாங்கு கூட அங்கு அவர்க்கு இருக்கவில்லை. இதனை சம்பந்தர் ''என துரை தனதுரையாக'' என மொழியும் போது தாம் பரடும் பாடலின் நலம் நலமின்மைக்கு தாம் பொறுப்பல்ல என்ற வகை சொல்லி உள்ளனர்,

### தன்னிடத்து ஒழுக்கமிலாதார் போதனை.

இந்த உண்மையை எம் யாழ்ப்பாணத்து ஆர்க்கு விளங்கும். ஒருவர்க்குமே விளங்கவில்லை எனலாகும். ஏனெனில் பொய்யே பேசுகின்ற தனது கௌரவம் பங்கமாகிவிடும் என்ற அச்சத்தால் நடந்தவற்றை நடக்கவில்லை என்கின்ற சில பெண்களை மங்கையர்க்கரசியாரிலும் மேம் பட்ட வகையாக சமயம் வளர்க்கிறார் என கில ஆசியர்கள் பாராட்டுரை வழங்குகின்ற போது நாம் வேறு என்ன நினைக்கலாம்.

இன்று பல ஆசிரியர்கள் சமயத்தின் கல்வித்துறைப் பிரசாரத்தில் போதிப்பில் நின்றாரே ஒழிய சமத்தின் சீலமோ அல்லது தத்துவ உணர்ச்சியோ இல்லவே இல்லை எனலாகும். தாம் ஒழுகமுடியாததை பிறர் ஒருவரை ஒழுகும் படி போதனை செய்வது கோழைத்தனம். அடுத்து அது வஞ்சகனது செயல். இன்று கோவில்களில் பல சமயப் பிரசாரங்களில் ஈடு படுகின்ற பல ஆசிரியர்கள் கல்வித்திணைக்கள மேலதிகாரிகட்கு தாம் என்னவும் சொல்லிப் தப்பலாம் என்ற வகையே கோவிலில் மேடைமேல் பேசுகிறார்கள். இவர்கள் கோவிலல்லாத பொது மேடைமேல் ஏதும்பேசலாம் நாம் அதை அக்கறை கொள்ளோம்.

ஆனால் கோவிலில் பேசிடும் பொழுது அங்கு பேதைத்தனமான பொய்யான வஞ்சனை நிரம்பிய பேச்சுக்களைப் பேசி அந்த ஆலயச் சூழலையே வஞ்சனைப் பெருக்கத்திற்கு இடமாக்கி விட்டு பிறகு தம் கருமம் பார்ப்பது நீதியல்ல.

### துறவிகளாலும் அடியார்களாலுமே கோவிலில் அருள் வரும்

இறைவன் கோயில் அருள் பெருக்கிடும் இடம். இந்த இடத்தில் எந்நிலையிலும் கேடும் ஆக்கமும் கெட்ட திருவுடைய அடியார்க்கே ஏற்ற இடம் என்பதை சம்பந்தர் தெளிவு படுத்துகின்றார். அதனாலே மற்றையோர் போகக் கூடாது என்று நாம் சொல்லவில்லை. கோயில் செல்ல வேண்டும் நித்தலும் செல்ல வேண்டும். அது ஒரு வாழ்வின் சிறப்பு. ஆனால் இன்று கோயிலில் பலர் செய்யும் பணம் பறிப்பு வியாபாரம் துர்நடத்தை பிரசங்கம் வில்லுப்பாட்டு ஒலிபெருக்கி இவையான செயலைச் செய்யாது வழிபட்டு வாருங்கள்.

கோவிலிற்கு ஆட்களை வர வழைப்பதற்காக திருவிழா பாட்டுக் கச்சேரி பிரசங்கம் இவை வைப்பது போன்ற பேதமைச் செயலும் பாவச் செயலும் வேறில்லை. இப்படிச் செய்வார் தாம் கும்பிட்ட பலனையே இழப்பர். இதை என்று தமிழ் மக்கள் உணர்வாரோ அன்று தான் தமிழர்க்கு நன்மை தரும் காலத்தின் விடிவு.

கோயில் துறவு நெறி நின்ற அருளாளர் விரும்பும் இடமாக அமைதல் என்றால் முதற்கண் அங்கு பத்திமை தொனிக்க வேண்டும். பத்திமை துறவின் ஒரு சீலமாகும். ஆனதினால் அப்பெருமக்களுடைய அருள் வர வர ஆலயமும் சிறந்து விளங்கும் இது உண்மை.

### சைவர்கள் சர்வமத ஒருமைப்பாடு நினைப்பது பெரும் பேதமை.

மகிடி வித்தை குறளி வித்தை என்று பல வித்தைக் காரர் நாம் கல்லூரியில் பயிலும் காலங்களில் கல்லூரியில் வந்து வித்தைகள் பல காட்டுவார்கள். [illegible] அவற்றை கண்டு அதிசயமுற்று பிரமிப்ப துண்டு. அ[illegible] உண்மை தான் என நினைப்பதுண்டு. ஆனால் நாள் போக அவை [illegible] என நினைந்தோம். சில சிறு தெய்வ வலாயங்களால் இவைகளை சிலர் நடத்தி பணம் சேகரிப்பதுண்டு.

இந்த நிலையில் நமது சமயத்திலும் பல குறளி வித்தைக் காரர் போல்வார் வந்துள்ளனர். பெரும் பாலும் தத்துவப் பேராசிரியர்கள் மடாதி பதிகள் சமயப் பிரசாரகர் தற்காலத்து குறளி வித்தைக்காரராக வந்துள்ளனர்.

ஏனென்றால் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள சமயப் பிரசாரகர் சமயம் போதிப் போர் அனைவரும் தாம் தாம் ஒழுக்கமுடன் தத்தமது சமய நெறிகளைப் பேண வகை தெரியாது அதனை நீக்கி விட்டு சர்வமத ஒருமைப்பாடு எனப் பேசுவது இதற்காகக் கருத்தரங்குகள் வைப்பது ஓர் கோழைமைத் தன்மை என்றே சொல்லலாம்.

சமய நெறிகள் யாவை என்றால் அந் நெறிகள் மூலம் இடம்பட ஒழுகி உண்மை நின்று இறைவன் பேரருட் திறம் பெறவேயாகும். ஆகவே ஒவ் வொருவரும் தத்தமது சமய ஒழுக்கங்களை நன்கு விளங்கிக் கொண்டு அதன் படி வாழ்ந்தால் தம் தம் அறிவில் திருவருள் பிரகாசம் தோற்றும்.

அதன் பின்னாக அவரவர் மேலோங்கிச் செல்லாகும். இவற்றை இறைவன் திருவடிக் கீழ் ஓங்கினர் ஓங்கினரே என சம்பந்தர் தெரிவிக்கின்றார்: சமயங்கள் சொல்லும் நெறிகள் யாவும் தவ நெறியைச் சார்வன. தவம் இல்லாத போது திருவருள் பேற்றை யாரும் பெறமாட்டார், குறளிவாலாயம் போல் சில பேறுகளை சில தேவதைகள் மூலம் சிலரால் பெறலாம். பெற்றவுடன் அவை தான் உண்மைக்குரியன என்று சொல்ல முடியாது. ஏன் எனில் தேவதை கட்கும் காலஎல்லை உண்டு. அவைகள் பிறப்பன, இறப்பன, பிரம்ம விட்ணுகளுக்கும் பிறப்பு இறப்பு உண்டு. ஆனதினால் பிறக்கும் இறக்கும் கடவுள் பேரால் தோன்றிய சமயங்களை பிறப்பு இறப்பு இவை நீங்கிய பரம் பொருளை நாடும் சைவ நெறிக்கு சமமாகப் பேசுதல் பேதமை. ஒவ்வொருவரும் தத்தம் நெறிப்படி ஒழுகுதலை வலி உறுத்துவது அறிவாளியின் கடமை! அது அல்லாது சமரசம் பேச முற் படுவார் தத்தமது சுய நலத்தை தற்பெருமையை புரட்சி மனப்பான்மையைக் காட்டிட எழுந்து கொள்பவரே.

சமரசம் பேச முற்படுபவர்களில் பெரும் பாலோர் மடாதிபதிகளாகவே இருக்கின்றனர். எனது அறிவுக்கு எட்டிய படி இன்று இருக்கும் மடங்களும் மடாதிபதிகளும் தத்தமது மடம் தோன்றிய காரணத்திற்கு முரணாகவே நடக்கின்றனர். ஞானிகள் உருவாக்கிய சமயங்களை இந்த மடங்கள் வந்து மிக மிக வேதனை தரும் வகையாக ஆக்கிவிட்டனர். அவர்கள் நடக்கின்ற செயலை நோக்கினால் பேதமை என்ற சொல்லில் அடங்காது தீங்குடைய நெறியே பொதுப் பட எல்லா மடங்களும் செய்கின்றன.

### ஆலய ஸ்தூபி சரியலாமா?

சந்திர தீபம் ஆசிரியர் அவர்களுக்கு

வண்ணை கதிர்வேலாயுத சுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம் சமீபத்தில் நடைபெற்றது. முன்னைய செட்டிமார் வைத்த வேலை எடுத்து விட்டு மூர்த்திகளை வைத்தது தவறு என சென்ற சந்திர தீபத்தில் எழுதி இருந்தீர்கள். அது உண்மை. இப்போது மேற்படி ஆலய மூலஸ்தான ஸ்தூபியே சரிந்துள்ளது.

அபிஷேகம் செய்த குரு மார்களோ தர்மகர்த்தாக்களோ இதை கவனியாது இருப்பது ஏன்? ஸ்தூபி இப்படி சரிந்து இருப்பதால் கும்பாபிஷேக பலன் எதுவும் இல்லை. நாட்டிற்கும் மக்களுக்கும் பெருந்தீமை. அபிஷேகம் செய்யும் குருமார் பரிசுத்தர்களாக இருக்காத தன்மையே இப்படியான தவறுகளுக்கு காரணம்.

இனியாவது இத் தவறை சீர் செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இப்படிக்கு
உண்மையுள்ள
பொ. சி. ராமகிருஷ்ணசர்மா

# பொன்றுகின்ற உடலை மெய்யென நம்பி பொழுது போக்காது உண்மை நெறிக்கு எழுந்து வாருங்கள் என்கின்றுர் சம்பந்தர்.

## ஆலயங்கள் எதற்காக உள்ளன.?

ஒரு கோயில் இருக்கின்றது. அதை யார் கட்டினுர்? கட்டியதன் நோக்கமென்ன? யார் அதை பரிபாலிக்கின்றுர்? அப்படியாக அக்கோவிலை பரிபாலிப்பார் என்ன பயன் பெறுகின்றுர்? எதற்காக அக்கோயில் வேண்டும்? இப்படியாக நமது சைவ ஆலயங்கள் பற்றி பல கேள்விகட்கு இடமிருக்கின்றது.

இந்தக் கேள்விகளை நாம் இங்கு குறிப்பிடுவதன் நோக்கம் பெரும்பாலும் நமது நாட்டில் கோயில் பற்றிய நுண்ணிய தெளிவு இல்லாதிருப்பதே இக்கேள்விகளை நாம் மக்களிடமே கேட்க வேண்டி இருக்கின்றது. உண்மையில் நம்சைவ மக்களுக்கு கோவில் பற்றிய நல்ல தெளிவு இருந்தால் பல வழியாலும் நன்மையான செயல்களை நாம் காணக்கூடும்.

மேலே நாம் தெரிவித்த கேள்விகட்கு நாம் விடைகாணுமுன் திருஞானசம்பந்தர் சுவாமிகள் திருக்கோடிகா என்னும் கோவிலைச் சேர்ந்து கொள்ளுங்கள் எனப்பாடியருளும் ஒர் தேவாரம் கீழே தருகின்றேன். இந்தப் பதிகத்தை நன்கு விளங்கிக் கொண்டால் கோவிலிற்கு செல்வதால் என்ன பலாபலன் கிடைக்கும் என்பதை யாரும் மிக நுண்ணிய அறிவால் விளங்கலாம். கோவில் இறைவனுடைய இடம். உயிர்க்குயிராய பெருமானுடைய இடம், அங்கு சென்று அக்கோயிலிற்கே தொண்டு செய்பவராக தொழுபவராக அமையுங்கள் என்பது கருத்தாகும்.

## கடவுள் உருவங்கள் உயிராவன

ஞானத்தின் உருவராய இறைவனை; உணர்ச்சிகளுக்கு எட்டாத பரம் பொருளை நாம் ஓர் உருவத்தில் மந்திர நியாசம் பிராணப் பிரதிட்டை முதலிய ஆகம விதியால் தாபித்து அவர்க்கு நித்தலும் நீங்காத வகை பூ நீர் விளக்கு தூபம் திருஅமுது முதலியனவற்றுல் மந்திர முறையால் வழிபட்டு வருகின்ற இடமே கோவில்.

இந்த வழிபாட்டு முறைகள் நல்நெறியாக வாய்மையாக கபடமிலாததாக வர வர அங்கு அருளின் பெருக்கம் நிறைந்து கடவுள் கண்ணுல் காணும்படியான நிலையில் தோற்றுவார். இப்படியான புதுமைகள் அற்புதங்கள் நிறைந்த பலகோவில்கள் நம்நாட்டில் முன்பிருந்தே பல உள.

இப்பத்திரிகையில் காணப்படும் கதாஉபநிடத வாக்கியத்தைக் கவனித்தால் அதில் எவ்வளவோ உண்மைகள் நமது கூற்றுக்கு ஆதாரமாகக் காணலாகும். இந்தவகை உண்மை நிலைக்குரியதாக நம் கோவில்கள் இருந்தன.

நீளவும் நமது தீபத்தில் கோபுரம் பெரிதல்ல கொடிமரம் பெரிதல்ல சித்திரத் தேர் பெரிதல்ல ஆனுல் அங்கு நிகழப்படவேண்டிய பூசை ஒழுங்குகளே பெரிது. இறைவன் அளந்தறிய முடியாதவன். காண்டற்கரியவன். அவனைத் தாபித்த இருப்பிடத்தில் ஏதும் ஒரு பேச்சுக்கு ஒரு வசைவார்த்தைக்கு இடமில்லாத படி பூசைகள் நடப்பது மிகப் பிரதானம.

## ஆண்டவனை அர்ச்சிப்பார்க்கு ஒழுங்கு யாது.

அந்தப் பூசை நிகழ்த்துவோர் முதல் தான் என் செய்கிறேன் எதற்கு செய்கிறேன் இதனுல் என்ன பலாபலன் எய்தும் என்றதை விளங்க வேண்டும். இதை சாட்டுக்காக கடமைக்காக சம்பளத்திற்காகச் செய்வதெனின் அதைச் செய்யாமல் விடல் நன்று.

ஆகமங்கள் இறைவனுடைய கோவிலைப் பூசை புரிவார் இன்ன இன்ன ஒழுக்கமுடையவராக இருக்கவேண்டுமெனச் சொல்லின. இந்த நல் நிலையில் அந்தணர்கள் அர்ச்சகர்கள் ஒழுகி வருகின்ற பொழுதுதான் அவர் வழிபாடு நற்பயன் தரும். அது இல்லாத பொழுது அவை பயன் தராது பதில் துர்ப்பயன் தந்து நிற்கும். இதனுலே நாட்டில் மிகு மோசமான பழிபாதகப் பெருக்கம் காணப்படும், இளைஞர்கள் நல்ஒழுக்கம் கெடுவர். பெண்கள் கற்பு நெறி தவறுவர். எந்த ஒரு வீட்டிலும் சாந்தி இருக்காது. எல்லா இடமுமே ஒரு அமைதியிலாத நிலை காணப்படும். ஆனுல் ஒழுங்கான நடத்தையுடைய பிராமணர் பூசை பண்ணும் சுற்றுடலில் ஓர் சாந்தத்தின் அடிப்படையில் நிலவும் நற்செயல்கள் நிலவிடும்.

முதலாவதாக நான் என் செய்கின்றேன் என்பதை அந்தணர் தாம் உணர்ந்து தாஞக தெளிவு கொண்டு நடந்தால் அன்றி யாரும் அவரை நீர் இப்படிச் செய்யும் என்று சொல்லிட அவர் செய்யப் போறவர் அன்று. எந்த ஒரு கோவிலிலும் தாம் ஊக்கப்படாமல் பிறர் ஒருவர்க்கு ஊக்கம் வருவிக்கமுடியாது. அல்லது அருள் நிலை வருவிக்கமுடியாது. அவரவர் தமது நல் ஒழுக்கத்தால் தான் தவநெறியை அடைய முடியும்.

ஆதலினுலே தான் தவம் செய்தல் வேண்டும் தவநெறி தழைத்தோங்க வேண்டும். என நாம் முன்னர் வலி உறுத்திேைம், எமது சைவநெறி தருமம் தவம் இரண்டிலும் அடிப்படையாகக் கொண்டது! கடவுளே தவம் செய்கின்றுர் என தவநெறிகள் சாதிக்க வல்லான் தன்னை என்று கூறினர் அவரவர் தமது நல் ஒழுக்கத்தால் நல்ல சிந்தையால் தான் ஓர் அந்தணர் இறைவனுக்குச் செய்யும் தொண்டினை உணர்ந்து அதன்படி ஒழுகி வரமுடியும்.

## செயலும் சிந்தையுமே உயர் குலம்.

ஆகவே ஒருவர்க்கு நல்ல சிந்தை எப்படி வருகிறது என்றது கேள்வி. நல்ல சிந்தை நல்ல நெஞ்சம் இவை யாவும் குலத்தின் தொடர்யுடையதாக தொழிலின் தொடர்புடையதாக இருப்பது என அறிஞர் நிச்சயித்தனர். இந்த குலம் எப்படி வந்தது என்றுல் அறிவு செயல் இவற்றுல் வந்தது. அறிவும் செயலும் ஒன்றை ஒன்று தொடர்புடையன. அறிவுக்கேற்றது செயலாக அமைந்தது.

உதாரணமாக ஒருவர் தன் அறிவில் எட்டியதையே செய்கின்றுர், அல்லது செய்விப்பார். இது எல்லார்க்கும் பொதுவாக உளது.

ஆனுல் எல்லாச் செயலிலும் மேலானதாக: இறைவனுக்குச் செய்யும் தொண்டை சிறப்புடைய தொழிலாக எம்முன்னேர் உணர்ந்தனர். அதனுலே "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும். ஆனுல் சிறப்பு ஒவ்வாது செய்தொழில் வேற்றுமையால் என்று திருக்குறளில் வள்ளுவர் எப்பவோ மொழிந்து விட்டார்.

வள்ளுவர் நெசவாளர் குலத்தில் தோன்றினும் உண்மை நிலையை அருளால் உணர்ந்து அப்படியே எடுத்து மொழிகின்றுர். எப்படி எல்லாரும் பிறப்பில் ஒன்று தான், இரண்டு காலும் இரண்டு கையும் படைத்தவர் யாரும் ஒன்று தான் அவரில் பெரிது சிறிது பார்ப்பது பேதமை. ஆனுல் செய்யும் தொழில் பற்றி சிலரை சிறப்பாகக் கொள்ள வேண்டும் என்கின்றுர்.

இதனுலே தான் அந்தணர்களை குலத்தால் உயர்ந்தவர் என்றுர்கள், எது பற்றி என்றுல் செய்யும் தொழில் பற்றி வந்தது என்பதாகும். அந்தணர்களிலே ஓர் சிறப்பு உண்டு அது யாகம் செய்தல் அக்கினி காரியம் எனப்படுவது. இது ஏனையோர்க்கு இயலாது. ஆதலினுல் அவர்களை மேலான சிறப்புடையவர் என்று திருஞானசம்பந்தருமே தமது ஒரு தேவாரத்து பறப்பைப் படுத்து எங்கும் பசு வேட்டு எரி ஒம்பும் சிறப்பர் என்றுர். இதை இன்று புண்ணிய பூமி என்ப் போற்றப்படும் பாரதத்திலும் யாரும் நன்கு தெளிவாக உணர்வாரோ தெரியாது?

## சிறப்பான செயலுக்கு பொருளாதாரம் எப்படி?

இத்தகைய சிறப்பான செயலிற்கு பொருளாதாரம் பிச்சை என்றே பெரியோர் மொழிந்தனர். இந்த யாகம் தான் உலகை அப்படியே தன் கைவசத்தில் வைத்திருக்கும் ஆற்றல் உடையது எனவும் கலி கடியும் வன்மை படைத்தது எனவும். துயர் நீக்கி அருளின் கரைசேர்ப்பது எனவும் பெரியோர் வலி உறுத்தினர். கதா உபநிடதம் காண்க.

மேற்கு நாடுகள் விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் பெருமளவு முன்னேறின. தம் சாமர்த்தியத்தின் எல்லையில் நின்று பெரும் ஆக்கிரமிப்பைச் செய்தன. பெரும் வெற்றி கண்டோம் என பிரமித்தன. வீரம் காட்டின. பல நாடுகளை ஏன் எமது புண்ணிய பூமியைக் கைப்பற்றி எமது தூய வேத வழக்கங்களை நாசஞ் செய்தன. ஆனுல் இன்று உலகின் அழிவிற்கு வகையாக அவரது விஞ்ஞானம் வந்து விட்டது. இனி ஒரு யுத்தம் ஏற்பட்டால் மேற்கு நாடுகளில் புல் பூண்டு தானும் மிஞ்சுமோ என்ற வகையில் அஞ்சுகின்றனர். இத்தகையதாக மேற்கு நாடுகளின் விஞ்ஞானம் அழிவின் எல்லையில் கொண்வந்து விட்டபடியால் நமது முன்னைப் பெரியோர் மேற்கு நாடுகளில் வாழ்பவரையும் தூர கிழக்கு நாடுகளில் வாழ்பவரையும் மிலேச்சர் என ஒரு சொல்லால் சொல்லி இவர் செயலில் ஏதும் வியத்தக நலன் இல்லை எனக் கண்டு அவரை தாழ்ந்த குலத்தவர் என கூறிவிட்டனர். கந்தபுராணம் அண்டகோசப் படலம் எமக்கு இதற்கு தக்க சான்று பகருகின்றது.

இவையன்றி சமீபகாலத்தில் வாழ்ந்த பெரியாரும் மேற்கு நாட்டாரின் செயல் பெருமை அற்றது என வலி உறுத்தி உள்ளனர். யோகசுவாமி ஒருகால் என்னை நோக்கி வெள்ளைக்காறன் தான் கண்டுபிடித்த இயந்திரத்தால் அவன் அழிவுறுவான். நீ என்ன செய்யப்போருய் என என்னைக் கேட்டார். அன்று அவற்றை நான் கிரகிக்க முடியவில்லை. இன்று விளங்குகின்றது.

## சைவ சீலங்கள் மரணத்தை வெல்வன.

இதனுலே பாரதத்தில் வாழ்ந்த அறவோர் புண்ணியத்தின் செயலான தெய்வ நம்பிக்கையின் உறுதியில் நின்றபடியால் அந்த உறுதியின் பெருமையால் மரணத்தைக் கடந்தனர். இந்த வகையான ஒரு செயலை நாம் சிறப்புடையது எனுமல் விடலாமோ?

இந்த மரணத்தையும் வெல்லும் நிலைக்கு ஏற்ப அமைந்தன தான் யாகம் நியாசம் பூசை செபம் தியானம் முதலியன என்பதை நன்ருக விளங்கினுல் எமது சைவநெறியின் சிறப்பு விளங்கிடும்.

இந்த ஒரு நிலையைத் தரவல்லது யாது என்றுல் அது தான் தவம் என்றதாகும். இதனுலே தான் தவம் செய்வார் தம் கருமம் செய்வார் மற்று எல்லாரும் அவம் செய்வார் ஆசையுட் பட்டு என திருவள்ளுவர் சொல்லி உள்ளனர்,

இதனுலே மேற்கு நாடுகளின் செயல் யாவும் அவத்தின் வகையாக வந்தன. அவை ஒன்றுமே தவத்தின் வகையிலாதன. ஆனுல் நமது கோவிலில் அந்தணர் செய்யும் செயலும் நாம் சென்று வழிபடுதலும் தவத்தின் இயல்புடையன.

ஆதலின் தவத்தின் உயர்வில் தான் குலத்தின் உயர்வும் சிறப்பும் வந்தன. இதை பலர் இன்று உணர்வதில்லை. ஆகவே கோயிலில் ஒழுங்கான செயல் மூலம் தான் தவநெறியை அடைய முடியும்,

## உயர்ந்த குலம் இன்று என் செய்கின்றது.

இதை விடுத்து தவறான வழி நடந்து கொண்டு தாம் அப்படி நடக்கவில்லை என பல பொய்யும் சொல்லிக் கொண்டு; காடைத்தனத்தையும் ஊக்குவித்துக் கொண்டு; காடையருடன் தர்ம் கலந்து கொண்டு கண்டபடி கோயிலில் கட்டுப் பாடிலாது மதிப்பிலாது பயபத்தி இலாது அசுரரைப் போன்று நடக்க முற்பட்டால் இது தவ நெறியோ? இதற்கு முதல் விளக்கம் பிராமணரே தரட்டும்.

பிராமணர்கள் இன்று மிலேச்ச நெறியையே தவநெறி எனக் கொள்கின்றனர். அப்படித் தாங்கள் செய்ய வில்லை தாம் வேத நெறிப் படியே ஒழுகின்றோம் என்று இலங்கையில் வாழும் எந்த ஒரு பிராமணராகிலும் நீரூபித்து காட்டட்டும்.

பிராமணர் பிழையாக நடக்கின்றனர். மிலேச்சரது வாழ்வே சொர்க்கம் என்கின்றனர். அதற்காகவே தம் வாழ்வை அமைத்துக் கொண்டனர். நாம் எம் தீபத்தில் இவர்களது வழி வேத நெறிக்குரிய ஒழுக்கங்களாக இல்லை தவறாக நடக்கின்றார் என்றால் நமக்கு பைத்தியம் எனக் கூறிவிட்டு தம் தம் பிழைகளை இன்னமும் காடைத்தன மூலம் மிகைபடச் செய்கின்றனர். இவை உயர்ந்த குலத்தின் செயலாமோ?

## பிராமணன் என்ற சொற்பதம் யாது?

அகிம்சை என்ற சொல் ஒன்று இருக்கின்றது. அதுவே வேத காலம் தொட்டு நம் நாட்டில் அந்தணர் ஒழுகும் மார்க்கததில் முதலாவதாக எண்ணப்பட்டு வந்தது. இதை இன்று பிராமணர் யாரேனும் தங்கள் வாழ்வில் அறிவாரோ? அப்படி இருந்தால் ஒரு பிராமணர் எனக்கு இதை வெளிப்படையாக தான் கடைப் பிடிக்கிறேன் எனக் காட்டட்டும்.

பிராமணன் என்ற சொல்லின் கருத்து என்ன? பிராமணன் என்பது பிரமம் அல்லது பிராணன் என்பதை உணர்பவன என்பது பொருள். அதாவது தான் உடம்பன்று உயிர் என்ற நீங்காத நினைப்பில் ஒழுகுபவன் என்பது பொருள். தைத்திரியம் முதல் பல உபநிடதங்களின் பொருள் இதுவே யாகும். ஆதலினாலே பிரம்ம வித்தையில் நாம் உடம்பன்று உயிர் தான் என்ற கொள்கையில் யார் ஒரு பிராமணர் இருக்கிறார்? ஒருவரும் இலர். அப்போது இவர்கள் தங்களது உயர்வை தாமே கெடுத்துக் கொண்டு ஐயாமாரே எங்களது அருமந்த வேத நெறியை கோயிலை உமது தவறான ஒழுக்கங்களால் பாழ் படுத்தி விட்டீர்கள் என்றால் அதற்கு நான் சொல்வது தவறு எனக்கு அடிக்க வேண்டும் என்று இல்லாத பல பாதகங்களை இன்னமும் செய்வதா?

இன்றைய பிராமண சமுதாயம் தங்களை உணர்ந்து தங்கள் நெறியை உணர்ந்து வாழ இனியும் தலைப்படா திருந்தால் எமது சைவ நெறி பாழ்படும். வேத கால ஒழுக்கம் அற்று விடும். வேதம் ஆகமும் இவை அழியும். கோவில்களில் தெய்வம் இராது. கோவில் கூத்து மேடையாகும். கோவில் போய் கும்பிட்டு யாரும் பயன் அடையார். கோயில் என்றால் அது காடையர் காவாலிகளின் தங்கு மடமாகும். இதுவே நம் சமய நிலை. இதை இல்லை என்று வேத ஆகம உணர்வுடைய எவரும் சொல்லமாட்டார்.

## கோயில் தவறை எடுத்துப்பேச மக்கள் பயம்.

எல்லா மேன் மக்களுடைய உள்ளத்திலும் நமது கோயிலின் அவல நிலைகளையும் அந்தணர்களது நீதியற்ற ஒழுக்கங்களையும் விளங்கினும் வெளிப்படச் சொல்லப் பயந்தே உள்ளனர். பயப்படுவதற்கு பல காரணம் உள. ஒன்று கோவில் நிர்வாகம் பலவும் வேத நெறி விளங்காமல் இருக்கின்றவர்கள் கையில் உள்ளன, பெரும் பாலான கோயில் நிர்வாகத்துள்ளார் கோயில் சொத்துக்களில் தாம் சீவிப்பவராக இருக்கின்றனர். ஆதலினாலே கோயில் என்பது தம் வாழ்விற்குரிய வியாபார இடமாக அமைந்தது என எண்ணி நடக்கின்றனர்.

இவர்கள் கோயில் சொத்தில் வாழ்வை நடத்திட யாவரும் பாவிகளாயினர். ஆதலினால் பாவிகளான உடன் கூசாமல் கோவில் சொத்தை தாம் திருட கோயில் சொத்தைவிற்க இப்படி பல பாதகங்களைச் செய்கின்றனர். ஆகவே இவர்கள் கொலை முதலிய பாதகச் செயலையும் தம் கோயில் தீய நடத்தை பற்றி பேசினால் செய்வேன் எனத் துணிந்திட அதனால் மக்கள் சோலிக்குப் பயந்து நடக்கிறது நடக்கட்டும் எனப் பேசாதிருக்கின்றனர்.

இன்னுமொரு காரணம் கோயிலை நன்மை பெற நடத்தும் படி பிழைகளைச் சுட்டிக் காட்டி இவை கோயிலில் நடைபெறல் நன்றல்ல என்றால் நிர்வாகம் காடைத்தனத்தை ஊக்கி திருத்தம் வேண்டுவார்க்கு உடல் தீங்கு செய்யவும் முனைகின்றது. கோவிலில் என்ன நடந்தாலும் யாரும் அதைப்பற்றி பேசமுடியாது என்ற முரணான கொள்கையில் நிர்வாகம் உளது:

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயில் துர்க்கை அம்மன் கோயில் இதற்கு தக்க சான்றாக விளங்குகின்றன. இந்த நிர்வாகங்கள் தமது அநீதிகளைப் பாது காக்க தொண்டர் படை என்ற போர்வையில் காடைத் தனத்தையே பாதுகாப்பாகக் வைத்திருக்கின்றனர்.

## தொண்டர் என்றால் யார்.

தொண்டர் என்பஅவரின் செயல் யாது? கோவிலில் என்ன செய்வது தொண்டு.? இதைத் தெரியாதவர் தொண்டர் படை என அழைக்கப் பட்டால் இத் தொர்ண்டர் படையால் சைவ நெறிக்கே அவமானமாகும். இவர்கள் வன் செயல் கட்குரியராகி காடைத்தனம் மிகுந்தவராக இருக்க நாம் இவரை ஒரு போதும் தொண்டர்படை எனச் சொல்லோம். தொண்டு என்பது அகிம்சையின் அத்திவாரத்துள்ளது.

பெரிய புராணத்தை ஒருவர் நன்றாக விளங்கிக் கொண்டால் தொண்டு செய்வார் எப்படி இருந்தனர்.? தொண்டு செய்வார் மன நிலை எப்படி இருந்தது என்பதை நன்கு விளங்கிடலாம் உதாரணமாக மூர்த்தி நாயனார் திருஆலவாய் ஈசனுக்கு நித்தலும் சந்தனக் காப்பிடும் தொண்டு புரிபவர். அவரது தொண்டினை தடை செய்ய வஞ்சக மனத்துடன் அரசனே பல வழியிலும் முற்பட்டு எல்லையிலாத பலதுயரம் செய்யவும் தன் பணியை தான் தவறின்றி செய்து வந்தார். முடிவில் அரசன் அவர் பணி நீடிக்கா திருக்க சந்தனக் கட்டை விற்பனையைத் தடுத்தான். அவர் என் செய்வார். உடனே சிந்தை நொந்து தனது முழங்கையை சந்தனக் கல்லில் வைத்துத் தேய்த்தார்! இவரது மனப் பாங்கு எப்படி? இதை யார் இன்றைய தொண்டு செய்வார் உணர்வார்.

இன்று தொண்டர் படை என்பவர் ஒலி பெருக்கி பாடுவார் லயிற் அடிக்கிறவர் கோபுரம்மேல் ஏறுபவர் இவர்களாக இருக்கின்றனர். இவர்கள் தொண்டர்கள் அல்ல இவர்கள் பலரும் மிண்டர்கள். இவர்கள் பலரும் காசுக்காகச் செய்கின்றவர். அத்துடன் தமது நாட்டாண்மையைக் கோயிலில் காட்டச் செய்கின்றனர்.

பெரிய புராணத்தை எடுத்துக் கொண்டால் தொண்டிற்கு கோயிலில் ஏதும் வருமானம் கேட்கப் படவில்லை. இன்று தொண்டு செய்வது என்றால் அதற்கு கொண்டு வா காசு என்கிறார். உதாரணமாக எல்லாக் கோயிலிலுமே விளக்கெரிக்க காசு பூமாலைக்கு காசு அர்ச்சனைக்கு காசு இவை நடக்கின்றன. இவையாவும் மீண்டு (வாஞ்சை) பண ஆசையாகவே வந்துள்ளது. ஆகவே இன்று எல்லா விடமும் தொண்டிற்கு இடமிலாது போயது. உண்மையான தொண்டிற்கு மதிப்பில்லை. போலிகட்கு நல்ல மதிப்பு.

## தீய செயலை பாதுகாக்க காடைத்தனம்-

ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவிலில் பெரிய புராணம் படித்தோம், அப்பொழுது அங்குள்ள ஐயர் நாம் இருக்கும் இடத்தில் தண்ணி ஊற்றி வைப்பார். ஒரு நாள் ஐயர் மகனிடம் இதைச் செய்யாதையுங்கள்! ஏன் பெரிய புராணம் படிப்பது விருப்ப மில்லையோ எனக் கேட்டேன். அடுத்த நாள் அந்த இடத்தில் தண்ணி குளம் போல நின்றது. அன்றுடன் நான் அக் கோவிலுக்கு போவதை நிறுத்திக் கொண்டேன். இந்த ஐயர் அதன் பின்னர் கோவில் அருகாமையில் ஓர் சாலை மண்டபத்தில் மது அருந்திய வெறியில் கூடும் பல மக்களுடன் கதைத்துக் கொண்டு சந்தோஷமாக இருப்பார். இரவில் பொழுது போக்கு அப்படித்தான். இவர்க்கு நல்லை ஆதீன பரமாசாரியர் பிரதிட்டா இரத்தினம் எனப் பட்டம் கொடுத்தார்.

ஆதலின் பெரியோரே இத்தகைய ஐயரையும் ஆதினத்தையும் சைவ நெறியில் எதுவாகச் சொல்வது. இது சைவ நெறி என்று சொல்லப் பெற்றால் இதை விடப் பொது அறிவுடன் கூடிய இரண்டு காலும் இரண்டு கையும் படைத்த மனிதப் பிறவிகட்கு அவமானம் வேறு இருக்குமோ?

உண்மையாக இன்று பிராமணரும் பிரசாரகரும் பஞ்சமா பாதகங்களையும் கூசாமல் செய்து கொர்ண்டு இறுமாந்து நிற்கும் நிலை வேறு எந்தச் சமய நெறியிலும் காணப் படவில்லை.

## நமது சமய உண்மைகளை மேல்நாட்டார் மதிக்கின்றனர்.

சென்ற சுடரில் எமது கட்டுரைகளைவாசித்து உணர்ந்து கொண்ட ஓர் அன்பர் நம்மிடம் ஒரு நாள் சேர் ஆனந்தக் குமார சாமியின் சீடரான மேற்கு தேசத்தைச் சேர்ந்த ஒருவராகும் ஓர் ஆங்கிலேயர் எழுதிய நூல் ஒன்றைக் கையில் எடுத்து அதில் உள்ள தாற் பரியத்தை அப்படியே வாசித்து நீங்கள் சொல்வதை அப்படியே ஆங்கிலத்தில் சொல்கின்றார். நீங்கள் இப்புத்தகம் வாசித்து இருக்க மாட்டீர்கள் என்று கூறி எங்கள் சமய நெறியை ஆங்கிலத்தில் எவ்வளவு சிறப்பாக போற்றுகிறார்கள் என்றார். ஆகவே உங்கட்கு இந்த அறிவு எப்படி வந்தது என நான் சிந்திப்பதுண்டு எனக் கூறிட அப்போது நான் சொன்னேன் ஐயா நன்மை தரும் அருள் நெறி மாசு பட்டுப் போகும் நேரம் அதை எடுத்து தவறுகளைக் காண்பித்து நல்ல நெறியில் வைத்திட முயல்வது முத்திக்குரிய வழியாகும். இதை விடச் சிறந்த பணி வேறில்லை, கோயில் கட்டுவது சுலபம். அக் கோயிலில் அருள் நெறி விளங்கிடச் செய்வதென்றால் மிகக் கடினம். ஐயோ பிராமணனும் பிரசாரப் பேதையளும் அடங்காப்பிடாரி போன்ற பெண்களும் கோயிலில் அருள்நெறியைப்பாழாக்கி விட்டனர்,

அருள் நெறி கோயிலில் விளங்கினால் அங்கு வன்செயல் இராது, வேடிக்கை கேளிக்கை இராது, தன்னையறியாது சாந்தி நிலவும். தீயவரும்அங்கு சென்றால் நல்லவராவார். கற்பழிப்பு மதுவுண்ணல் முதலியன நிகழாது. இப்படி ஒரு நல்நிலை கோயிலில் எப்படி வரும். கோயிலை நன்நெறிப்படி நடத்தினால் தான் அருள் வரும் என்பதை மக்கள் உணரவேண்டும்.

## சம்பந்தர் இன்று இருந்தால்.

உண்மையில் திருஞான சம்பந்தர் இன்று இருந்தால் இங்குள்ள ஒரு கோயிலை இறைவன் இருப்பிடம் என்று சொல்லார். ஒரு பிராமணரை இவர் பிராமணர் என்று சொல்லார். ஏனென்றால் தகுதி யிலாரை தகுதி உடையவர் என்று எந்த ஞானியும் சொல்லார்,

மறை ஞான ஞான முனிவன் என்று சம்பந்தர் தன்னைச் சொல்லுகின்ற போது அவரின் ஞானம் வேதத்தின் வழி வந்தது, அதை இன்றுள்ள எந்தப் பிரமணர்க்கும் தெரியாது, இந்தியாவில் உள்ள பிராமணர்க்கே தெரியாது. எல்லாவற்றிற்கும் ஆமாசெய்யலாம் என்று ஆமா போடும் பிரபல சாஸ்த்திரிகட்கே தெரியாது. ஞானம் என்றால் இன்றுள்ள சாஸ்த்திரிகள் ஆரிடம் 50 ரூபா கூட வாங்கலாம் என்பதே ஞானம் என நினைப்பர். ஐயோஇன்று சைவநெறியில்

பிராமணர் செய்த பழியில் நின்றும் தமிழ் நாட்டைத் தூக்கிமேலெடுப்ப தென்ருல் அது முடியாத காரியம்.

பிராமணர் இன்று தம் பிழையை ஒரு போதும் உணராள். அவர் சாதியில் கெட்டு விட்டான். அவர் குல கோத்திர ஒழுக்கம் தவறிட பிரசாரம் அதை ஆதரித்து பேசிட கள்ளக் கடத்தல் பிரசங்கிப் பேதையால் சமய நெறியில் என்ன திருத்தம் காண முடியும்? எந்தக் கழகம் எந்தசபை எந்தச் சோம்பேறிச் சமயம் வளர்க்கும் சபைகள் மன்றங்கள் நல் நிலை காண முடியும்!

## வேதநெறி தழைத்தால் சைவம் ஓங்கும்.

நமக்கு எல்லா விடத்தும் வேதத்தின் நெறிக்குரிய ஒழுக்கம் மிக வேண்டும் என்பதே கோரிக்கை. வேத நெறியை மாற்றினுர் மாற்றப் பார்த்திருந்தார் அனைவரும் துயருறுவர், அவர் சந்ததி கெடும், அவர் பிள்ளைகள் காடையராகவும் மது அருந்து வோராகவும் வியபிசாரம் முதல் துர்நடத்தை உடையோராகவும் இருப்பர். இதை இன்று எல்லா விடமும் காண்கின்ருேம். இவர் சந்ததியில் பாவிகள் உற்பவித்து அதனுலே தமிழினம் நாளடைவில் சீர் கெட்டு நிலையற்று பாழ்பட்டுப் போகும்

கோயிலில் வேத நெறி தழைத்தால் நாட்டில் மக்கள் சற்புத்திரரை வீரரை நீதி உடையரை புத்திரராகப் பெற்று அதனுலே நாட்டில் எங்கும் சுபிட்சமும் நன்மையும் சுதந்திரமும் விளங்கும், மனிதன் தன் பிறவியின் பேற்றை அடைவான். இங்கு யாம் மேற் சொல்லிய உண்மை நிலைகளை உணர்ந்து பிராமண சமுதாயம் திருந்தி இனி பிரசாரம் பிரசங்கம் வில்லிசை முதலிய அபகாரச் செயல்களைச் செய்யாமல் இறைவன் இருப்பிடத்தில் ஏமாற்றத்திற்கும் பொய்க்கும் இடமளிக்காது உண்மை நெறி கடைப் பிடிப்பது எம்யாவருடைய கடமையுமாகும்.

வழிபாட்டு இடங்களில் உண்மை இருந்தால் தான் வழிபடச் செல்வோர் நன்மை பெறுவார் இல்லாது இருந்தால் பெரும் துயர நிலையையே வழிபடுவோர் பெறுவார். இன்றைய தமிழினத்தின் அவல நிலை இதற்கு தக்க சான்று. வழிபாட்டு இடங்களில் உண்மைக்கு இடமின்றேல் நாட்டில் துயரமே பெருகும் என்பதை சிவன் மேல் ஆணையிட்டுச் சொல்கின்ருேம்.

### இன்றுநன்று நாளை நன் றென்று நின்ற இச்சையால்
### பொன்று கின்ற வாழ்க்கையைப் போகவிட் டுப்போ துமின்
### மின் தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
### கொன்றை துன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே,

இன்றைக்கு நல்லாய் இருக்கின்றது இதைவிட நாளை என் நிலை இன்னும் நன்ருக இருக்கும் என மனதில் கொண்ட இச்சையால் நீவிர் உமது மரணத்துடன் அழியும் இந்த வாழ்வை விட்டு எழுந்து நல்வழி தேடிக் கொள்ளுங்கள். எப்படி எனின் மின்னல் போல் மிளிரும் சோதிவடிவானவன் வெண்பிறையும் விரிந்த கங்கை நீரும் சடைமீது கொண்டவன்: அவன் இருக்கும் கோடிக்கா என்னும் சிவ தலத்தைச் சேர்ந்து கொள்ளுங்கள்.

வாழ்க்கை எப்பொழுதும் நன்று போல இருக்கும்: இன்று நன்ருயிருந்தால் நாளையும் நன்று என்று நினைப்பது இயல்பு. இந்த இயல்பில் நம் வாழ்வின் பிடியில் இருந்து விலகமுடியாது இருக்கின்ருேம். இது நீள வருகின்ற போது நன்றென நினைந்த நாளை தீதாக வந்து அன்று நோயாகி நீங்காது பின்னர் அதுவே பொன்றச் செய்து மரணமாகிறது. மரணத்தின் பின் நாளை நன்ருே தீதோ என்ற நினைப்பு வராது. ஆதலினுல் வாழ்வு பொன்றிடுதல் முடியாதலின் அதனை உணர்ந்து எம்பிரான் சிவன் ஒளியுடையவனைச் சேருங்கள் என்கின்ருர்.

ஒளி உடையவனைச் சேருங்கள் என்றது எதற்காகவெனில் மரணத்தின் பின் ஒரே இருள்சேரும்: அந்த இருளில் ஒன்றுமே தெரியாது. உணர்ச்சிகள் அற்று விடும். ஆனுல் எம் கடவுளைச் சேர்ந்து கொண்டால் பிறப்பு இறப்பு இல்லாத பெருமானுடன் ஒன்ருகி நீரில் உப்பு கரைந்தாலும் உப்பாயிருக்கும் தன்மை போன்று விளங்கி அழிவைத் தாண்டி விடுவர்.

ஆதலினுல் வாழ்வின் அபாயத்தையும் அபாயத்தூடாகத் தப்பும் வழியையும் சொல்லப் பெற்றது கோடிக்காவு சேர்மினே எனக்கூறியது. கோடிக்காவில் சென்று எம்பிராற்கு செய்யும் பணியால் தொண்டினுல் அவரை அடையலாம் என்றபடி. 1

### அல்லல் மிக்க வாழ்க்கையை ஆதரித் திராது நீர்
### நல்ல தோர் நெறியினை நாடுதும் நடமினே
### வில்லை யன்ன வாணுதல் வெள்வளை யொர் பாகமாம்
### கொல்லை வெள்ளை யேற்றினுன் கோடிகாவு சேர்மினே.

அல்லல் மிகுந்த இந்த வாழ்க்கையை ஆதரித்து இது நன்று என்று இன்னமும் நீர் இராது நீங்கள் நல்ல ஒரு நெறியினை நாடிக் கொள்ளும். எல்லாரும் எம்முடன் நடவுங்கள்: வில்லை ஒத்த அழகிய நெற்றி உடன் வெள்ளை வளையல்கள் அணிந்த பெருமாட்டியைப் பாகமாக வைத்தவன்; கொல்லை நிலத்தில் தன் இரைதேடும் வெள்ளை இடபத்தின் மேல் வாகனமாக ஏறியவன் அவன் இருக்கும் கோடிகா என்னும் சிவதலத்தைச் சேருங்கள்

அல்லல் மிகுந்தது வாழ்வு. அவை தீர கோடிகா சேர்வோம் என்ருல் கோடிகா சேர்வதின் புண்ணியம் சொல்கின்ருர். கோடிகாவில் சேர்வது ஏமாற்றப் பட: தேவையிலாத காட்சி காண பிரசங்கம் கேட்க வில்லுப்பாட்டுக் கேட்க என்ருல் இவை புனிதமாமோ? எல்லாரும் கோடிகாவில் போய் சிரித்து விளையாடி கூத்தாட என்ருல் கோடிகா ஏன் போவான்?

வீட்டில் இருந்தாலும் இவை செய்யலாமே? வீட்டில் இருந்தால் அது அல்லல் மிக்க வாழ்வு அதை விடுத்து கோயிலிற்கு போவோம் என்ற திருஞானசம்பந்தர் இன்றிருந்தால் திருக்கேதீச்சர திருப்பணிச்சபையார் செய்யும் சிவராத்திரி விழாவைப் போய்ப் பார்த்தால் நிச்சயமாக அல்லல் மிக்க வாழ்க்கை விட்டு அங்கு போக வேணும் என நினைவாரோ? தயவு செய்து யாரும் தெளிவு படுத்துவீரோ?

அல்லல் மிக்க வாழ்க்கை என்றது இல்லத்து மனைவி மக்கள் சுற்றம் பொருள் பொருளின்மை கடன் வாகனம் வீடு உபசரிப்பு விருந்து கலியாணம் மரணச்சடங்குகள் தொழில் இவை பலவும் நிறைந்தன. இவைகளால் நிறைந்த ஒரு போராட்டத்தால் வரும் துயரம் அளப்பில ஆனதால் இவை விடுத்து கோயில் போய் தொண்டு செய்வதென்ருல் திருப்பணிச்சபை அதிகாரம் ஒலிபெருக்கி இடைஞ்சல் பிராமணனது ஏமாற்றம் காடைத்தனம் பிரசாரமென்ற போர்வையில் ஏதும் நன்மை தராத புகழ்ந்துரை புனைந்துரைப் பேச்சுக்கள் நிகழ்ந்தால் வீட்டிலும் பார்க்க கோயில் அல்லல் மிக்க வாழ்வாக அமையாதா தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். 2

### துக்க மிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்து நீர்
### தக்க தோர் நெறியினைச் சார்தல் செய்யப் போதுமின்
### அக்கணிந் தரைமிசை யாறணிந்த சென்னிமேல்
### கொக்கிற கணிந்தவன் கோடிகாவு சேர்மினே.

நோய் சஞ்சலம் வறுமை பகைமை மதிப்பின்மை முதலியன பெருகும் துக்கம் மிகுந்த வாழ்க்கையில் உமக்கு நேரும் மனச்சோர்வினை விட்டகன்று இவை இனியும் எய்தாவகை தக்கதான ஓர் மார்க்கத்தை நாம் நாடிப் பெற்றுக்கொள்வதற்கே போங்கள்: அதற்காக என்பின் மாலை திருவரையின் மீது அணிந்து மேலாகச் திருச்சடைமீது கங்கை ஆறு அணிந்து அதன் மீது கொக்கின் இறகு அணிந்த கடவுளின் கோடிகாவைச் சேர்ந்து கொள்ளுங்கள்.

வாழ்வு துக்கம் மிகுந்தது என்பது தெரியுமே! தெரிந்தும் அந்தச் சஞ்சலத்தை நீங்கற்கு வழி தேடி போவது அறிவுடையார் செயலே! ஆனினுல் அவ்வழியைச் சார நீங்கள் போங்கள். போவது எங்கு என்ருல் எம்பிரான் கோடிகா சேர்தலால் அந்த துக்கமிக்க வாழ்க்கையின் சோர்வு நீங்கப் பெறும் என்கின்ருர்.

இந்த உண்மையினை கற்பனையில் நீங்கள் கொஞ்சம் சிந்தித்தால் கோடிகா கோயில் எப்படி இருந்திருக்கும் எண்ணிப்பாருங்கள். 3

### பண்டு செய்த வல்வினை பற்றறக் கெடும் வகை
### உண்டுமக் குரைப்பன் நான் ஒல்லை நீர் எழுமினே
### மண்டு கங்கை செஞ்சடை வைத்து மாதொர் பாகமாக்
### கொண்டு கந்த மார்பினுன் கோடி காவு சேர்மினே.

## கோயில் குறை தெரிவிப்பதும்சிவ தொண்டு.

அருள் ஒளிக்குள்ளே ஒருவன் சிந்தையை வைத்திருந்தால் புற இருள் அங்கு வருதலை விரும்பான், ஒளியில் இருத்தலை எல்லாரும் விரும்புவர் ஆனுல் இருளில் இருப்பதை விரும்புவார் அனைவரும் தீய நெறியை விரும்பும் மக்களாகவே இருப்பர். இதையாரும் மறுக்க முடியாது: இந்தவகை அருள் ஒளியின் நெறிக்குரியனவாகவே நமது ஆலயங்கள் அமைந்தன.

இறைவன் ஒளிநெறிக்கு உரியவனே அன்றி இருள் நெறிக்கு உரியவன் அன்று. இறைவனுல் பெறப்படுவது ஒளி நெறி என்பதை சம்பந்தர்

### "நால்வர்க்கு ஒளி நெறி காட்டினை"

என்கின்ருர், அடுத்து அப்பாலும் சிவன் இருக்கும் நிலையை விளக்கும் அவர்

### "நாட்டம் மூன்ருகக் கோட்டினை"

என்கின்ருர்: இதுவும் சுவாமிக்கு மூன்று கண் வந்த காரணம் ஏன் என்ற போது; உலகில் அம்பாளின் ஒரு செயலால் இருள் சூழ்ந்த போது அந்த இருளை நீக்க நெற்றியில் கண் ஒன்று சுவாமி தோற்று வித்தார்.

தோற்று வித்தலும் உலகில் இருள் நீங்கி ஒளி வந்து கொண்டது. இந்த நிலையில் தான் எம்பெருமானது பேரருள் திறமை தோன்று கின்றது.

உலகில் தோன்றும் இதே இருளை மக்கள் காணச் சகித்திடார். அதே போன்று அகத்திலும் இருள் தோன்றத் தொடங்கின் அதற்கு எல்லை வகுத்திட இயலாது. ஏனெனில் இந்த இருளை நீக்குவது மிக மிக அரிது.

இருளில் இருக்கும் பொழுது துன்பம் பயம் அபாயம் முதல்பல துயரங்கள் நேரலாகும். அதே போன்று ஒளியில் இருக்கும் போது மன மலர்ச்சி சாந்தம் இன்பம் முதலியன தோன்றிடலால் இன்ப துன்பங்கட்கு ஒளியையும் இருளையும் புலவோர் எடுத்து உவமிப்பர்.

புறத்து ஏற்படும் இருளை சூரிய தேவன் நீக்கு கின்ருன். அதேபோன்று அகத்தே நிலவும் இருளை நீக்குவது தொண்டு என்பதாகும், இந்த தொண்டுகளை நாம் புரிதலும் அவையே தவமாகின்றன. தவம் தான் அக இருளை நீக்கி சிவ ஒளியைக் காட்டுவது. இந்த நிலையில் அம்பாள் தனது இடத்து ஏற்பட்ட இருளை நீக்கிட தவம் செய்தாள் என்பதை

முன்னே செய்த கொடிய வினை உம்மைப்பற்றியவாறு இருக்கின்றது. அது என்நேரம் எனச் சொல்ல முடியாது நோயாக பகையாக கவலையாக உம்மை வருத்தப் போகின்றது. அது ஆர்க்கும் தெரியாது. இந்த உம்முடன் இருக்கும் கொடிய வினை தன் பற்று அற்று அற்றுப்போம் வகை உமக்கு ஓர் வழிவகை உண்டு. நான் சொல்வேன்! விரைவாக நீர் எழுந்து கொள்ளுங்கள். அது யாதெனில்; நீர் பெருகிமண்டிய கங்கை ஆற்றைச் செஞ்சடையில் வைத்து பெண்ணை தனது ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்ந்த மார்பினை உடைய எம்பிரான் தங்கிய கோடிகாவைச் சேர்ந்துகொள்ளுங்கள்.

இதை நன்கு நாம் சிந்திக்க வேண்டும். முன்னைச் செய்வினை இப்பிறப்பில் நலிந்திட வருவது என்ன கொதியும் பொருமையும் கோபமும் இறுமாப்பும் புகழ் பெறுதல் இவை போன்ற வெருளித்தனங்களும் ஆகும். இவற்றை அடக்கி ஆள முடியாத படி இவை மிகுந்து நின்றிடும். இவற்றால் மீள மீள பிறவித்துயரில் ஆழ்ந்து அழிகின்றோம். ஆனதினால் இவை சேராவகை சிவனைச் சேர்வோம் என்ற வகையாக கோடிகாவைச் சேர்வோம். கோடிகாவில் அன்றிருந்த புனித புண்ணிய நிலை சிவன் இருக்கும் படியாய் இருந்தது. 4

**முன்னை நீர்செய் பாவத்தால் மூர்த்தி பாதஞ் சிந்தியா**
**தின்னநீரி டும்பையுள் மூழ்கிறீர் எழும்மினோ**
**பொன்னை வென்ற கொன்றை யான் பூதம்பாட ஆடலான்**
**கொன் னவிலும் வேலினான் கோடி காவு சேர்மினே.**

முன்னை நீர் செய்த பாவத்தால் மூர்த்தியாய சிவன் பாதம் சிந்தியாது இன்னமும் நீர் இடும்பையுள் மூழ்கிறீர்கள் அதைவிடுத்து எழுந்து கொள்ளுங்கள், எம்முடனாக வாருங்கள். பொன்னையும் வென்ற ஒளிஉடைய கொன்றை மலர் சூடியவன் பூதப்படை சூழ நின்று தாம் ஆடுகின்றவன்; மிகு உயர்வு சொல்லப்பெறும் வேலினை உடையவன். அவன் இருக்கும் கோடிக்காவைச் சேர்ந்து கொள்ளுங்கள்.

முன்னைப் பிறவியில் செய்யும் பாவங்கள் பின்னைப் பிறவியில் கடவுள் திருவடிகளைச் சிந்தித்திட வையாது! ஏன் எனில் முன்னர் செய்த வினையின் துயரமே சிந்தையைப் பின்னி நிற்ப வெவ்வேறு அவாவாக அவை வருதலால் அந்த அவாக்களின் பிடியில் நின்றும் தவறிட முடியாது போகின்றது.

ஆலயங்களில் இன்று நிகழும் சில கொடும் செயல்கள் ஒலிபெருக்கிப் பாவனை சுவாமிக்கு லயிற் அடித்தல் ரீக்கற் முதலியன முன்னைப் பிறவியின் தொடர்பே! கொடியவனே கொடுமையை விரும்புவான். நல்லவன் நீதியை விரும்புவான். நீதி சாந்தத்தில் இணைந்தது. கொடுமை வெருளித்தனத்தில் ஆங்காரத்தில் இணைந்தது. நீதி உடையார் இறைவனை நெருங்கி நிற்பார். கொடியவர் அதனை அடையார். 5

**ஏவ மிக்க சிந்தையோ டின்ப மெய்த லாமெனப்**
**பாவ மெத் தனையும் நீர் செய் தொரு பயனிலைக்**
**காவல் மிக்க மாநகர் காய்ந்து வெங் களல்படக்**
**கோவ மிக்க நெற்றியான் கோடிகாவு சேர்மினே.**

ஏவுதலை மிகுதிபடச் செய்யும் சிந்தையோடு அதைச் செய்து இதைச் செய்து இன்பம் அடையலாம் என்று பாவம் எத்தனையையும் செய்து அதனால் ஏதும் பயன் இல்லை. அதை நீர் உணருங்கள். ஆதலினால் காவல் மிகுந்த முப்புரங்களின் பெருநகர் அதனை அம்பால் எய்து எரித்து நெருப்பெரியவைத்த கோபம் மிகுந்த கண் இருக்கும் நெற்றியை உடைய கடவுளின் கோடிகாவை நீர் சேர்ந்து கொள்ளுங்கள். 6

ஏவமிக்க சிந்தை என்றது உலகில் காணப்படும் எல்லாப் பொருள்களிலும் மனம் இயல்பான ஒரு பற்றுக் கொள்ளலால் ஏவமிக்க சிந்தை என்றார். உதாரணமாக பொன் எவ்வளவு உடை எவ்வளவு வாகனம் எவ்வளவு இருந்தாலும் ஒருக்காலும் அவை போதும் என்ற கொள்கையில் நிற்பதில்லை. இன்னும் விகாரப்பட்டபடியே நிற்கும் அந்த மனம். ஆதலினால் அந்த சிறிய இன்பமே நோக்கி ஏவப்படும் மனம் என்றதால் ஏவமிக்க சிந்தையால் இன்பம் எய்தலாம் என்று நினைந்து இந்த ஏவப்பட்ட மனத்தால் செய்யப்படுவது பாவம். பாவம் ஒன்றல்ல பலவும் ஏவப்பட்ட சிந்தையால் செய்யவேண்டி வரும் என சிந்தையின் அழுக்கும் அதனால் வரும் விபரீதமும் சொல்லியவாறு. 6

**ஏணழிந்த வாழ்க்கையை இன்ப மென் றிருந்து நீர்**
**மாணழிந்த மூப்பினால் வருந்தன் முன்னம் வம்மினோ**
**பூணல் வெள் ளெலும்பினான் பொன் திகழ் சடைமுடிக்**
**கோணல் வெண் பிறையினான் கோடிகாவு சேர்மினே.**

சிறப்பு எல்லாம் அழிந்த எமது வாழ்க்கையை இன்பம் உடைத்து என்று எண்ணி இருந்து நீர் இளம் பருவத்து உற்ற மாட்சிமை அழியப்பெறும் மூப்பினால் இருமி கக்கி கைகால் உளைய உழன்று கண்பார்வை குன்றி நடக்க முடியாது) பெரும் துயரங்களால் வருந்திட முன்பு எம்முடன் வாருங்கள்: (நாங்கள் சேரப் போகின்ற இடம்) நன்றாக அணியக் கூடிய மாலையாக வெள்ளை எலும்பை அணிந்தவன்: பொன்னாகத் திகழும் சடைமுடிமீது கோணிய வெள்ளை நிறமான பிறையினை உடைய அவன் இருக்கும் கோடிகா என்னும் தலத்தைச் சேர்ந்து கொள்ளுங்கள். 7

**மற்றி வாழ்க்கை மெய் யெனும் மனத்தினைத் தவிர்ந்து நீர்**
**பற்றி வாழ்மின் சேவடி பணிந்துவந் தெழுமினோ**
**வெற்றி கொள் தசமுகன் விறல் கெட இருந்த தோர்**
**குற்றமில் வரையினான் கோடிகாவு சேர்மினே.**

மற்று இர்த வாழ்க்கை மெய் என்ற மனத்தினை நீங்கள் தவிர்ந்து கொண்டு; எம்பெருமான் சேவடிகளைப் பற்றி வாழுங்கள், எம்பிரானைப் பணிந்து வந்து எம்முடன் கூடிட எழுந்து கொள்ளுங்கள் உலகில் பலரையும் வெற்றி கொண்ட பத்துத்தலை உடைய இராவணன் தனது வலி கெட்டிட தாம் வாய்ப்பாக இருந்தருளிய ஒரு குற்றமும் இலாத திருக்கைலாய மலையை உடைய சிவமூர்த்தி எங்கடவுள் இருக்கும் திருக்கோடிகா என்னும் சிவதலத்தைச் சேர்ந்து கொள்ளுங்கள்,

இராவணன் பலரையும் வலியால் வென்றவன். அவனுக்குத் தலை பத்து. ஆனால் அவன் தன் வெற்றியின் சிறப்பால் எல்லாவற்றையும் வென்ற யான் இதையும் வெல்வேன் என எண்ணிப்போதலும் அம்மலை மேல் இருந்து அவன் அகந்தை தீர நெரித்தார் என்ற வரலாறு குறிப்பிடப்பட்டது. சிவன் ஆணைக்கு நிகரில்லை என்பது குறிப்பு. 8

**மங்கு நோய் உறும் பிணி மாயும் வண்ணஞ் சொல்லுவன்**
**செங்கண்மால் திசை முகன் சென்றளந்துங் காண்கிலா**
**வெங்கண்மால் விடை யுடை வேதியன் விரும்பு மூர்**
**கொங்குலாம் வளம் பொழிற் கோடிகாவு சேர்மினே.**

உம்மை மங்கச் செய்யும் நோய்கள் உடலைப் பற்றி வருத்தும் மாறாத பிணிகள் யாவும் அழிவுறும் வழி ஒன்றினைச் சொல்வேன் கேளுங்கள். அது யாதெனின் சிவந்த கண் உடைய திருமால் பிரமன் இருவரும் தாழ்ந்தும் பறந்தும் சென்று காண முடியாத கொடிய சிவந்த கண் உடைய இடபத்தைக் கொண்ட அந்தணன் சிவன் அவன் விரும்பி இருந்திடும் ஊராய வாசனை நிலவும் பூஞ்சோலை சூழ்ந்த வளம் நிறைந்த சோலை உடைய திருக்கோடிகாவைச் சேர்ந்து கொள்ளுங்கள்.

உடம்பெடுத்த உமக்கு நோய் வராமல் விடாது; பொல்லாத கொடிய நோய் வரும். அது மாய்வதென்றால் உமது வாழ்வில் தங்கி இருக்கும் காலம் வரையும் அது விடாது பற்றும், ஆனதினால் அவை தீர ஒரே ஒரு வழி கோடிகாவில் இருந்தருளும் சிவனைச் சேர்தலாகும் என்றார். 9

## "இருளை நீக்கத் தவம் செய்'

என அருணகிரியார் தமது திருப்புகழ் ஒன்றில் சொல்கின்றார்:

இது மட்டு மன்றி கோவிலில் நெறி தான் முக்கியம் என்பதை யாரும் உணரும் படியாக மிகத் தெளிவாக அருணகிரியார் சொல்லி உள்ளார். அது தான் இந்த நெறியில் மனிதன் மட்டும் நிற்க வேண்டும் என்பது அல்லாது கடவுளே நெறியில் நிற்கின்றார், இதனைத் தமது திருப்புகழில்

## "நினை வணங்கு பத்தர் அனைவரும் தழைக்க நெறியில் நின்ற வெற்றிக் கதிர் வேலா"

எனப் பாடியுள்ளார். இந்த அவரது திருவாக்கை நாம் அப்படியே எடுத்துக் கொண்டு அதன் கருத்தை நோக்கினால் முருகனை வணங்கும் பத்தர் தழைத்திட முருகன் நெறியில் நிற்கின்றார் எனக் கூறப்படுகிறது. ஆகவே நாம் வணங்கும் கடவுள் நெறியில் நிற்கின்றார் என்றால் நெறி என்றால் என்ன என்பது கேள்வி. இதற்கு திருநாவுக்கரசர் தமது ஒரு பதிகத்தில்

## 'தவ நெறிகள் சாதிக்க வல்லான் தன்னை'

எனப் பாடியுள்ளார். தவநெறிகள் என்றால் என்ன? என்பது கேள்வி. தவ நெறிகள் என்றால் புலன் அடக்கம் தியானம் பாவனை இவற்றிற்குரிய செயல்களாகும்; புலன்களை அடக்குதல் எப்படி வரும்? தியானம் செய்ய எவ்வாறு இடம் அமைய வேண்டும், அடுத்து பாவனை என்றால் எமது உயிரை சிவமாகப் பாவித்தல் என்றதாகும் இதனை திருநாவுக்கரசர்

## 'பாவித்த பாவனை நீ அறிவாய்'

என்னும் பதிகத்து காண்பிக்கின்றார். இதனை மாணிக்கவாசகர்

## 'சித்தம் சிவமாக்கி செய்வதெல்லாம் தவ மாக்கும்அத்தன்கருணை'

எனவே சொல்கின்றார், முதலாவதாக புலன் அடக்கம் இல்லாதவர்க்கு தியானம் கை கூடாது; புலன் அடக்கத்திற்கு இயல்பிலாத ஒலிபெருக்குதல் அதாவது வானொலி இயந்திர மூலம் ஒலிபெருக்கி பொருந்தாதது ஒன்று. அது ஒரு பைத்தியக்காரத்தனம். புலன்அடக்கத்திற்கு முதல் அமைதி வேண்டும், மனம் அமைதி உறல் வேண்டும் மனம் எப்படி அமைதிஉறும் அது காதால் சகிக்க முடியாத ஓசையைக் கேட்கும் பொழுது? காணக் கூடாத காட்சியைக் காணும் பொழுது ஒரு போதும் மனம் அமைதிவராது. அடுத்து உடலில் நோய் முதலிய சஞ்சலங்கள் இருந்தாலும் மனம் அமைதி உறாது; இதனாலே ஆலயங்களுக்கு செல்வாருடைய மனம்துயருறும் படி ஏதும்ஓர் தவறான செயல் செய்யாதீர். ஒலிபெருக்கி பாவியாதீர் என்று கேட்டோம்? கேட்டாரோ நம்மவர்கள் இவர் எங்கட்கு என்ன சொல்கிறது என்ற ஆங்கார மனப் பான்மையில் இன்னமும் இன்னமும் கூடச் செய்கின்றனர்:

இன்று பலகோவிலில் சிவதொண்

**தட்டொடு தழைமயிற் பீலி கொள் சமணரும்
பட்டுடை விரிதுகிலி ஞர்கள் சொற் பயனிலை
விட்டபுன் சடையினன் மேதகும் முழவொடும்
கொட்டமைந்த ஆடலான் கோடிகாவு சேர்மினே.**

ஓலைத்தட்டுடன் தழைத்த மயிற்பீலி கொண்ட சமணரரும்; பட்டுடையுடன் விரித்த போர்வை உடைய புத்தரும் சொல்லிய சொற்களில் ஏதும் பயன் இல்லை. அதை உணருங்கள். விரித்து விட்ட புரிபுன் சடை உடைய ஈசன் மேன்மையான முரசப் பறையுடன் கொட்டப் பறைக்கு உகந்த ஆடல் உடைய சிவன் அவன் இருக்கும் கோடி காவைச் சேர்ந்து கொள்ளுங்கள்:

சமணர் புத்தர் ஏதோ சொல்லமுற்படுகிறார்கள், அவை உமக்கு பயன் தராது: ஆதலின் கோடிகா சேர்ந்து சிவனைப் போற்றிக் கொள்ளுங்கள். 10

**கொந்தணி குளிர் பொழிற் கோடிகாவு மேவிய
செந்தழலுருவனைச் சீர்மிகு திறலுடை
அந்தணர் புகலியு லாய கேள்வி ஞானசம்
பந்தன தமிழ் வல்லார் பாவமான பாறுமே.**

அழகிய மலர் வகையாகச் சிறந்த குளிர்ந்த சோலை சூழ்ந்த கோடிகா என்னும் சிவதலத்துள் இருந்தருளும் சிவந்த நெருப்புப் போலும் உருவுடைய சிவனை சீர் மிகுந்த திறமை உடைய அந்தணர்கள் வாழ்கின்ற சீகாழியுள் அரிய வேதங்களை ஓதாது உணர்ந்து கேட்ட ஞானசம்பந்தனது செந்தமிழ் இவை பத்தையும் கற்று வல்லமை பெற்றூர்கள் செய்த பாவம் யாவும் அழியும்.

பாவம் நோய் சஞ்சலம் இவற்றிற்கு வித்தாவது. ஆதலின் இப்பாவச் செயல் நீங்கினல் அன்றி உண்மை புலனுகாது: பாவம் மனிதனைக் கீழ் நோக்கிடச் செய்வது: இதனுலே ஓதுவாரிடம் இது சேராது என்றூர்:

சம்பந்த சுவாமிகள் வேதங்களை ஓதாது உணர்ந்தார் என்பதற்கு ஆய கேள்வி ஞானசம்பந்தன் என்பது காண்க, இதற்கு சான்ருக 9 ம் பக்கம் கட்டுரை காண்க, 11

டிற்குரிய முதல்பொருளான பூமலரும் தோட்டம் இல்லை: வீதியால் வலம்வரப் பிரதிட்டை செய்பமுடியாது கல்லும் முள்ளும் செடியும் பற்றையும் உளது. ஆனுல் இவைபற்றி ஒரு அக்கறையும் இல்லை. ஒரு ஒலி பெருக்கி விலைக்கு வாங்கி உள்ளனர் பல கோயில்.

பத்திமை நெறி இல்லை. கோயில் பரிபாலனம் ஒரு வியாபாரம். பிரசாரம் ஒரு கள்ளக்கடத்தலின் அத்திவாரம். அரசியலின் மறுபோர்வை வஞ்சனை வம்பு வீம்பு வேடிக்கை ஒப்பாரி களவு பொய் மது உண்டல் ஆண்பெண் உடல்உறவு முதல் பாதகம் யாவும் நிறைந்திருக்க நாம் எமது சைவமக்களுக்கு இத்தகைய அபசாரங்கள் எங்கள் கோயிலில் நடைபெறல் தகாது எனச் சொல்லல் நீதி உடையது: நாம் இதைச் சொல்வதால் அறிவுடைார் யாரும் பழுது என்று சொல்லார்கள்: ஆனுல் இப்பழுதினைச் செய்யும் பாதகர் நம்மைக் குறைசொல்வார்: அதை நாம் பெரருட்படுத்தோம்: கள்வன், கொலைஞன் கற்பு இழ பவர் தாம் செய்யவில்லைஎன்பது காணப்படும் இயல்பே:

## நாச்சிகேதனே மனதுடன் பேசப் பழகிக்கொள் என்றுன் இயமன்.

மனதுடன் பேசப்பழகுதல் மௌன விரதத்தின் உயர்ந்த இலட்சியமாகும். இந்த விரதம்தான் புலன்களை அடக்கிப் பழகுதற்கு முதல் காரணமாகும்.

ஒருநாள் யோகசுவாமி என்னை நோக்கி ''பிறர் உனக்குச் செய்யும் குறைபற்றி வேறு பலரிடமும் சொல்லாதே. அப்படிச் சொல்வதால் நீ ஏதும் நன்மைபெறமாட்டாய். உன் மனதிடம் சொல்லப் பழகிக்கொள் என்றூர். யோகசுவாமி அன்று சொன்னதை நான் அக்கறைப்படுத்தவில்லை,

என்னில் ஒரு குறைபாடு எனக்கு யாரும் பிழைசெய்தால் அவர் இப்படிச்செய்தார்எனச்சொல்வதுவழக்கம். அந்தக் குறைபாட்டைச் சுவாமிகள் உணர்ந்து உன் குறைகளைப் பிறர்க்குச் சொல்வதில் ஏதும் பிரயோசனம் வராது என்றவர். அன்று சுவாமி சொன்னதை அப்படியே இந்த கதா உபநிடதத்தில் காண்கின்றேம். ஆதலினுலே யோகசுவாமி ஓதாதுணர்ந்த உண்மை ஞானி என்பதை இன்று யாரும் உணரலாம்.

### கதா உபநிடதம்

புலன்களுக்கு அப்பால் பொருள்கள் உண்டு. பொருள்கள் மனத்தில் உண்டு: மனத்தின் அப்பால் புத்தி உண்டு; புத்திக்கு அப்பால் பெரிய ஆத்மா உண்டு; ஆத்மாவிற்கு அப்பால் பரம ஆத்மா உண்டு; பரம ஆத்மாவிற்கு அப்பால் புருடன் (சிவன்) உண்டு: அதற்கு அப்பால் ஒன்று மில்லை. இது தான் காணும் எல்லையின்முடிவாகும்:

(எப்பொருளும் ஆக்குவான் ஈசன் எனும் உணர்வும் அப் பொருள் தான் ஆளுடைய அடியார்கள் எனும் உணர்வும் என்ற பெரிய புராணக் கருத்து நோக்குக. பரம் பொருளில் தான் யாவும் தோற்றுவதும் ஒடுங்குவதுமாகும். பொருள்கள் என்றது கருவிகள். கண் காது நாக்கு உடல் இவற்றின் உணர்ச்சிக்குரிய கருவிகள். மிக நுணுக்கமானவை. அவை மூலம் பார்வை முதல் புலன்கள் பெறப்படுவன) 11

தன்னந் தனியான பரம ஆத்மா (சிவன்) எல்லாவற்றிலும் மறைந்து நிற்பது: தான் வெளிப்படத் தோற்றுவதில்லை. ஆனுல் அதை மிக நுணுக்கமாக காணும் ஞானக் காட்சி உடையவர் தனது ஒரு தன்மையான (ஒருமைப் பாடுடைய) தூய சித்தத்தால் கண்டுகொள்வார்கள்:

(இதனை வேதக் காட்சிக்கும் உபநிடத்து உச்சியில் விளைந்த போதக் காட்சிக்கும் காணலன் புதியரிற் புதியன் மூதக் கார்க்கு | முதக்கவன் முடிவுற்கும் முடிவாய் ஆதிக்கு ஆதியாய் உயிர்க்கு உயிராய் நின்ற அமலன் என கந்தபுராணம் கூறுவது காண்க). 12

புத்தி சாலியாய் இருப்பவன் எப்பொழுதும் தன் மனத்துடன் பேசிக் கொள்ளப் பழக வேண்டும். மனதை கட்டுப்படுத்தி புத்தியினுள் வைக்கப் பழகிக் கொள்ள வேண்டும். புத்தியை நன்மை தீமை அறியாத அறிவாய ஏகப்பட்ட சித்தத்தில் ஒடுக்கப் பழக வேண்டும். அந்த சித்தம் தன்னந் தனியான சிவத்தில் ஒடுங்க வேண்டும்.

(இவைகள் சொல்ல முடியாத நிலைகள். ஆட்கொள்ளும் திருவருள் வசத்தால் பெறப்படுவது. இது தான் அது ஆகும் தன்மை. நீரில் கரையும் உப்பு நீரில் தானுக இருப்பது போன்றது.) 13

நாச்சிகேதனே! எழுந்திரு! விழித்திரு! உணர்ந்த பெரியோரை அணுகு! அவரிடம் கற்றுக்கொள்! மிக கூரிய கத்தியின் நுனி போன்றது இப்பாதை என புத்திசாலிகள் சொல்வார்கள். இது மிகவும் கடினமானதும் கடந்திட இயலாததும் என்பார்கள். 14

இவ்வகையால் ஆத்மாவை (சிவனை) உணர்ந்த பிற்பாடு அது சத்தம் இல்லாததாய் அசைவு அற்றதாய் வடிவம் இல்லாததாய் சிதைவு அற்றதாய் சுவை அற்றதாய் உள்ளத்து உள்ள இரகசியப் பொருளாய் வாசனை அற்றதாய் விளங்கும் என்பதைக் கண்டு அது தோற்றமும் முடிவும் அற்றதாய் மாறில்லாததாகி பெருமைக்கும் பெருமையாய் என்றும் உள்ளதாய் இருப்பதைக் கண்டு கொண்டவன் மரணத்தின் நின்றும் விடுதலை பெறுகிறுன். மரணத்தால் நீக்கப் படுகின்றுன்.

(சாதலும் பிறத்தலும் தவிர்த்து எனை வகுத்து என சுந்தரர் பெருமான் தேவாரத்து மொழிதல் காண்க.) 15

புத்திசாலியன ஒருவன் இந்த உபநிடத வாக்கியங்களைக் கேட்டு உணர்ந்து நல் ஒழுக்கம் தலை நின்று உள்ளத்து ஒளியாய சிவத்தின் கதைகள் நிரம்பிய நாச்சிகேதனுக்கு இயமனுல் சொல்லப்பட்ட இக்கதைகளை; பிறர்க்கு நயம்பட உபதேசிப்பானே அவன் பிரம உலகில் பெரும் மதிப்பிற்குரியவனுக விளங்கிடுவான்.

அத்துடன் யார் ஒருவன் மன அடக்கத்தை கடைப் பிடிப்பவனுக இருந்து; இந்தக் கடவுள் தன்மையான கதைகளை மிக மேலான இரகசியமான வற்றை ஆத்ம சம்பந்தமுடைய இவைகளை பிதிர்களுக்குச் செய்யப்படும் சிரார்தக் கடன்களில் கூடியிருக்கும் அந்தணர்கள் மத்தியில் ஓதுகின்றுனே அவன் இவ்வுலகில் எல்லாப் பேற்றையும் அடைவான். நாச்சிகேதனே நீயும் அளவிறந்த பெரும் பேறு அடைவாய்.

(சிரார்த்தம் —இறந்தார்க்குச் செய்யப்படும் கடன்கள். அன்று அதிதிகளாக வந்திருக்கும் அந்தணர் முன் தோற்றமும் கேடுமில்லாத நித்தியப் பொருளான பிரமத்தைப் பற்றிய பேச்சுக்களாகும்இந்த உபநிடத வாக்கியங்களைக் ஓதினுல் ஓதுவார் பெரும் பேறு அடைவார் என்றபடி. எல்லா உயிரும் பரம ஆத்மாவிலே தோற்றி பின்னர் அதிலே ஒடுங்கிடுதலால் பிரம வணக்கம் இறந்த அந்த ஆத்மாவின் சிரார்த்த தினத்தன்று ஓதப்படல் நன்று எனப்பட்டது:

ஒருநாள் யோக சுவாமி யாரோ ஒருவருடைய இறந்த சிரார்த்த திதி பற்றி அன்றைய விசேடம் பற்றி கேள்விப்பட்டார், உடன் சொன்னுர் சரி எனக்குத் தெரியாமல் போய் விட்டது. தெரிந்திருந்தால் நான் நிச்சயம் போயிருப்பேன் என்று கூறி என்னை நேர் நோக்கி ஆத்மாவிற்காகச் செய்யப்படும் கடன்களில் வழிபாடுகளில் பங்கு கொள்ளல் புண்ணியம் காணும் என்றூர். சுவாமி இப்படிச் சொல்கின்றது.

யாரும் தனது இல்லத்திற்கு சாப்பிட வாருங்கள் என இரந்தால் ஊரில் வைத்த உலை எல்லாம் (சோறு சமைக்கும் பானை) எனது. நான் விரும்பிய இடத்தில் சாப்பிடுவன் நீர்வாரும் பிறகு பார்ப்போம் என்கின்றவர் இன்று இப்படிச் சொல்கின்றுரே என நினைந்தேன். ஆனுல் இன்று கதா உபநிடதம் எழுதும் இந் நேரத்து யோக சுவாமிகள் சொல்லிய அன்றையவாக்கு நினைவிற்கு வந்தது.

யாழ்பாணப் பெரியோரே தயவு செய்து இந்த உபநிடத வாக்கியங்களை நிங்களும் நினையுங்கள். கோவிலில் இறைவனுக்குச் செய்யும் திருவிழாவிலும் உங்கள் பிதிர்கள் அதாவது இறந்த உயிர்கள் அவர்கட்குச் செய்யும் கடன்களைத் தவற விடாதீர்கள்.

கருத்தரங்கு வைத்து சோறு சமைத்து வயிறூரச் சாப்பிட்டு கும் மாளம் கொட்டி ஏதேதோ புலம்புவதிலும் நிச்சயமாக நீங்கள் இதைச் செய்ய வேண்டும். சிரார்த்தம் செய்ய அந்தணர்கள் இல்லாதிருந்தால் தூய பெரியோரை சிவனடியார்களை அழைத்து அவர்களுடன் நன்கு சிவ சம்பந்தமான பாடல்களை ஆத்ம சம்பந்தமான வற்றை பேசி அமுதூட்டி உங்கள் பேரால் கடன் எதிர்பார்த் திருக்கும் பிதிர்களை வழிபட்டுக் கொள்ளுங்கள்: உங்கட்கு எக்காலமும் ஒரு கேடும் வராது.

இதை வள்ளுவர் எல்லா வழிபாட்டிலும் முதலாவதாகக் கருதி தென் புலத்தார் (பிதிர்கள்) தெய்வம் விருந்து ஒக்கல் (சுற்றம்) என வழிபாட்டு முறையில் முன்வைத்தமை உணர்க.

### கதா உபநிடதம் பகுதி (2)

இயமன் பின்பும் சொன்னுன்; நாச்சிகேதனே கேள்!

தன்னந் தனியாய் நின்றருளும் எப்பொருட்கும் மேலான கடவுள் (சிவன்) புத்திமனம் புலன்கள் இவற்றிலே ஓர் காயத்தை விளைவித்தார். இத்தகைய காயத்தினுல் மனிதவடிவில் புறத்தேநாடி அலையும் ஓர் நிலையை வருவித்தார். ஆனதினுலே மனிதன் எப்பொழுதும் புறத்தே உள்ள பொருளை நாடி அறின்றவன் ஆகிவிட்டான். இதனுல் மனிதர்க்கு புறத்தின் அலைவுகள் மிகுந்தன. ஆனுல் ஓர் அமைதியான சித்தம் உடைய புத்திசாலி நித்தியமான அழிவற்ற நிலையை அடையவேண்டித் தன்னுள் இருக்கும் தன்னம் தனியான கடவுளைக் கண்களை மூடியவண்ணம் தியானம்செய்து அறிகின்றுன்.

# திருமுறைகளையும் ஞானிகளையும் திவ்விய சீவன சங்கம்போற்றுகிறது.

உ

திவ்வியஜீவனசங்கம்
பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்

ஆசிரியர் சந்திரதீபம்.

அன்புடைய பெரியோர் அவர்களே!

தங்கள் சந்திரதீபம் இதழ் 2 சுடர் 11 ல் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இறைவனின் திருநாமங்களை பலர் அறிய கூறுவதை தடை செய்ததன் விளைவாக எழுந்த விளக்கங்களைத் தொடர்ந்து திருகோணமலை இளைஞர் அருள் நெறி மன்றம் தெரிவிப்பது என்ற கட்டுரையில் திருக்கேதீஸ்வரமும் திவ்வியஜீவன சங்கத்தினரும் என்ற தலைப்புக் கொடுத்து பல உண்மைக்குப் புறம்பான விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

முதலாவதாக ''இஸ்லாம், கிறிஸ்த்தவம், பௌத்தம் ஆகிய சமயங்களில் வாலாட்ட முடியாத பச் சோந்திகள் பலர் செந்தமிழ் சமுதாயத்தில் தாமும் சைவ சமயத்துக்கு உடன் பாடு உள்ளவன் தான், தாமும் ஒரு இந்து என்று சொல்லிக் கொண்டு, நமது இதயங்கள் வெடிக்கும் அளவுக்கு நமது சமுதாயத்தில் மோசடிகளும், வியாபாரங்களும் செப்படி வித்தைகளும் மாயாசாலங்களும் நடாத்தி நமது சமுதாய வாழ்வையும், ஆத்மிகப் சிறப்பையும், செந்தமிழ்ச் சைவ மரபு வழி, ஒழுக்க வழக்கங்களையும், சீரழித்துச் சிதைக்கின்றனர்: இச் சிதைவுக்கு ஏராளமானவர்கள் பலியாகின்றனர் —பலியாகிக் கொண்டு வருகின்றனர் – பலியாகவும் தயாராக உள்ளனர்! இந்த இழி நிலைகளுக்கெல்லாம் யார் காரணம்?

இவர்கள் கேள்வியின் குறிப்பு, திவ்வியஜீவன சங்கத்தினர் இதற்கு காரணமாகஇருக்கின்றார்களா? இந்து அல்லது சைவன், வைஸ்ணவன்சாக்தன் கௌமாரன் என்று கூறப்படுவார்கள் யார்? கிறீஸ்தவன், பௌத்தன், இஸ்லாமியன் என்பவர் யார்? பின் கூறிய கிறிஸ்தவ முதலான சமையத்தவர்கள்; ஒரு குருவை மையமாக வைத்து வளர்ந்த கோட் பாடுடைய நெறிகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்:

ஆனால் இந்து மதத்தவன் அதாவது சைவன் வைஸ்ணவன் சாக்தன்; கௌமாரன் காணுபத்தியன் முதலானோர் பரம் பொருளையே மையமாக வைத்து வளர்ந்து வந்த நெறி முறைகளைக் கடைப் பிடித்து வருகின்றார்கள்:

இந்த சமயத்துக்கு ஆதி அல்லது அந்தம் ஒன்றும் இல்லை: உலகில் தோன்றிய பெரிய ஞானிகள் மகரிஷிகள் முதலியோரின் சத்திய வாக்குக்கள் மந்திரங்களாக சமைக்கப்பட்டு பல நூற்றாண்டுகளாக செமிக்கப்பட்டு, அவர்கள் காட்டிய நெறிப் படி நடந்து பலர் அனுபூதிமான்களாக பரிணமித் திருக்கின்றார்கள்: பரிணமித்துக் கொண்டு வருகின்றார்கள். என்றும் பரிணமித்து கொண்டிருப்பார்கள்: ஆகவே செந்தமிழ் நாட்டில் சைவ சமய மறுமலர்ச்சி உண்டு பண்ணிய நாயன்மார்களுக்கு முன்பதாக இருந்து வந்த சனாதன தர்மம் வழி நடந்தோர் எம் முறையில் வணங்கியிருப்பார்கள்? அவர்களும் தம் முன்னோர் அருளிய அருள் வாக்குகளை பயின்றும் ஓதியும் அநுபவித்தும். அநுபூதி மான்களாக ஆகியிருப்பார்கள். அடியார்கள் வரிசையை பாட வந்த சுந்தரரும் ஆரம்பத்தில் ''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்றும்.

''பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்றும்

''பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்' என்றும்

''அப்பாலும் அடிச்சாந்தார் அடியார்கும் அடியேன்' என்றும் கூறியுள்ளார்.

இதில் இருந்து தெரிவது யாதெனில் எவர் எவர் இறைவனை பக்தியுடன், பணிவுடன். உள்ளன்புடன் பாடி அவன் திருவடி அடைந்தவர்கள் என்றும் அடையப் போகின்றவர்கள் எல்லாரும் சிறந்த அடியார்களே. அவர்களுக்கும் பெரிய புராணத்தில் மட்டும் கூறப்பட்ட அடியார் களுக்கும் வேற்றுமை கற்பிப்பது பேதமையே. ஆகவே திருமுறை ஓதுகின்றவர்கள் தான் அடியார்களா?

எந்தக்காலத்திலும் போலி வேடதாரிகள் இருந்தே வந்திருக்கின்றார்கள். அன்றியும் என்று ஆஸ்திகம் இருந்ததோ அன்று நாஸ்திகமும் இருந்து வந்திருக்கின்றது. நாயன்மார் காலத்தில் இருந்த சமண சமயத்தவர்கள் நாயன்மார் காட்டிய அற்புதங்களை மாயாஜாலங்கள் என்றும் தந்திரங்கள் என்றும் கூறவில்லையா?

நம் நாட்டில் பல சித்தர்கள் இருந்து சித்துக்கள் செய்யவில்லையா? இக்காலத்தில் உள்ள அடியார் செய்தால் அது மந்திரவாதியின் செயல் என்று கூறலாமா? எப்படியிருந்தும் திவ்விய ஜீவன சங்கத்திற்கும் இந்த சித்துக்களுக்கும் அற்புதங்களுக்கும் என்ன தொடர்பு உண்டு? திவ்விய ஜீவன சங்க குரு சுவாமி சிவானந்தா அவர்களோ தற்போதைய தலைவர் சுவாமி சிதானந்தா அவர்களோ இப்படிப்பட்ட வித்தைகள் ஒரு நாளும் செய்யவில்லை. எங்கள் ஆத்மீகச் சிறப்பை உலகெங்கும் பரப்பி ஒழுக்கத்தையும் ஞானத்தையும் மக்களுக்கு போதித்து மாக்கள் என்ற நிலையிலிருந்து மக்கள் என்ற நிலைக்கு பலரை உயர்த்தி இருக்கின்றார்கள்.

திவ்விய ஜீவன சங்கம் உலகம் முழுவதற்கும் அதாவது மனித சமுதாயம் முழுவதற்கும் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து பேரின்பப் பேறு அடைய வழி காட்டும் ஒரு அருள் கூட்டம். அது பலதேச சமய சாதி இன வேறுபாடின்றி எல்லா நாளும் அவர் அவர் வாழ்ந்து வளர்ந்து வந்த சூழல் படி ஆத்மிக ஒளி பெற வழி காட்டியாக இருந்து வருகின்றது. ஆகவே செந்தமிழர் வாழ்ந்து வளர்ச்சி அடைந்த நெறி முறையை மாற்றி அமைக்கச் சொல்லி ஒரு நாளும் போதிக்கப்படவில்லை. நாம் சைவ சூழலில் வாழ்ந்து வருகின்றோம். ஆகவே நாங்கள் எங்களுடைய பிரார்த்தனைகளிலும் பஜனைகளிலும் முக்கியமாக திருமுறைகளைப் பயன் படுத்தியே வருகின்றோம். வேத மந்திரங்களுடன் இறைவன் புகழை பல்லாயிரம் நாமங்களால் பாடுகின்றோம்.

சுவாமி ஜீயே ஓர் தென்னாட்டவர். அவர் திருமுறைகளுக்கு மிக முக்கியம் கொடுத்து சைவ அடியார்களின் வரலாறுகளை ஆங்கிலத்தில் எழுதி எல்லா இன மக்களும் அறியக் கூடியவாறு பணி புரிந்துள்ளார்கள். அன்றியும் சைவ சித்தாந்த விளக்கமும் செய்துள்ளார்கள். இலங்கையிலும் திவ்வியஜீவன சங்கக் கிளைகள் சிறப்பாக யாழ்ப்பாணம் திருகோணமலை மட்டக்களப்பு கண்டி கொழும்பு முதலிய இடங்களில் ஆத்மிக வாழ்வு மலர்ச்சி உற பல பணிகளை ஆற்றிவருகின்றன.

அருள் மிகு திருக்கேதீஸ்வர ஆலயத்தில் திவ்விய ஜீவன சங்கத்தினருக்கு திருமுறைப் பாடல்கள் அல்லாதனவற்றைப் பாடுவது தடுக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது.

திவ்விய ஜீவன சங்கம் அங்கு செல்லவில்லை. அங்கு சென்றவர் ஓர் துறவி. அவர் சுவாமி சிவானந்தமகரிஷியை குருவாகப் போற்றுபவர். ஆனால் அவர் திவ்விய ஜீவன சங்கப் பிரதிநிதியாக அங்கு செல்லவில்லை. அவர் இறைவனை தரிசிக்க ஓர் அடியாராகச் சென்றிருந்தார். அவர் இறைவன் புகழ் பாடுவதையே தமது பணியாகக் கொண்டவர். அவர் பாடத் தொடங்கிய பாடல் அருள் மிகு நிறை மாந்தர் யோக சுவாமிகளின் திருவாக்கில் இருநது மலர்ந்தமலர்.

''அன்பர்தம் சிந்தையில் உறைவோனே
அரகர சிவ சிவ மறையோனே
தில்லையில் ஆடிய சிற்பரனே
சிவ சிவ சிவ சிவ தற்பரனே''

இத்தப்பாட்டைப் பாடுவதில் என்ன தற்பெருமை சுயநலம் ஆணவம் தற்புகழ்ச்சி அமைந்துள்ளது?

தேவாரத் திருப்பதிகத் தொகை ஒரு லட்சத்து மூவாயிரம்-- ஒருவர் வந்து பாடும் பொழுது இது திருமுறை அல்ல என்று எப்படி நிரூபிப்பது? செயலாளருக்கு இந்த ஒரு லட்சத்து மூவாயிரமும் தெரியுமா? தெரியாவிடின் இது திருமுறை அல்ல என்று எப்படி மறுக்க முடியும், அல்லாவிடில் செயலாளருக்கு தெரிந்த திருமுறை மட்டுமா அடியார்கள் பாடவேண்டும்.

பரமனையே பாடுவார் என்று பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ள 59ம் பகுதியில்--

''தென்தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாக
ஒன்றிய மெய்யுணர் வோடும் உள்ளுருகிப் பாடுவார்
பன்றியுடன் புட்காணுப் பரமனையே பாடுவார்''

இதில் இருந்து தெரிவது யாதெனில் தென் செந்தமிழாகினும் வட மொழியிலாயினும் எத்தேசிய மொழியிலாயினும் மன்றினிடை நடம்புரியும் வள்ளலை பொருளாக வைத்து உள்உருகி ஒன்றிய மெய்யுணர்வுடன் பாடுவோர் பரமனையே பாடும் அடியார் ஆவர்.

ஆகவே திருமுறை நெறியை அல்லது மரபை (சாதிஅல்ல) நிலை நிறுத்தி ஒழுகுபவர்கள் அல்லது அடியார்கள் எனப்படுவோர் இறைவனை சித்தத்தில் வைத்து உள்ளுருகி பரவசத்தில் பாடுவார் எல்லாரும் என்று பெறப்படும். அன்றியும் தமிழ் நாட்டில் இருந்து வந்த பக்தர்கள் தங்கள் பரவசத்தை உள் உணர்வை வெளிக்காட்ட முற்பட்ட பொழுது தடுக்கப்பட்டது. இது திருமுறை நெறி வழியா? இது தான் சைவ பண்பாடா?

சமயம் மனிதனுடைய சீவத்தன்மையைப் போக்கி சிவத் தன்மையைப் பயக்க சான்றோர்களால் அமைக்கப்பட்ட முறை, சிவத்தன்மை என்பது அன்பே உருவாய் அருளே குணமாய் இன்பமே வடிவாய் நிற்கும் நிலை. அப்படிப்பட்ட நிலையை அடைவதற்கு உறுதுணையாக உள்ளது ஆலயங்கள். இடைக் காலத்தில் எங்கள் நெறிகள் குறிகிய சுவர்களால் அடைக்கப்பட்டு உயரற்ற பழக்க வழக்கம் என்ற பாலைவனத்ல் பகுத்தறிவு என்ற தெளிந்த நீர் ஓடை பாய்ந்து வறண்டு போய்விட்டது. அதனுல் தான் எங்களில் பலர் மறு சமயங்களின் தாக்குதலுக்கு உட்பட்டு வேறு சமயத்தவர்களாய் மாறுவதற்கு ஏதுவாக இருந்து வந்தது.

இப்பொழுது தோன்றிய பெரியார்கள் ஞானிகள் சரியான விளக்கங்கள் கொடுத்து பகுத்தறிவை வளப்படுத்தி உண்மை ஊற்றைப் பெருக்கி மறுசமயத்தாக்குதல்களிருந்து விடுவித்து எல்லா சமயங்களையும் சனாதன தருமத்திற்குள் அடக்கி விட்டார்கள். அதனுல் உலகம் பூராகவும் மனித சமுதாயம் மறுமலர்ச்சி அடைந்து வருகின்றது. அன்றியும் பரிபூரணமான அறிவுள்ள பொருளின் சிருஸ்டியில் எப்படி குறைவுகள் இருக்க முடியும? எல்லாம் நிறைவாகவேயிருக்கும். ஆகவே அருமையான உலகம் ஒரு பொல்லாப்புமில்லை.

இறுதியாக இலங்கையில் திவ்விய ஜீவன சங்கங்கள் செய்யும் சில பணிகளை கூறி பக்திப்பாடல்கள் அருட்பாக்கள் நாம சங்கீர்த்தனங்களுடன் திருமுறைகளையும் அவர்கள் எப்படி வளர்க்கிறார்கள் என்பதையும் கூற விரும்புகின்றேன்.

சுவாமி சச்சிதானந்த மாதாஜீ சிவானந்த தபோவனத்தில் சிறப்பாக அனாதைக் குழந்தைகள் வயோதிபர்களையும் அரவணைத்து சிவபூசை வழிபாட்டில் ஒவ்வொருநாளும் வேதமந்திரங்களும் நாம பஜனைகளும் திருமுறைகளும் ஒலிக்கின்றன. இலங்கையில் உள்ள ஒரே ஒரு ஓதுவார் மூர்த்தி திரு.வி.ரி.வி சுப்பிரமணியம் மாதாஜியின் பிரதம சீடர் அவர்களைக் கொண்டு கடந்த பல ஆண்டுகளாக தபோவனத்தில் திருமுறை வகுப்புகளை பக்திப் பரவசத்துடன் நடாத்தி வந்துள்ளார்கள்.

திவ்விய ஜீவன சங்கத்தைச் சேர்ந்த திரு. வே சிவஞானம் அவர்களும் பல ஆண்டுகளாக திருமுறைகளையும் நாமபஜனைகளையும் பாடி பல இடங்களிலும் திருமுறைவகுப்புக்களை நடாத்தி வந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்திலும் திவ்விய ஜீவன சங்க நாம பஜனைகளில் திருமுறைகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. வேறு இடங்களில் உள்ள திவ்விய ஜீவன சங்க அடியார்கள் திரு. நா. ப பாலச்சந்திரன் திரு. சிவராசா முதலியோர் திருமுறைகளையும் பகதிப்பாடல்களையும் திவ்வியஜீவனசங்கங்களின்

நாம பஜனைகளிலும் பாடி வருகின்ருர்கள். அன்றியும் இவர்கள் எல்லோரும் இலங்கை வானெலியிலும் திருமுறைகளை பண்ணுடன் உள்ளம்கசிந்துருகிப்பாடி வருகின்ருர்கள். வேறு பல அங்கத்தவர்கள் இங்கு வந்திருந்த ஓதுவார் மூர்த்தி திரு இராஜசேகரத்திடம் திருமுறைகளை பண்ணுடன் பாடப்பயின்று சான்றிதள் பெற்று பல இடங்களிலும் பாடி வருகின்ருர்கள்.

ஆகவே வள்ளுவனுர் வகுத்த உண்மையான பகுத்தறிவுப்படி எப்பொருள் எத்தன்மைத்தாயினும்

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு

அன்றி மந்த அறிவுடனும் சூழ்ந்த ஆராய்ச்சி இன்றியும் அபிமானத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கும் முடிவுகள் அறிவுடைமையாகாது.

காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே-- காய்வதன்கண்
உற்ற குணம் தோன்ருதாகும், உவப்பதன் கண்
குற்றமும் தோன்ருக் கெடும்-
'அறநெறிச்சாரம்'

இ. வயித்திலிங்கம்
யாழ் திவ்விய ஜீவனசங்கம் காரியதரிசி

# சிவநாமத்தையும் சிவனடியாரையும் கேதீச்சர நீர்வாகம் அவமதிக்கின்றது.

## திருக்கேதீச்சர நிர்வாகத்தில் சீர்கேடு மலிந்தது,வேத நீதிகள் அகல்கின்றன. காரியதரிசி சர்வாதி காரப் போக்கில் ஈடுபடுகின்ருர். பாடல் பெற்றபுனித தலத்தின் அருள் நிலை பழுதாகின்றது. பதவி வேட்டையில் பல பொய்யும் திருகுதாளமும் ஈசன் சந்நிதியில் நிகழலாமா?

திருக்கேதீச்சரத்து சென்ற முறை உற்சவத்தின் போது சிவநாமம் சொன்ன ஜோதி சுவாமிகளை திருமுறையன்றி வேறு ஓதக்கூடாது என்று தடைசெய்வித்த காரியதரிசியின் செயல் மிகு பாதகமாகும்; இந்த ஒரு செயல் வேத ஆகம ஸ்மிருதி அநுபவங்களுக்கு மிக மாறுபட்ட செயலாகும்.

திருக்கேதீச்சர திருப்பணிச் சபையை ஓர் பதிலை அன்றி அப்படிச் செய்தமைக்கு ஓர் விளக்கத்தை சைவ உலகிற்கு தருமாறு நமது பத்திரிகை மூலம் வேண்டுதல் செய்தோம். ஆனல் திருப்பணிச்சபை அதைப்பற்றி கொஞ்சமேனும் சிரத்தை எடுக்காது இருப்ப காரியதரிசி திருப்பணிச்சபையின் சார்பில் நமக்கு ஓர் பதில்; முற்றிலும் நாம்சுட்டிக் காட்டிய தவற்றிற்கு இலாது; பதில் நம்மைக் கேலி செய்வது போன்ற பொருத்தமில்லாத ஒன்றை அனுப்பி இருந்தார். அதை நாம் நமது பத்திரிகையில் பிரசுரித்து சைவ உலகிற்கு காட்டிட பல அன்பர்கள் காரியதரிசியின் செயல் தவருனது என அபிப்பிராயம் தெரிவித்தனர். நமக்கு கிடைத்த சைவமக்களது அபிப்பிராயங்களை நமது பத்திரிகையில் பிரசுரித்தோம். பத்திரிகையின் பிரதிகளை திருப்பணிச் சபைக்கும் அனுப்பினேம். அவை கண்டு மீள ஒருவார்த்தை பேச முடியாது காரியதரிசி மௌனம் சாதிக்கின்ருர்.

காரியதரிசி நமக்கு அனுப்பிய பதிலைக் கொண்டு அவர் சமய அறிவை நாம் ஆராயப்புகின் நால்வர் காட்டிய அறநெறியாதென்று விளங்காமல் இருக்கின்ருர் என்பதே நமது முடிபு. ஏனெனில் திருஞானசம்பந்தப் பெருமான் தமது திருப்பதிகம் பலவற்றுள்ளும் கோயிலில் சென்று எம்பிரானை அவன் நாமம் சொல்லி போற்றுதல் பெரிதான தொண்டு எனப் புகல்கின்ருர்.

திரு நணா என்னும் சிவதலத்தை திருஞானசம்பந்தர் சென்று பாடிடும் பொழுது.

### "கோயில் எங்கும் நாஞவிதத்தால் விரதிகள் நல் நாமமே ஏத்தி வாழ்த்த

எனக் கூறி கோயில் எல்லாவற்றிலும் தூய துறவின் விரதிகள் எம்பிரான் நாமங்களை நாஞவிதத்தால் சொல்லிப் போற்றுதலை நேரில் தாம் கண்டு அப்படிப் பாடுகின்ருர்; நாஞவிதத்தால் நல்நாமம் சொல்லி ஏத்துதல் மிகு சிறப்புடையது என அவர் பாடலில் பேசப்படுகின்றது இதனை நன்கு நாம் சிந்தித்தால் நல் நாமம் என்றதற்கு இந்த நாமம் இந்த பாடல் என்ற குறிக்கோள் இல்லை. ஒருவர் இறைவன் சந்நிதி சென்றுவிட்டால் பின்னர் இறைவன் கருணையில் மூழ்கி விட்டால் அவர் வாக்கை நாம் கட்டுப்படுத்த முடியாது! எந்தை ஈசன் என் அப்பன் எம்பெருமான் அரகரா சிவா மறையவனே வேதனே வேத நாதனே சிவ மூர்த்தியே என்றெல்லாம் உள்ளிருந்து எழும் நாமங்களால் போற்றுவார்கள் விரதிகள். விரதிகள் என்றது துறவிகளைக் குறித்தது. பிரமச்சரியம் விரதங்களுள் எல்லாம் சிறந்தது. பாவம் திருப்பணிச்சபை காரியதரிசிக்கு விரதம் என்ருல் உண்மையில் என்னென்று தெரியாது. அவர் பாவம் நினைப்பர் காலை நேரச் சாப்பாட்டை விடுத்து மத்தியானம் திறமான உணவு உண்கின்றதுதான் விரதம் என நினைப்பார் போலும் ஆனுல் பிரமச்சரியம் ஒரு விரதம். ஈசன் நாமம் அன்றி வேறு பேசாதது ஒரு விரதம். மௌனம் ஒரு விரதம். திருமணம் முடித்தும் புத்திரப் பேற்றின் பொருட்டாக அன்றி வேறு மனைவியைத் தீண்டாமை ஒரு விரதம். உண்மை பேசல் ஒரு விரதம். உண்ணப் போகுமுன் ஒருவர்க்கு உணவூட்டி பின் உண்ணல் ஒருவிரதம். சத்தியம் காப்பது ஒருவிரதம். திருப்பணிச்சபையில் கடமை ஆற்றியும் கோவில் சொத்தில் தன் செலவிற்கு தீண்டாமல் இருப்பது அல்லது கோவில் பொருளை தான் பாவியாதிருப்பது பெரிய ஒரு விரதம்: இவைகள் மட்டுமன்றி இங்கு சம்பந்த சுவாமிகள் குறிப்பிட்ட விரதிகள் மாவிரதம் கங்காளம் பாசுபதம் முதலிய வேடத்து துறவிகளையும் குறிப்பிடுவதாகும். இதனை திருவாரூர் திருவாதிரை விழாவில் சேவித்த திருநாவுக்கரசர்

### வித்தக வேட வெண்தலை மாலை விரதிகள்.

என்று கூறி பின்னரும் அவர்கள்

### விம்மா வெருவா விளியாதெளியாவெருட்டுவார் தம் மாண்பிலராய் தரியார்தலையார் முட்டுவார்.

என்றெல்லாம் பாடியருளினுர். இவை எல்லாம் பாவம் காரியதரிசிக்கு தெரியுமோ? தெரியாது. அது பாவம் கள்ளக் கடத்தலில் பொன் பொருள் கொண்டு ஓடும் காவி உடுத்த வேடதாரிகளை மடாதிபதிகளை கடவுள் எனப்போற்றி அவரிடம் சில புத்தி கேட்டு அதன்படி திருக்கேதீச்சரத்தை நடத்தப் பார்க்கின்றது. இந்தியாவில் இலங்கையில் உள்ள மடாதிபதிகள் வெளியில் காவியும் திருநீற்றுக் கோலமும் உள்ளத்தில் கபடமும் காமக்குரோதமும் நிறைந்தவர்கள் என்பது இங்கு பல நல்நெறி நிற்கும் அடியார்க்கு விளங்கும். நமக்கும் இந்த மடாதிபதிகளை நன்கு தெரியும்: இவர்களில் பலர் நடந்து கொண்ட செயல்களை நேரில் கண்டறிந்த பின் தான் இந்த மடாதிபதிகளும் மடங்களும் தூய துறவின் எல்லைக்கு எட்டுணையும் சார்வாகார் என்பதை நன்கு தெரிந்து கொண்டேன்,

திருநாவுக்கரசர் ஓரிடத்து

"சாம்பலைப் பூசி தரையிற் படுத்து உன் தாள் இணைக்கே ஏம்பலிப்பார்கட்கு இரங்கு கண்டாய்"

என துறவின் நியதியை நன்கு வெளிப்படுத்தி உள்ளார்:

இதுமட்டன்றி ஊர் எல்லாம் அட்ட (சமைத்த) சோறு நம்மதே பார் எல்லாம் படுக்கும் பாயல் கோவணம் பரிக்கும் ஆடை என திருவிளையாடல் புராணத்து பரஞ்சோதி முனிவர் கூறுகின்ருர், இதனுலே துறவிகள் யார் எவ்வாருயவர் என்று உணரலாகும்.

சிவன் அடிமைத் திறத்தை உணர்ந்து முற்றிலும் தம்மை சிவனுக்கு அர்ப்பணித்து வாழ்விலும் தாழ்விலும் நோயிலும் பல துயரிலும் தம்மையாதும் சிந்தியாவகை வாழ்கின்ற பெருமக்களாகும் துறவிகள் விரதிகளின் பெருமை பற்றி பெரிய கார் பெரிய உத்தியோகம் பெரிய கருமம் பெரிய போகங்களுடன் வாழ்கின்ற திருப்பணிச்சபையார்க்கே விளங்காது.

சம்பந்தசுவாமிகள் திருநீலகண்டப் பதிகத்து,

"மூலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றும் எவையும் எல்லாம் விலைத்தலை ஆவணங்கொண்டு எமை ஆண்ட விரிசடையீர்"

எனக் கூறுகின்ருர்: இதை நன்கு நாம் சிந்தித்தால் துறவு மனப்பான்மை சிவன் அருளால் வருவது: சம்பந்தப்பெருமான் ஓர் துறவி. அதற்கு எட்டுணையும் ஐயமில்லை; திருநாவுக்கரசர் ஓர் துறவி. இருவரும் துறவின் எல்லைக்கு இலக்கண வரம்பானவர்கள்:

திருநாவுக்கரசர் தமது துறவின் இலட்சணத்தை மறு மாற்றத் திருத்தாண்டகத்து மொழியும் போது அட்டு உண்பார் இட்டு உண்பார் விலக்கார் ஐயம்; பூமிதேவி உடன் கிடந்தால் புரட்டாள் பொய்யன்று மெய்யே எமக்கு உறவானவர் உருத்திர பல் கணத்தினேர்கள் நாம் ஆர்க்கும் குடி அல்ல; பொன் பூண்டு துகில் உடுத்து திரிவார் சொல்லும் சொற்கேட்கக் கடவோமோ? நாம் துரிசற்ருேம்; இரு நிலத்தில் எமக்கு எதிராளியாவார் யாருமில்லை என்று இன்ன வகையான பல தூய துறவின் இலட்சணத்தை நன்கு உணர்த்தி உள்ளார்.

உண்மையான ஒரு துறவி ஏதும் ஒரு நாட்டம் இல்லாதவர் அவர்க்கு ஓர் நோக்கம் இல்லை. உண்மையான துறவி வேண்டியதை எல்லாம் கடவுள் செய்வார்: அவர் விரும்பியதே உலகம். அவர் யாதாக இவ்வுலகம் அமைய வேண்டுமென நினைந்தாரோ அதன்படி நடக்கும்:

இது அல்லாமல் பெண்கட்கு கற்பு என்பதும் ஓர் விரதம். அது தான் தன் கணவன் கை தன் மேனியில் தீண்டுவதன்றி பிறர்ஒருவர் தீண்டுதலை அதாவது பிறன் உடலும் தன் மேனியும் பிரயாணம் கோயில் வழிபாடு உத்தியோகம் முதல் பல வாழ்க்கைத் துறைகளிலும் தீண்டுதலை ஓர் கற்புடைய பெண் விரும்பாள்: இத்தகைய கற்புடைய பெண்ணுல் இயற்கையையும் வெல்ல முடியும். ஓர் முனிவருடைய பத்தினி சூரிய உதயத்தையே நிறுத்த முடிந்தது என்ருல் கற்பின் விரதத்திற்கு வேறு காரணம் வேண்டுமோ? சேக்கிழார் பெரியபுராணத்து "மழைக்கு உதவும் பெருங்கற்பின் மனைவியார்" எனக் கூறினர்

இவற்றையும் நாம் சிந்தையில் கொண்டால் துறவு அல்லது விரதம் என்பதின் திண்மை ஓரளவு விளங்கலாம்.

அடுத்து ஒரு நாள் யோகசுவாமி என்னை நோக்கி நீ முருகனைக் கும்பிடுவாயோ எனக் கேட்டார், நான் ஓம் சுவாமி என்றேன். உடனே ஒரு சிரிப்புடன் என்னை நோக்கி நீ முருகனைக் கும்பிடுவாய். ஆனல் நான் முருகனைக் கும்பிடுவதில்லை. இதற்கு பதிலாக முருகன் என்னை வந்து கும்பிட வேண்டும். ஓம் காணும் முருகன் என்னைக் கும்பிட வேண்டும். நான் கும்பிடேன். உனது முருகன் வள்ளிநாயகியாரைக் கும்பிட்டவர் தானே! என்று இப்படிச் சுவாமி சொல்ல நான் திகைத்துப் போனேன்: இதென்ன இது சுவாமி கடவுள் வந்து தன்னைக் கும்பிட வேண்டு மென்று சொல்கிருர். இதன் மர்மம் என்ன? கடவுள் மனிதனை எப்படிக் கும்பிடுவது? கந்தசுவாமி வள்ளியை எங்கு கும்பிட்டார்? என்றெல்லாம் மனதில் எண்ணிட உடன் என்னை நோக்கி வள்ளியை முருகன் கும்பிட்டவன்: என்னிடம் அவர் வருவார்! வந்தால் நான் அவரை நோக்கி அப்பால் போய் விடும் என்பேன். என்னையும் பல தடவை கும்பிடுவார் என்று கூறி சரி நீர் வாரும் என்றதும் என் மனம் அன்றைய பேச்சின் காரணம் விளங்காமல் திகைத்த மனத்துடன் இதென்ன இது இன்று என் மனதை பழுதாக்கியாச்சே என்செய்யலாம் என்ற கவலையுடன் திரும்பிட எத்தனிப்ப உடன் சுவாமி

ஞாலமதில் ஞான நிட்டை உடையோருக்கு நன்மையொடு தீமை இலை நாடுவது ஒன்றில்லை. எனத் தொடங்கும் சிவஞான சித்தியார் பாட்டைப் பாடத் தொடங்கலும் இருட்டில் வெளிச்சம் கண்டதுபோல் திடீரென சுவாமி சொன்னதின் மர்மம் விளங்கியது. ஞான நிட்டையில் இருக்கும் துறவியினை நைட்டிக பிரமச்சாரியை சிவனே தான் தேடி வருவான். இது தெளிவாயது: அது தான் ஞான நிட்டை உடையோர்க்கு நாட்டம் யாதுமே இலாதிருக்கும் போது அவர் உயர்வு எம்மால்

பேசும் தகைமை அனறு.

இப்படி எண்ணும் போது தான் கந்தபுராணத்து வள்ளிநாயகியாரை முருகக் கடவுள் சென்று கும்பிட்ட பாடல் நினைவிற்கு வந்தது.

ஈறின் முதியோன் இரங்கி இருந்து குறை கூறி மதிமயங்கி கும்பிட்டு நின்ற அளவில்.

என்பதே அப்பாட்டு. அப்பாட்டு ஞாபகம் வரலும் இதுகாறும் வள்ளிநாயகியார் ஒரு பெண் என்றும் கந்தன் ஒரு ஆண் என்றும் நினைந்திருந்த நினைப்பெல்லாம் அடியோடு மறைந்தன. ஆன்மாவே வள்ளி என்ற நினைப்பு வந்தது. பரம ஆன்மா முருகன் என்பது தெளிவாயது.

திருஞானசம்பந்தர் சுந்தரர் இவர்கள் தாம் ஓதிய திருப்பதிகங்களை ஓதுவார் இன்ன பயன் அல்லது பலன் பெறுவார் எனக் கூறியுள்ளார் அதிலே ஒரு பயனுக ஓதிடும் அவர்கள் உயர்ந்தாரொடும் கூடுவரே என்று பாடியுள்ளார்கள்.

இந்த உயர்ந்தார் யாரென நோக்கும்போது ஞானநெறியின் உயர்வரம்பில் நின்ருேரும் ஞானநிட்டை உடையோருமாவர்: கல்வியின் சிறப்புடையாரை நாம் ஞானி என்று சொல்லமுடியாது; ஏனெனில் இன்றைய கல்வியில் சிறப்புடைய பலரும் தமது கல்வியைப் பட்டம் பொருள் பதவிபெற விற்று உண்பவரேயாகின்ருர். மடாதிபதிகளும் இவர் வரிசையில் உளர். ஓர் மடாதிபதி ஞானத்தின் சிறப்பை உணர்ந்தால் தான் தெரியாத்தனமாக வேடத்தில் சிக்குண்டேன்: ஆதீனமென்ற கோட்பாட்டில் அகப்பட்டேன் என்று பல அல்லல்மிக்க சிந்தையைக்கொள்வார். இதை விடுத்து எப்பொழுது வெளியேறுவேன் எனப் பதைபதைப்பார்.

துறவியின் அல்லது விரதியின் இலட்சணத்தை எடுத்து உணர்த்தவந்த பொய்அடிமையில்லாத புலவர்கள் ''துறவிக்கு வேந்தனும் துரும்பு'' என நிச்சயித்தனர். துறவிக்கும் விரதிக் ம் வேண்டியது திருவருட்பேறே அன்றி உலக மதிப்பு அல்ல. அருணகிரியார் இந்தத் துறவின் இயல்பை உணர்ந்து எம்பிரான் முருகனை வேண்டுதலிலே ''உலகம் என்று பேச அறியாத உருவம் ஒன்று இலாத பருவம் வந்துசேர உபயதுங்க பாதம் அருள்வாயே'' எனக் கூறிடுகின்ருர்: இதன் நிலையை உணர்ந்தால் உலகம் என்ற ஒரு தன்மை இருப்பதாக உணராதவர் ஓர் துறவி அல்லது விரதிகள்.

இந்தத் துறவிகள் விரதிகள் ஆலயம்தோறும் சென்று இறைவனை வாயாரப் பாடுவார்கள். இவர்கள்தம் வாயினுல் என்ன என்ன நாமம் சொல்ல வேண்டுமோ அவை எல்லாம் சொல்லிப் பாடுவார்கள்: இவற்றைத் திருநாவுக்கரசர் தம் பதிகம் பலவற்றில் கூறுகின்ருர். அவற்றுட் சில;

வாய் வேண்டுவ சொல்லிவாழ்வேன் — என்றும்,
நாவார நம்பனையே பாடப்பெற்ருேம் — என்றும்,
பன்னிய செந்தமிழ் அறியேன் கவியேன் மாட்டேன் — என்றும்
பாடஅடியார் பரவக்கண்டேன் — என்றும்,
பாமாலைபாடப் பயில்வித்தானை — என்றும்,

மாணிக்கவாசகரும் தம் பாடலில்

நினைவித்துத் தன்னை நெஞ்சத்திருந்து புனைவித்த ஈசன் — என்றும்

இப்படியே பலரும் வாயார இறைவன் திருமுன்னர் சென்று பாடுதலை நல்லதொரு செயலாகப் பாவம் நீக்கும் செயலாகச் சொல்லி உள்ளனர்'

இப்படித் தருமம் உணர்த்தும் துறவின் எல்லையில் நின்ற நாயன்மார்கள் இவ்வண்ணம் சொல்லியிருப்ப இதைப்பற்றி ஒன்றுமே சிந்தியாது திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைக் காரியதரிசி தூய துறவி ஜோதிசுவாமிகள் சிவநாமம் பாட எழுந்திட அதைத் தடைசெய்தது பெரும்பாதகமாகும். அன்றியும் விரிந்த அறிவிலாத குறுகிய மனப்பான்மையாகும்: எனக்குத் தெரிந்தபடி திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையாருக்கு 1—ம் திருமுறை 2—ம் திருமுறை 3—ம் திருமுறை ஏன் வகுக்கப்பட்டது? இதில் என்ன என்ன தேவாரங்கள் அடங்கி உள்ளது? என்பதே தெரியாது என நினைக்கவேண்டியிருக்கின்றது; உண்மையில் உலகில் சிவன்பேரால் எழுந்த பாடல் அனைத்தும் சிவன்புகழாகக் கருதப்பட்டு அவையும் திருமுறைதாம் என்பதைத் திருநீறு அணிகின்ற நாம் எல்லோரும் உணர்ந்து ''சிவ'' என்னும் நாமத்தைமதிக்கப் பழகவேண்டும்,

சுந்தரமூர்த்திசுவாமிகள் தமது பதிகம் ஒன்றில் ''நல் இசைவல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கரசன் என்று இவர்கள் சொல்லியவே சொல்லி ஏத்து உகப்பானை'' என்கின்ருர். இதன்படி உணர்ந்தால் சுந்தரர் ஞானசம்பந்தர் பாடலைத்தான் ஓதி இருக்கலாம்: வேறு தாம் பாடியிருக்க வேண்டியதில்லை. ஆனுல் சுந்தரர் மிகவும் அழகாகத் தமது பதிகங்களைப் பாடி உள்ளார். இறைவனை மட்டுமன்றிச் சிவனடியார்களையும் பாடிஉள்ளார், இதன் கருத்தென்ன என ஆராயப்புகின் சிவனுக்கு ''அர்ச்சனை பாட்டேயாகும்'' எனச் சிவன் அவருக்கு மொழிநது; தம்மைப் புாடுவதற்கு ''பித்தா'' எனத் தொடங்கிப் பாடு என அடி எடுத்துக்கொடுத்ததுமன்றிச் சிவனடியாரைப் பாடுதற்கும் ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' எனப்பாடு என அடி எடுத்துக் கொடுத்தார் எனப் பெரிய புராணம் சொல்லுகின்றது.

திருமுறை வைப்பில் பெரியபுராணம் 12—ம் திருமுறையாகக் கருதப்பட்டால் திருமுறை அன்றித் திருக்கேதீச்சரத்தில் வேறு ஓதக்கூடாது என கட்டளையை ஆங்கிலத்திலும் செய்யமுனைந்த திருப்பணிச் சபைக் காரியதரிசி பெரியபுராணம் காட்டும் நீதியை ஏற்கமறுப்பதின் நோக்கம் விளங்கவில்லை. நன்கு நாம் இவற்றைச் சிந்திப்போமேயானுல் திருப்பணிச்சபைக் காரியதரிசி ஓர் குறுகிய மனப்பான்மையிலும் குரோத மனப்பான்மையிலும் நடந்துள்ளார் என்பது வெளிப்படை.

தான் ஓர் சட்டத்தரணி; தனக்கு எல்லாம் தெரியும் என்றவகை நினைக்கின்ருர். திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா நாயன்மார் காட்டிய அறநெறிக்குப் புறம்பாக அமையாது. நாயன்மார் சொல்வதை மறுத்தோ எதிர்த்தோ அன்றிவிலக்கியோ சொல்வதற்கு 0ம் திருமுறை எனப்படும் திருவிசைப்பாவில் காரணம் காட்டமுடியாது: சிவ என்னும் எழுத்தை உள்ளத்து அள்ளூறல் என்பது அதுவும் தூய ஓதலின்பயனுக விளைவது என்பது காரியதரிசிக்கு விளங்கவில்லைப்போலும்; அடுத்து பஞ்சாக்கரம் பற்றி சொல்லும் முறைகள் யோக மார்க்கம்: அந்த நிலையில் சாத்திரம் தானும் நாயன்மார் சொல்லும் அறத்திற்கு முரணுக அமைத்தால் அது ஏற்கப்படமாட்டாது. திருஞானசம்பந்தர் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே எனச் சொல்லிவிட்டு ''சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்கள்'' என்கின்றபோது சாஸ்திர அறிவில் தன் உள்ளத்து உள்ளாக தியானிக்கும் சாதுக்களையும் நீங்கள் சிவனைப் பணிந்து தொண்டு செய்தால் அன்றி உண்மை காணமாட்டீர் என மொழிகின்றதேயாகும். சாக்கிய நாயனுர் வரலாறு இதற்குச் சான்று.

பசுவினை உரித்துத் தின்று உழல்கின்ற பறையராக ஒருவர் இருந்தாலும் அவர் எம்பிரான் சிவன்பால் அன்புடையவராக இருந்தால் அவரைத்தான் நம் மக்களே கண்டுகொள்ளுங்கள் நாம் வணங்கிடும் கடவுளாகும் என எம்பிரான் திருநாவுக்கரசர் சிவன் அடியார் பெருமையை தமது ''சங்கநிதி பதுமநிதி'' எனத் தொடங்கிப் பாடிய தேவாரத்தில் கூறிடுகின்ருர்.

சங்கநிதிகள் பதுமநிதிகள் இவை இரண்டிலுமே எல்லாப் போக போக்கியங்களும் நிறைந்தன. இவை இரண்டையும் பெற்றதுமட்டுமன்றி இந்தப் பூமிமட்டுமன்றி வான் உலகம் எல்லாம் அரசாளத் தருவரேனும் அவர் செயல் அழியும் தன்மை உளது. அதில் சிறப்பில்லை என்கின்ருர் அந்தத் தேவாரத்து. ஏன் அப்படிச் சொல்கின்ருர்? செல்வந்தராய் அரசராய் அதிபதியாய் இருப்பார்கள் பலரும் உண்மையான சிவன் அடிமைத் திறத்தை உணரப்போறவர் அன்று. அது அவர்கட்கு எட்டாதது ஒன்று. அரச பதவியும் அதிகாரமும் பொருள் செல்வமும் ஒருவர்க்கு கூடக்கூட அவர் அகந்தையும் அத்துமீறி இன்னமும் பெருகுமேயன்றி உண்மை வழிக்கு அது திரும்பாது. இதனை திருநாவுக்கரசர் அத்திருத் தாண்டகத்தில் நன்கு தெளிவுபடுத்துகின்ருர்.

இந்த ஒரு தேவாரத்தை நன்கு விளங்குவோமேயானுல் நாயன்மார்கள் சிவன்பால் அன்புடைமையில் இரண்டாட்டல் அதாவது அவர் உயர்வு இவர் தாழ்வு என்ற தன்மை எக்காலமும் கொள்ளவில்லை என்பது யாருக்கும் விளங்கும், இந்தவகையிலே சிவன் அருளைப் பெற்ற எம்பெருமக்களாகும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், திருமூலர், சேரமான்பெருமாள் முதல் அனைவரும் இந்தவகை இரண்டாட்டல் இலாத தூய கபடமற்ற கொள்கையில் நின்றவர்.

ஆனுல் என்னவோ தெரியாது, சைவநெறியில் சிவனிடம் அன்பு கொண்ட அடியார்களிடத்து தற்பொழுது அவர் பெரியர், இவர் சிறியர்; அவர் பாடுவதன்றி இவர் பாடக்கூடாது. அப்பாடல் அன்றி இப்பாடல் பாடக்கூடாது என்ற ஒரு கொள்கை எம் நாட்டில் பரவிவந்து சிவனடிமைத்திறத்தில் பெரும் அபாயகரமான ஓர் நிலையை உருவாக்கி உள்ளது. உயர்வு தாழ்வு என்னும் இருமையையும் கொள்ளும் எவரும் சிவன் அருள் பெறற்கு அருகதையாகார். அது ஞானிகள் முடிபாகும், இந்தவிதமான இரண்டாட்டல் கொள்கைக்கு வித்திட்டவர் ஆறுமுகநாவலர் எனலாம். இந்த இரண்டாட்டல் கொள்கையில் நாவலர் நின்றவர். இவரைப் பின்பற்றிப் பலர் இந்த சைவநெறியில் மீளவும் சிவன் அடிமைத் திறத்தில் பாகுபாடு காண்பிக்கின்றனர். இந்நிலையில் திருக்கேதீச்சர நிர்வாகமும் வந்ததையிட்டு பெரிதும் நாம் வருந்துகிருேம்

செம்மை வெண்ணீற்று ஒருமைப்பாட்டை பெரியபுராணம் வலி உறுத்திக் கூறுகின்றது. அந்த ஒரு கொள்கையை நாவலர் பெரிய புராணத்தை அச்சேற்றிப் பதிப்பித்தும் உணர்ந்து கொள்ள முடியவில்லை. இதன் காரணம் விளங்கவில்லை.

சிவ என்னும் சொல் ஈசனுடைய நாமம். இதனை முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள். மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள் என திருநாவுக்கரசர் கூறத் தொடங்கி முடிவில் தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே என்றுசிவஎன்னும்நல்நாமம் எத்தகைய சக்திவாய்ந்ததுஎன்பதை நிரூபித்துவிட்டார்.

ஆதலால் திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை அன்று சிவநாமம் பாட எடுத்த ஜோதி சுவாமிகளைத் தடுத்து நிறுத்தியது சிவநிந்தனைக்குரிய குற்றமாகும். அத்துடன் காரியதரிசியின் அச்செயல் சைவ உலகிற்கே ஓர் பெரும் அபசாரத்தை விளைவிப்பதாகும்.

நாயன்மார் பாடல் பெற்ற சிவதலம் புண்ணியத்தலம். நாயன்மார் காட்டிய அறநெறிகளை முற்றிலும் புறக்கணித்து ஏதோ புதுப்புதுச் சட்டங்கள் வருவிப்பது மிகவும் வேதனை தருகின்றது. நாயன்மார் காலத்து அவர்களால் வருவியாத ஒன்றை நாம் வருவித்து சைவமக்களில் கட்சிகளை உருவாக்கல் முறையன்று.

சாயிபாபா சுவாமிகள் சமிதியாதல் அல்லது திவ்விய ஜீவன சங்கமாதல் யார் எனினும் திருக்கேதீச்சரத்து என் குருமணி சிவனைச் சென்று பணிந்து வாயாரப் பாடுதலை யாரும் இவ்வுலகில் தடைசெய்ய முடியாது.

ஆனதினுலே திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைக் காரியதரிசியின் விளக்கமில்லாத இச்செயலால் பெரும் மனக்கொதிப்பு உண்டாகின்றது. திருமுறைகளை நாம் மதிக்கிருேம் எனக் காட்டுவதற்குச் சிவநாமபஜனையைத் தடைசெய்வதால் நிகழ்ந்துவிடமாட்டாது: அது மிகமிகப் பேதைத்தனம். திருமுறைகள் வேதத்தின் வழிவந்தன. முதல் ஏழு திருமுறைகளும் தமிழ் வேதம் எனப் பெரியபுராணம் சொல்லும். வேதக்கருத்துக்களுக்கு முரண்பாடாக ஒலிபெருக்கி பாவனை, வாஞெலி அஞ்சல் கோயில்நிர்வாகத்தில் வியாபாரநோக்கம் இப்படிப் பலப்பல திருகுதாளங்களைச் செய்யும் நிர்வாகம் சிவநாமபஜனையைத் தடைசெய்வதென்ருல் அதை உண்மைவிளங்கும் எந்த ஒரு சைவனும் ஏற்கான். திருமுறையை மதிப்பதற்குச் சட்டம் இயற்றுவதிலும் திருமுறையில் சொல்லிய தருமத்தை விளங்கி நடத்தலே நன்று; எவ்வாறுயினும் ஜோதிசுவாமிகளின் பஜனையைத் தடைசெய்துவிட்டு எமக்கு அனுப்பிவைத்த பதிலை நாம் நன்றுடையது என ஒருபோதும் சொல்லோம்; அது துறவிகளையும் சிவனடியார்களையும் நிந்திப்பதாக அவர்கட்கெல்லாம் திருக்கேதீச்சர நிர்வாகம் ஓர் மேலதிகாரிகளாக இருக்கிருர்களென்பதை வெளிப்படுத்தும் ஆங்காரச்செயல் என்றே சொல்வோம்.

சிவனடியாரையும் அவர்பணிகளையும் சிவநாமத்தையும் திருக்கேதீச்சர நிர்வாகம் நிந்திக்கிறது என்பது நல்ல தெளிவாகக் காட்டப்பெற்றது. அதன் நோக்கம் திருக்கிகதீச்சர ஆலயம் தமது அதிகாரத்துடன் இயங்கும் ஓர் அதிகாரபீடம்; அது சைவ அறநெறிக்குரிய இடமல்ல என்றதை உலகறியச் செய்துவிட்டது.

இந்த நிலையில் காரியதரிசி இன்னமும் சைவநெறியின் புனிதத்தை பழுதாக்காமல் இருந்திட விரும்பின் தான்செய்த தடையை இனி நிகழாதுநீக்கி ஜோதிசுவாமிகளிடம் மன்னிப்புக் கோரவேண்டும்: அன்றேல் தான் திருப்பணிச்சபையால் விலகவேண்டும். அது செய்யாமல் தொடர்ந்தும் பல பழுதுகளைச் செய்தால் பாடல்பெற்ற தலத்தின் புண்ணியம் பழுதடையும்.

# வேதங்களும் வேதஇலட்சணங்களும் ஓதும் முறைகளும்.

## வேதங்கள் ஈசன் திருவாக்கு

நான்கு வேதங்களும் ஈசனது திருவாக்கென்பதே நாயன்மார்கள் ஆழ்வார்கள் உள்ளிட்ட நமது வைதீக சமயத்தைச் சார்ந்த எல்லாப் பெரியோர்களின் முடிவும், இவ்வுலகம் ஈசனால் சிருஷ்டிக்கப்பட்டு அநேக காலமிருந்து பிறகு பிரளயத்தையடைகிறது. எத்தனை காலம் உலகம் வாழ்ந்திருந்ததோ அத்தனை காலம் அவ்விதமான பிரளய நிலையில் இருக்கிறது. அப்பிரளய காலத்திற்குப் பின் திரும்பவும் சிருஷ்டி ஏற்படுகிறது. இவ்விதமே பகலும் இரவும்போல் சிருஷ்டியும் பிரளயமும் மாறி மாறி வந்துகொண்டே யிருக்கின்றன. ஒவ்வொர் பிரளய காலத்திலும் வேதமும் ஈசனிடம் ஒடுங்கி நிற்கிறது. பின்னர் ஒவ்வொரு சிருஷ்டி காலத்திலும் அவரது அருளால் பிரம்மாவிற்கும் இந்திரியங்களை அடக்கி யோகமார்க்கத்தால் தவம் செய்யும் முனிவர்கட்கும் உள்ளத்தே அவ்வேதம் பிரகாசிக்கின்றது. அனாதியான வேத மந்திரங்கள் ஆகாசத்தில் சப்த ரூபமாக எப்போதும் இருக்கின்றன. அவைகளை ரிஷிகள் தங்களுடைய யோகமார்க்கத்தால் அறிந்து கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு அந்த மந்திரங்களைக் கிரகிக்கும் திவ்ய செவிகள் உண்டு. யோக சாஸ்த்ரத்தில் வெளியிலுள்ள பெரிய மகதாகாசமும் செவிகளில் உள்ள ஆகாசமும் ஒன்றாகி விட்டால் பெரிய ஆகாசத்திலுள்ள சப்தங்களை யெல்லாம் கிரகிக்கும் சக்தி யோகியினுடைய சுரோத்திரத்திற்கு [செவிக்கு] ஏற்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது: 'சுரோத்ர ஆகாசயோர் சம்பந்த சம்யமாத் திவ்யம் சுரோத்திரம்' என்கிறது யோக சூத்ரம்: எங்கும் நிறைந்து அபேதமான நிலையை யடைந்தவர்களுக்கு அந்தச் சப்தங்கள் தெரியும். அப்படி ரிஷிகளால் கிரகிக்கப்பட்ட சப்தங்கள்தாம் வேத மந்திரங்கள்.

## வேதம் வந்த வழிகள்

அவ்விதம் பிரகாசிக்கிற வேதத்தை முனிவர்கள் மனப்பாடம் செய்து விரதங்களுடனும் நியமங்களுடனும் புத்ரர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் வாக்கினாலேயே உபதேசித்து மனப்பாடம் செய்வித்து வந்தார்கள். அதற்கேற்பட்ட விரதங்களுடனும் நியமங்களுடனும் வேதத்தை கிரகித்துக் கொண்டாலேயே மந்த்ரசித்தி ஏற்பட்டு அவ்வேதம் தன்னை ஓதுவோனுக்கும் அவன் மூலம் மற்ற உலகத்திற்கும் நற்பயனைத் தரும். வேதம் அனாதி காலந்தொட்டு எழுதப்படாமல் வாக்கினாலேயே குருசிஷ்ய பரம்பரையாய் உபதேசிக்கப்பட்டு வந்திருக்கிறது. தமிழ் நிகண்டுகளிலும் இலக்கியங்களிலும் வேதத்திற்கு 'மறை' 'ஓத்து' என்ற பெயர்களுடன் எழுதாக்கிளவி என்ற ஒரு பெயரும் ஏற்பட்டிருக்கின்றது. திருவள்ளுவா மாலையில் வெள்ளிவீதியார் செய்யாமொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும் பொருளொன்றே என்கிறார்: செய்யா மொழி வேதம். வேதத்தின் ஆறங்கங்களில் முதலங்கமான சிக்ஷை எனும் அங்கத்தில் வேதத்தை எழுதிப்படித்தல் ஆகாது என்ற விதியையும் காண்கிறோம்.

## வேதம் காலவரையறை அற்ற அனாதி

ஒரு மனிதன் உயிர் வாழும் வரை தன்னுடைய பிரயத்தினமில்லாமல் எப்படி மூச்சுக் காற்று ஓடிக் கொண்டிருக்கின்றதோ அவ்விதமே நித்யமாய் ஈசனுடைய முகத்தில் வேதம் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது என்பதே நமது சமயத்தினுடைய சித்தாந்தம்.

பதினான்கு உலகங்களும் ஒரு ராஜ்யம். இந்த ராஜ்யத்திற்கு ஒரு சக்ரவர்த்தி. அந்தச் சக்ரவர்த்திக்கு எல்லா ஜீவராசிகளும் பிரஜைகள் சக்ரவர்த்தியும் அனாதி. ப்ரஜைகளும் அனாதி. ஆனால் ராஜ்யமும் சக்ரவர்த்தியும் பிரஜைகளும் இருந்தால் அதற்கு ஒரு சட்டம் வேண்டும்; இவர்கள் அனாதியானால் சட்டமும் அனாதி. அந்த அனாதிச் சட்டமே வேதம். உலகம் உற்பத்தி ஆகிறது வளர்கிறது பிரளயம் அடைகிறது: திரும்பவும் உற்பத்தி ஆகிறது பிரளயம் அடைகிறது. இப்படியே சுற்றிச் சுற்றிக் கொண்டிருக்கிறது. சக்ரவர்த்தியும் சட்டமும் மாத்திரம் ஸ்திரம். ஜீவன்கள் ஸ்திரமாயினும் ஜன்மமெடுத்து சுற்றுகிறார்கள். ஒவ்வொரு சிருஷ்டியின் ஆரம்பத்திலும் அந்தச் சக்ரவர்த்தி அதிகார புருஷர்களைச் சிருஷ்டி செய்கிறான். அந்த அதிகாரிகளுக்கு வேண்டிய யோகசக்தியைக் கொடுக்கிறான். அந்த யோக மார்க்கத்தல் தான் ச்ரோத்திரத்திற்கும் வெளி ஆகாசத்திற்கும் அபேதமான ஒரு ஸம்யமமும் அடங்கியிருக்கிறது. அதனால் திவ்ய ச்ரோத்திரம் கிடைக்கிறதாம். அந்தத் திவ்ய ச்ரோத்திரத்தைக் கொண்டு வெளி ஆகாசத்தில் ஸ்திரமாய்க் கிடக்கும் அநாதி சப்த அலைகளை ஈசனுடைய அருள் சகாயத்தால் அந்த அதிகார புருஷர்கள் அடைகிறார்கள். அவர்களே முதல் முதலில் வேதத்தை அறிந்தவர்களாகிறார்கள். அவர்களே மந்த்ரத்திற்கு மகரிஷிகள்.

## வேதஅத்தியயனம் ஓர் மந்திரயோகம்.

எம் சைவநெறியில் வேதாத்யயனம் ஒரு மந்த்ரயோகம். ஒவ்வொரு நாடி அசைவதனால் சித்தத்திற்கு ஒவ்வொரு விதமான விகாரங்கள் ஏற்படுகின்றன. சில நாடிகளால் காம விகாரங்களும் சில நாடிகளால் சோம்பல் விகாரங்களும் சில நாடிகளால் சோக விகாரங்களும் உண்டாகின்றன. இதை மாற்றிச் சொல்லின் காம விகாரம் ஏற்படும்போது சில நாடிகளில் அசைவும் போக விகாரத்தினால் சில நாடிகளில் அசைவும் அனுபவத்தில் காணப்படுகின்றன. சாந்தம் ஏற்படும்போது முகத்தில் ஒரு களை உண்டாகிறது. அந்தக் களை சில நாடிகள் குளிர்ந்ததின் பயன். இவ்விதம் மனோவிகாரங்களால் நாடிகளில் சில விகாரங்கள் ஏற்பட்டால் மனோ விகாரத்தின் சாந்தத்தால் குளிர்ச்சி ஏற்பட்டால் அந்த நாடிகளை வசப்படுத்தி விட்டால் காமக் குரோதங்களையோ சாந்தத்தையோ நமது இஷ்டப்படி வரவழைத்துக் கொள்ளலாம். அதற்கு வெளிப் பொருள்கள் தேவை இல்லை. இப்படி நாடிகளை ஸ்வாதீனப்படுத்த ப்ராணாயாமத்தை முக்கியமாகக் கொண்ட ஹடயோகம் ஒரு மார்க்கம். அதே விதமாய் மந்த்ர யோகமும் ஒரு மார்க்கம். ஒரு எழுத்தை நாம் உச்சரிக்கும்போது நமது நாக்கு உதடு மேல்வாய் கீழ்வாய் கண்டம் முதலியவைகளில் இடைவெளி வழியாக ப்ராணவாயு வெளிப்படுகிறது. அப்பொழுது தான் அக்ஷரத்வனி உண்டாகிறது. அந்த அட்சரத்துவனிக்குக் காரணமாக எந்தெந்த உறுப்புகளில் ப்ராணவாயு ஸஞ்சரிக்கிறதோ அந்தந்த இடம் ஸம்பந்தப்படும் நாடிகளில் சலனம் ஏற்படுகிறது: எந்தெந்த நாடிகளின் சலனத்தினால் மனதின் எவ்வெவ்விதமான விருத்திகள் ஏற்பட்டு இகலோக க்ஷேமமும் பரலோக க்ஷேமமாகிய மோக்ஷம் முதலிய புண்யமும் சாசுவதமான பலனும் ஏற்படவேண்டுமோ அதற்கு அனுகூலமான உச்சாரணங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு வேறுவிதமான உச்சாரணங்களை விலக்கி அமைந்தனவே வேத மந்த்ரங்கள்.

## வேதம் ஓதுதல் அந்தணர் முதற் கடமை.

அவைகளைத் திரும்பத் திரும்ப ஜபமும் பாராயணமும் செய்வதால் எந்தெந்த நாடிகளில் திருப்பித் திருப்பிச் சலனம் ஏற்பட்டு ஆத்ம சேமம் கிட்டுமோ அந்த சேமத்தைத் தாங்களும் அடைந்து, தங்கள் மந்த்ர சக்தியால் உலகத்தோரும் சேமம் அடையச் செய்வதே வேதியர்களின் கடமை: இதுவே அவர்களின் பிறவிக் கடமையுங்கூட. ஒவ்வொருவருக்கும் ஒரு பிறவிக் கடமை இருக்கிறது. ஒவ்வொருவரும் தம் பிறவிக் கடமையைத் தவறாமல் செலுத்தி அதன் பயனைமாத்திரம் எல்லோரும் அடையும்படிச் செய்வதே சாஸ்திர முறை.

''ஐம்பதெழுத்தே அனைத்து வேதங்களும்'' என்னும் திருமூலர் வாக்குப்படி மந்த்ராட்சரங்களான அகரம் முதல் க்ஷகரம் வரையில் அமைந்துள்ள ஐம்பது அட்சரங்கள் வேதமந்த்ரங்களில் அமைந்திருக்கின்றன. இவ்வேதத்திற்கு அளவேயில்லை; வேதங்கள் அனந்தமென யசுர்வேதம் கூறுகிறது: பரத்வாஜர் என்னும் முனிவர் ஒரு மனிதனுக்கேற்பட்ட பூரண ஆயுட்காலத்தைப்போல் மூன்று பங்கு ஆயுட்காலத்தில் வேதங்களைக் கற்றார். உடல் மிகவும் மெலிந்துவிட்டது, சக்தியற்றுக் கிடந்திருந்தார். அப்போது அவரெதிரில் இந்திரன் ஆவிர்பவித்தார். எதிரே மூன்று மலைகளைத் தோற்றுவித்தார்: அம்மலைகளினின்று ஒவ்வொரு பிடியாக மூன்று பிடிகளை எடுத்தார். ''பரத்வாஜ, நீ இதுவரையில் கற்றதெல்லாம் இப்பிடிகளுக்கொப்பானது. இன்னும் வேதத்தில் கற்கவேண்டியது இம்மலைகளுக்கொப்பானது' என்றார். ''வேதங்கள் அனந்தம்'' என்றார். (யசுர் வேதம், காடகம், 3–ம் ப்ரச்நம்). ''கற்றது கைம்மண்ணளவு கல்லாதது மலையளவு'' என்னும் பழமொழி இவ்வேதக் கதையினின்றே உண்டானது. நான்கு வேதங்களில் ஒவ்வொரு வேதமும் அநேக சாகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

ருக்வேதம் 21 சாகைகள், யசுர்வேதம் 101 சாகைகள், சாமவேதம் 1000 சாகைகள், அதர்வண வேதம் 9 சாகைகள். ''சாகையாயிர முடையார், சாமமோதுவதுடையார். (திருஞானசம்பந்தர்)

## வேத இலட்சணம். ஆறு அங்கங்கள்

சகல ஜீவராசிகளுக்கும் இம்மை மறுமைப்பயனை நிச்சயமாக அளிக்கவல்லமையுள்ள வேதம் அனாதிகாலந் தொட்டு எவ்வித மாறுபாடுமின்றி படிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ப்ரத்யக்ஷம் முதலியவைகளால் அறிந்துகொள்ள முடியாததும் நிச்சயமாக பலனைக் கொடுக்கவல்லதுமான தர்மங்களை அறிவிப்பதாலேயே அதற்கு வேதம் என்ற பெயர் பொருத்தமானது. அதிலுள்ள தர்மங்களை நாம் நன்கு தெரிந்து கொண்டு செய்வதால் நாம் கோரிய பலனை அடையலாம். அவ்விதம் சர்வ சுகங்களுக்கும் காரணமான வேதத்தை விரோதிகளிடமிருந்து ரக்ஷித்து என்றும் மாறுபாடில்லாமலும் அதன் பொருள் தர்மம் முதலியவைகளைச் சரியானபடி தரிந்து கொள்ளும்படி செய்தலுமே சிக்ஷை முதலிய ஆறு அங்கங்களின் கடமை. எவ்விதம் ஒரு மனிதனை விரோதிகளிடமிருந்து காப்பாற்றுவதற்கு கை கால் முதலியவைகளும் ஸ்வரூபத்தைக் காப்பதற்கு கண் மூக்கு முதலியவைகளும் இருக்கின்றனவோ அதேபோல் வேதம் என்ற அங்கியைக்காப்பதற்கு சந்தஸ் கல்பம் என்ற கால் கை முதலிய அங்கங்களும் ஸ்வரூபத்தை அறிந்து கொள்ளுமாறு சிக்ஷை ஜோதிடம் முதலிய மூக்கு கண் என்ற அங்கங்களும் வ்யாகரணம் நிருக்தம் என்ற முகம் காது என்றதுமான ஆறு அங்கங்கள் உள. அவைகளில் முதன்மையானதும் முக்கியமானதுமான அங்கம் சிக்ஷை. இது வேதத்துக்கு மூச்சுக் காற்றைப் போன்றது. இது இரண்டுவிதமாகவும் வேதத்தை ரக்ஷிப்பதில் மிக கவனமுள்ளது. வியாகரணம் முதலியது உலகததில் வழங்கி வரும் மற்ற பதங்களையும் ரக்ஷிக்கும் நோக்கமாகக் கொண்டு வேதத்தில் சில விசேஷ உரிமைகளைக் கொடுத்து ரக்ஷித்து வருகிறது. சிக்ஷையோவெனில் பிராணன் [மூச்சுக் காற்று] எவ்விதம் வேறு பிரயோசனமின்றி மனிதனைக் காக்கிறதோ அதேபோல் வேத சம்பந்தம் மாத்திரமே கொண்டு மிக முக்கியமாக இருந்து காப்பாற்றி வருகிறது. வேதத்தை ஸ்வரம் அக்ஷரம் சேர்க்கை வேதம் படிப்பவனின் மனம் கண் கை இவை இருக்க வேண்டிய விதி இவைகளை மாற்றி வேதத்தை உச்சரிப்பதே வேதத்தின் விரோதி. அஃதெங்கனமெனில் விரோதியினால் எவ்விதம் விபரீத பலன் உண்டாகுமோ அவ்விதம் ஸ்வரம் வர்ணம் இவைகளின் மாறுபாட்டால் விபரீத பலன் உண்டாகிறது, உதாஹரணமாக த்வஷ்டா என்பவர் இந்திரனிடத்தில் கோபத்தினால் கடுமையான தபசு செய்து இந்திரனுக்கு விரோதியான புத்ரனைத் தனக்கு விரும்பிக் கேட்க அவர் கேட்ட வாக்யத்தின் ஸ்வரத்தின் வித்யாசத்தினால் இந்திரனால் கொல்லப்படத்தக்க புத்ரனையே அடைந்தார், இவ்விதம் மாறுபாடான விரோதிகளிடமிருந்து வேதத்தைக் காக்கிறது சிக்ஷை. பிராணபலம் நன்கு உள்ளவனுக்கு சுகம் எவ்விதம் அதிகமோ அவ்விதமே வேதத்தை நன்கு அறிந்தவனுக்கு பலன் விசேஷமாக ஏற்படுகிறது. நன்கு அறியப்படவில்லையேல் ரத்னத்தின் மதிப்புத் தெரியாதவன் போல் ஸ்வல்பமாகவே பலன் அனுபவிக்க முடிகிறது. உதாரணமாக நிகுமேதர் பருச்சேபர் என்ற வேதம் கற்றுணர்ந்த இரு ரிஷிகள் ஒரு சமயம் போட்டியின் காரணமாக தங்களில் யார் நன்கு வேதமறிந்தவர் என்பதற்காக இரண்டு நனைந்த கட்டைகளில் நெருப்பு உண்டுபண்ண ஆரம்பித்தார்கள். அவர்களில் முதல்வருக்குப் புகையே உண்டானது. இரண்டாமவருக்கு ஜ்வாலையோடு கூடிய நெருப்பு

உண்டானது. நன்கு தெரிந்து கொள்வதால் அதிக பலன் ஏற்படுகிறது. இவ்விதம் நாம் முடியாதென்று நினைக்கும் காரியத்தையும் முடித்து வைக்கும் தன்மையே வேதத்தின் தனிப் பெருமை. அதற்கு வேண்டிய சாதனங்களையும் உண்மைகளையும் உரைப்பதே சிக்ஷயின் கடமை. அவ்விதம் சிக்ஷயில் சொல்லுபவைகளை நன்கு பயின்று முறைப்படி அனுஷ்டிக்க வேணும் தவருமல் அனுஷ்டித்து வருவோமானல் சகல இஷ்டமும் சித்திக்கும். அவ்விதமே நம் முன்னேர்களின் அனுஷ்டானத்தின் பலனை நாம் இன்றுவரை அனுபவிக்கிறேம். நாமும் அதைத் தெரிந்து கொண்டு அனுஷ்டித்தால் நமக்கும் நம்மைச்சேர்ந்த சகல பிராணிகளுக்கும் விஷே சௌக்கியம் உண்டாகும். கான சாஸ்திரத்தின் நுட்பத்தை அறிந்து சுருதிலயத்தோடு பாடும் கானமே எல்லோருக்கும் இன்பமளிப்பதாக இருக்கிறது; இல்லையோ வெனில் வெறுப்பையே கொடுப்பது போல் அந்த கானசாஸ்திரத்தின் முக்கிய ஸ்வரங்களுக்குக் காரணமாய் உள்ள வேதத்தை உண்மையாக அறிந்தவன் சொல்வதைக் கேட்டாலே உண்மையான ஆனந்தமும் மனேநிம்மதியும் ஏற்படுவதை அன்றும் இன்றும் அனுபவிப்பது உண்மை. இவ்விதம் நாம் வேதத்தின் பூர்ணமான உபயோகங்களை அடையக் காரணமான அங்கங்களில் முதலங்கமாம் சிக்ஷ அநேகம். அவைகளில் 35 வரை நன்கு காணப்படுகிறது. பெயரினலே மட்டும் இன்னும் சில தெரிகின்றன. அவைகளில் சில எல்லா வேதங்களுக்கும் பொதுவானதாகவும், சில தனிப்பட்ட வேதங்களுக்கும் உள்ளது. உதாஹரணமாக வ்யாளிசிக்ஷ, ருக்வேதத்துக்கும், வ்யாசசிக்ஷ யஜுர்வேதத்துக்கும் யாக்ஞவல்க்கிய சிக்ஷ சுக்லயஜுர்; வேதத்துக்கும், நாரதசிக்ஷ ஸாமவேதத்துக்கும் உள்ளது. பாணிநீசிக்ஷ பாராசரீசிக்ஷ, அமோகாநந்தினீசிக்ஷ முதலியவைகள் பொதுவாக உள்ளது. இவைகளுக்கு வேதத்தின் லட்சணங்கள் என்று பெயர். இனி இவைகளில் வேதத்தைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்பதைச் சுருக்கமாகக் கொஞ்சம் கூறுவோம்.

## வேதம் கற்கும்முறைகள் ஓதும் முறைகள்

(1) வேதம் எவ்விதம் கற்றுக்கொள்ளவேண்டியது என்பது பற்றி, அதாவது, நமக்கோ எழுத்தைப் பார்த்து நன்கு வாசிக்க முடியும். அநேகம் பிரஸ்களில் கிரந்தத்திலும் நாகரத்திலும் வேதத்தைப் புஸ்தகமாக வெளியிட்டிருக்கிருர்கள். ஆனலும் குருவில்லாமல் நாமாகப் புஸ்தகத்தைப் பார்த்து படித்துத் தெரிந்து கொள்வது மிகத் தவறு. வேதஅத்யயனம் என்ற சொல்லிற்கே குருவின் முகமாகத் தெரிந்துகொள்ளுதல் என்ற அர்த்தமே. ஆகையால், குருமுகமாகத்தான் வேதத்தைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். அப்பொழுதுதான் சுருதி (காதின் வழியாக வந்தது) என்பதும் பொருந்தும். அதன் பிறகு நாம் மனப்பாடம் செய்து கொள்ளல் வேண்டும். இவ்விதம் கற்பிக்கும் குரு, நல்ல ஆசாரமுள்ளவராயும் வேதலக்ஷணம் அர்த்தம், இவைகள்நன்கு அறிந்தவராயும், வியக்தமாய் (நன்கு புரியும்படி) சொல்பவராயும், திருப்தியும், வேதத்தில் பக்தியும் உள்ளவராயும் இருக்கவேண்டும். சிஷ்யனும், ஆசாரமுள்ளவனயும் சோம்பலின்றியும், வேதத்தினிடமும், குருவினிடமும் மிகுந்த பக்தியும் உள்ளவனக இருத்தல் அவசியம். இது வேதம் கற்பதில் சில முக்கிய நியமம்.

(2) வேதம் சொல்வதில் கால நியமம், காலையில் புலி உறுமுவதுபோல் ஹிருதயத்தில் உள்ளதாயும், மத்தியான்னகாலத்தில் சக்ர்வாக பறவைபோல் கண்டத்தில் உள்ளதாயும், சாயங்காலத்தில் மயில் குயில் போல் சிரோகதமாயும் சொல்லவேண்டியது. நாம் அப்யாசம் செய்யும்பொழுது கொஞ்சம் துரிதமாயும், ஏதாவது சர்மாக்களில் சொல்லும்போது மத்திமமாயும், சிஷ்யர்களுக்கு உபதேசிக்கும்போது நிறுத்தி மெதுவாகவும் வேதத்தைச் சொல்ல வேண்டும். இது மாறினல் பலன் மாறுதலை அடையும். அதாவது கர்மகாலத்தில் வேகமாகச் சொன்னல் தனக்கு தாரணம் செய்து கொண்டதாக ஆகுமே தவிர, கர்மாவின் பூர்ண பலனுக்கு உபயோகமாகாதென்பது. இதேபோல மற்றதும்.

(3) வர்ணங்களையும் (அட்சரங்களையும்) ஸ்வரங்களையும் உச்சரிக்கவேண்டிய நியமம். கீதத்தோடு கூடியும், வெகுதுரிதமாயும், தலையை மிகவும் ஆட்டிக்கொண்டும், சந்தேகத்துடனும், மிக பயத்துடனும், காகஸ்வரத்துடனும் மூக்காலும், அட்சரங்கள் ஸ்பஷ்டமில்லாமலும், பல்லால் கடிப்பதுபோல் அதிஸ்பஷ்டமாயும், கையில் ரேகைகளில் உதாத்தம் முதலிய ஸ்வரம் காட்டாமலும் வேறு காரியத்தில் மனதுடனும் சொல்லக்கூடாது. மதுரமாயும், பிறருக்கும நமக்கும் இனிமையாக இருக்கும்படியும், வ்யந்தமான அட்சரங்களுள்ளதாயும், பதம் நன்கு பிரித்தும், நல்ல ஸ்வரங்களுடனும் தைரியமாயும், அதிலேயே மனதின் கவனத்துடனும் அந்தந்த ஸ்வரங்களுக்குச் சொல்லப்பட்ட ரேகைகளைக் காட்டிக்கொண்டும் சொல்லவேண்டும். உதாஹரணமாக, ஸ்வாமியின் அபிஷேகத்துக்காக பால் எடுத்துச் செல்பவன் அபிஷேக காலம் தவருமல் பாலுக்கும் கெடுதல் வராமல் எவ்விதம் ஜாக்ரதையுடன் செல்வானே, பெண்புலியானது தன் குட்டியை பல்லில் கவ்விச் செல்லும்பொழுது. அது விழுந்துவிடாமலும், பல்லினல் குட்டிக்கும் காயம் ஏற்படாமலும், பயத்துடனும், பிரியத்துடனும் எவ்விதம் எடுத்துச்செல்லுமோ அவ்விதம், பயபக்தியுடன் சொல்லப்பட்ட வேதம் பூரணமான பலனைக் கொடுக்கும்.

*[மேற்காட்டிய கட்டுரை திருவிடைமருதூரில் நடந்த ஆறு அங்க மகாநாட்டில் திருநரசிம்மாச்சாரியார் நிகழ்த்திய சொற்பொழிவின் சில பகுதிகளாகும். இவை கொழும்புத்துறை இணைப்பாறிய மாவட்ட காணி அதிகாரி செ. துரைராசசிங்கத்தால் தந்துவப்பெற்றது.]*

வேதத்தை ஓதுதலில் அல்லது ஓதிடச் செய்வதை விட்ட தருமம் வேறில்லை. தருமங்களில் மிக மேலானது இவை. அது மட்டன்றி ஈசனிடம் உற்பவிக்கும் வேதத்தை நீங்களும் மன ஒருமைப்பட்ட தியானத்தில் கேட்கலாம். ஐந்து புலன்களும் தத்தம் வழிச்செல்லாது தடுத்திநிறுத்தி நிட்டை கூடினல் அந்தத் தவநிலையால் சிவனிடத்து அந்த வேதங்கள் ஒலித்துக் கொண்டிருப்பதைக் கேட்கலாகும் என்பதைத் திருமூலர் பின்வரும் பாடல்களால் தெரிவிக்கின்ருர். ஒலிபெருக்கி முதலியவற்றில் வேதம் சொல்லி வேதநெறியை அதனை ஓதும் புனித தர்மத்தைக் கெடுத்துக்கொள்ளாது முறைப்படி யாவரும் வேதத்தை ஓதி எம் சைவநெறியை மேல்நிலைப் படுத்த முயலல் வேண்டும்.

**நெறிவழியே சென்று நேர்மையுள் ஒன்றித்**
**தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்**
**சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்**
**குறியறி வாளர்க்குக் கூடலு மாமே.**

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

இராமலிங்க சுவாமிகள் சிதம்பரத்துநின்று ஆடியருளும் எம்பெருமானை பாடிய பாடல் ஒன்று கீழே தருகின்றேன். யோகசுவாமி இப்பாடலில் அதிக அருட்சக்தி உண்டென்றும் ஓதுவார்க்கு நன்மை பயக்கும் எனவும் ஒருநாள் என்னிடம் நேரில் தெரிவித்தார். இவரைப்போல் இவ்வாறு பாட வல்லார் இக்காலத்தில் இல்லை என்பது யோகசுவாமிகள் தெரிவித்த கருத்துமாகும்.

திருச்சிற்றம்பலம்

ஆடிய பாதமன் றுடிய பாதம்
ஆடிய பாதநின் றுடிய பாதம் -ஆடிய

பாடிய வேதங்கள் தேடிய பாதம்
பத்தி செய் பக்தர்குத் தித்திக்கும் பாதம்
நாடிய மாதவன் நேடிய பாதம்
நாதாந்த நாட்டுக்கு நாயக பாதம் -ஆடிய

தீராத வல்வினை தீர்கின்ற பாதம்
தெய்வங்க ளெல்லாந் தெரிசிக்கும் பாதம்
வாரார வரவாகி வந்த பொற் பாதம்
வஞ்ச மனத்தில் வசியாத பாதம் ஆடிய

ஆரா அமுதாகி அண்ணிக்கும் பாதம்
அன்ப ருளத்தே யமர்ந்தருள் பாதம்
நாரா யணன்விழி நண்ணிய பாதம்
நான் புனை பாடல் நயந்த பொற் பாதம் ஆடிய

நல்லவ ரெல்லாம் நயக்கின்ற பாதம்
நாத முடிவில் நடிக்கின்ற பாதம்
வல்லவர் சொல் லெல்லாம் வல்ல பொற் பாதம்
மந்திர யந்திர தந்திர பாதம் ஆடிய

எச் சமயத்து மிலங்கிய பாதம்
என்ளுக்கு ளெண்ணெய்போ லெங்குமாம் பாதம்
அச்சந் தவிர்த்தென்னை யாட்கொண்ட பாதம்
ஆனந்த நாட்டுக் கதிபதி பாதம் ஆடிய

தேவர்க ளெல்லாஞ் சிந்திக்கும் பாதம்
தெள்ளமு தாயுளந் தித்திக்கும் பாதம்
மூவருங் காணு முழுமுதற் பாதம்
முப்பாழுக் கப்பால் முளைத்த பொற்பாதம் ஆடிய

துரிய வெளிக்கே உரிய பொற் பாதம்
சுகமய மாகிய சுந்தரப் பாதம்
பெரிய பொருளென்று பேசும் பொற்பாதம்
பேறெல்லாந் தந்த பெரும் புகழ்ப்பாதம் ஆடிய

சாகா வரந்தந்த தாரகப் பாதம்
சச்சிதா னந்த சகோதய பாதம்
தேகாதி யெல்லாஞ் சிருட்டிக்கும் பாதம்
திதிமுத லைந்தொழில் செய்கின்ற பாதம் ஆடிய

ஓங்கார பீடத் தொளிர்கின்ற பாதம்
ஒன்று யிரண்டகி யோங்கிய பாதம்
தூங்காத தூக்கத்திற் தூக்கிய பாதம்
துரியத்தி லூன்றித் துலங்கிய பாதம் ஆடிய

ஐவண்ண முங்கொண்ட அற்புதப் பாதம்
அடிய ரெல்லார்க்கு மமுதமான பாதம்
கைவண்ண நெல்லிக் கனியாகும் பாதம்
கண்ணுங் கருததுங் கலந்த பொற் பாதம் ஆடிய

ஆருயிர்க் காதார மாகிய பாதம்
அண்ட பிண்டங்க ளளிக்கின்ற பாதம்
சாருயிர்க் கின்பந் தருகின்ற பாதஞ்
சத்திய ஞான தயாநிதி பாதம் ஆடிய

தாங்கி யெனைப் பெற்ற தாயாகும் பாதம்
தந்தையு மாகித் தயவு செய் பாதம்
ஓங்கியென் னுள்ளே யுறைகின்ற பாதம்
உண்மை விளங்க யுரைத்த பொற் பாதம் ஆடிய

எண்ணிய வாறே யெனக் கருள் பாதம்
இறவா நிலையி லிருத்திய பாதம்
புண்ணியர் கையுட் பொருளாகும் பாதம்
பொய்ய ருளத்திற் பொருந்தாத பாதம் ஆடிய

ஆறந்தத் துள்ளு மமர்ந்த பொற் பாதம்
ஆதி யனுதியு மாகிய பாதம்
மாறந்த மில்லா வென் வாழ்முதற பாதம்
மண்மூத லைந்தாய் வழங்கிய பாதம் ஆடிய

அருட் பெருஞ் ஜோதிய தாகிய பாதம்
அம்மையு மப்பனு மாகிய பாதம்
பொருட் பெரும் போகம் புணர்த்திய பாதம்
பொன் வண்ண மாகிய புண்ணிய பாதம் ஆடிய

தாரண னுதியர் நாடரும் பாதம்
நான் தவத் தாற் பெற்ற நற்றுணைப் பாதம்
ஆரண மாகமம் போற்றிய பாதம்
ஆசைவிட் டார்க்கே அணிமையாம் பாதம்

ஆடிய பாதமன் றுடிய பாதம்
ஆடிய பாத நின் றுடிய பாதம்.

திருச்சிற்றம்பலம்

# சந்திரதீப வாசகர்களின் கருத்துகள்.

## கொழும்பு முத்துவிநாயகர் கோவிலை சீர்திருத்த சேகரித்த பணம் என்னவாயிற்று.?

உ

சந்திர தீப ஆசிரியர் அவர்கட்கு நன்றி.

தாங்கள் சைவத்திற்கும் சைவ ஆலயங்களுக்கும் பிராமணப் பெரியோர்க்கும் செய்யும் பணிக்கும் சேவைக்கும் ஆண்டவன் உங்களுக்கு அருள் புரிவாராக.

முத்துவிநாயக தொண்டன் என்பவர் கொழும்பு செட்டியார் தெரு முத்து விநாயகர் கோவிலில் நடை பெற்ற மகாகும்பாபிஷேகம் பற்றியும், இதற்காக நடந்த பணத்திரட்டல் பற்றியும் இவை இரண்டிற்கும். உள்ள வரவு செலவு கணக்குகள் பற்றியும் 29–6–79 வெளியுள்ள உங்கள் பத்திரிகையில் எழுதியிருந்தார். இக்கடிதம் மிகமுக்கியமானதாகும் ஏனெனில் இரண்டு இலட்சமளவில் சேர்க்கப் பட்டது என்பது யாவரும் அறிந்ததே!

தொண்டர் யாவரும் எல்லாம் வல்ல விநாயகருக்கே பணம் கொடுத்தனர் அன்றி, தர்மகத்தார்களுக்கோ, தர்மகத்தார்களின் வாழ்க்கை நலனுக்கோ, வாகனச் சிறப்புக்கோ, கொடுக்கவில்லை. அத்துடன் கொடுத்த பணத்துக்கு அவர்கள் கணக்கோ, விமரிசனமோ, எதிர் பார்க்க வில்லை. எதிர் பார்க்கா விட்டாலும் கணக்கு காட்ட வேண்டியது தர்மகர்தார்களின் கடமை.

இப்போ தர்மகத்தாக்களுக்கு உதவி யாகவும் நிர்வாகியாகவும் இருப்பவர் ஒரு பிர பல கொம்பனியில் கணக்காளராக பணியாற்றியவர். இவர் ஒரு பிராமணர். கணக்குகள் பற்றியும் கணக்கின் முக்கியத்தைப் பற்றியும் அறிவார். ஆனால் இப்போ அவர் எல்லோருக்கும் கணக்கு விடுவதாக தோற்றுகிறது. இக் கோவிலில் முன்பணியாற்றிய மிக பயபக்தியும் ஆர்வமுடைய ஒரு பிரர்மணரை விலக்கப் பண்ணி இப்போ தானே முழுப் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார். வரவு செலவுக் கணக்கை காட்ட வேண்டியது இவர் பொறுப்பே. இவர் தர்மகத்தார்களை வழி மாறி முறை மாறி நடக்க உதவி செய்கிறார்! ஏன் தன் வருமானத்திற்காக? இச்செயல்களும் வருமானங்களும் நீடிக்குமா?

முத்து விநாயகர் கோவிலில் கும்பாபிஷேகம் நடை பெற்று பூச்சும் வர்ணமுமாக இருந்தது. வெளிப்புற சுவர்களில் அரசும் ஆலும் வேர் ஊன்றி நின்றன. நிற்கின்றன. இன்று ஆலயம் எப்படி? மிக அசுத்தமாகவும் துர் நாற்றமுமாக இருக்கின்றது. வடமேற்கு சுப்பிரமணியர் ஆலயம் ஓரே துர் நாற்றமே! செங்கல், மண், குப்பை கிரட்டை, கொப்பறு எங்கும். இவற்றை நீக்கு வதற்கு முனிசிப்பல் லொறி நாலும், முனிசிப்பல் கூலி ஆட்கள் பலரும் முனிசிப்பல் சுகாதார இன்ஸ்பெக்டர் ஒருவரும் தேவை போல் இருக்கிறது. இவ்லொறிகள் தர்மகத்தாக்களையும் நிர்வாகியையும் சேர்த்து விலக்கினால் பல துர் நாற்றங்கள் விலகுவதாகும்.

கோவில் அருகாமையில் கோவிலில் பணிபுரியும் குருமார்கள் வசிப்பதற்கு வீடுகள் உண்டு. இவற்றை பார்வை இட்டால் தர்மகத்தாக்களின் திறமையும்; நிர்வாகியினது சுத்த, சுகாதார உணர்ச்சியும் விளங்கும். தர்மகத்தாக்கள் முத்து விநாயகரின் பெயரில் உள்ள வீடுகளில் முத்து விநாயகர் செலவில் வேண்டிய வசதிகளுடன் வாழ்கின்றனர் இவர்கட்கு பெரும் வேதனை உண்டாகும். பெரும் விதை வளரும்.

40 செட்டியார் தெரு
கொழும்பு.

இப்படிக்கு
கா. கதிரவேலு.

## இன்றுள்ள புதுமைகளும் கொள்கைகளும் சைவநெறிக்கு புதியன அல்ல.

இன்றைய உலகில் நடை பெறும் ஒவ்வொரு புதுமைகளும் சைவத் தமிழ் நெறியை பொறுத்த மட்டில் புதியன அல்ல என்பதை சைவத் தமிழ் நெறியை நன்கு அறிந்தவர்கள் உணர்வர். ஆனால் சிலர் இன்றைய உலகில் தான் இப்படியான புதுமைச் சம்பவங்கள் நடை பெறுகின்றன என்று வெறும் விராப்புப் பேசித் திரிகின்றனர்.

விஞ்ஞானப் புதுமைகள் என்றாலும் இயற்கையில் நடை பெறும் சம்பவங்கள் என்றாலும் புராதன காலத்தில் நடந்தவை தான் என்பதை இன்றைய மக்களிற் பலர் அறியார். சைவத்தில் உள்ள தெய்வீகத் திருமுறைகளை நாம் நுணுகி ஆராய்ச்சி செய்து பார்த்தால் அதில் விஞ்ஞானம்; தத்துவம், சட்டம், கலை, இலக்கியம், சுதந்திரம். கல்வி சோஷலியம், ஜனநாயகம் சகோதரத்துவம் பண்பாடு கம்யூனிசம் ஆகியவற்றை காணலாம்.

உலகில் உள்ள பெரும் சமயங்களான கிறிஷ்தவம் இஸ்லாம் ஆகிய சமயங்களில் உள்ள கொள்கைகள் அடங்கியுள்ள என்பதற்கு சைவத் திருமுறைகள் சாட்சி பகருகின்றன. இதை மிழ் நாடு தெய்வீகப் பேரவைத் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரே பலசொற்பொழிவுகளில் வலியுறுத்தி வந்துள்ளனர்கள்.

எம் மதமும் சம்மதம் என்ற பரந்த நோக்கோடு செயற் பட்டு வரும் சகோதரத்துவ நெறியில் வந்தது நமது சைவம். எல்லாம் வல்ல சிவனே விண்ணுலகத்தை விட்டிறங்கி மண்ணுலகிற்கு வந்து தொழிலாளியாக மண் சுமந்தார். பணத்துக்காக அல்ல பிட்டுக்காக. அதைப் போல விறகு வெட்டியாக வந்து விறகு சுமந்தார். எனவே சோசலிஷம், கம்யூனிசம் ஏதோ தங்கள் பாட்டன் வீட்டுச் சொத்து என நினைப் போர் இதை எண்ணிப் பார்த்ததில்லை.

கார்ல் மார்க்ஸ் மண்ணுலகில் தோன்ற முன்னமே பொதுவுடமைத் தத்துவத்தை சைவத் தமிழ் நெறியில் நின்று சிவனடியார்கள் செயற்படுத்தியுள்ளார்கள். நாவுக்கரசர் உளவாரம் கொண்டு தொழிலாளி போல் பணி செய்தார். ஒவ்வொரு ஊர் ஊராக சென்று மக்கள் பிணி துடைத்தார். அதைப் போல தீந்தமிழ் சொட்டும் திருவாசகத்தை தந்த மணிவாசகப் பெருமான் மந்திரிப் பதவியையே பொருட்படுத்தாமல் மக்கள் பணியே மகேசன் பணி என செயற் பட்டார். இப்படியே எல்லாம் வல்ல சிவன் முதற் கொண்டு எத்தனையோ சைவ நாயன்மார் சமுதாய மேம் பாட்டிற்காக உழைத்தனர்.

பல்லவர் காலத்தில் தமிழ் நாட்டுக்கு வந்த ஜேர்மன் தேசத்தவர் தஞ்சாவூரில் இருந்து சைவ ஏடுகளை களவெடுத்துச் சென்று தான் பலவிஞ்ஞான ஆராச்சிகளைமேற்கொண்டனர். எனவேசைவ ஏடுகளை சிலர் வெறும் சமயநூல் எனக் கருதுவது அவர்களின் அறியாமையே

இன்றைய ரொக் கெட்டுக்களைப் பற்றியும் ஜெட் விமானங்களைப் பற்றியும் கந்த புரணத்தில் கூறப்பட்டுள்ளது. அதைப் போலவே சூரியனுக்கு உள்ள தொடர்பு பற்றியும் எத்தனையோ லட்சம் மைல்களுக்கு அப்பாலுள்ள நட்சத்திர மண்டலங்களின் இயல்பு பற்றியும் எத்தனையோ திருப்புகழில் அருணகிரிநாதர் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். அது மட்டுமல்லாது அணுவைப் பற்றியும் அதன் இயக்கங்கள் பற்றியும் அவர் பாடியுள்ளார்.

ஏன் இவற்றை கூறுகின்றோம் என்றால் சிலர் சைவம் ஒரு மூடக் கொள்கை நிறைந்த சமயம் அதில் என்ன இருக்கின்றது மேற்கு நாட்டவர்கள் தான் திறமைசாலிகள் அவர்களால் தான் விஞ்ஞானப் புதுமைகளைக் சாதிக்க முடியும் என நினைக்கின்றனர். அக்காலத்தில் சிவ வணக்க முடையவர் சாதித்த சாதனைகளையே இன்று விஞ்ஞானப் புதுமைகளாக மிளிர்கின்றன, கீழைத்தேச நாடுகளை சுறண்டி தங்கள் பெருளாதார வளத்தை மேம்படுத்தியதனாலேயே விஞ்ஞான முன்னேற்றத்தை அடைந்தார்கள் மேற்குநாட்டவர்கள். அதே பொருளாதார முன்னேற்றம் கீழைத் தேசநாடுகளில் இருந்தால் அவர்களைக் காட்டிலும் நாம் பல விஞ்ஞானப் புதுமைகளை சாதிக்க முடியும், இதை நாம் ஏன் கூறுகின்றோம் என்றால் சிலர் ஏன் முன்னர் உங்கள் சைவம் சாதித்த சாதனையை இப்பொழுது சாதிக்க முடியாமல் இருக்கின்றீர்கள் எனக் கூறுகின்றார்கள். அதற்காகவே நாம் மேற்கண்ட விளக்கத்தை அழித்துள்ளோம்?

பெருளாதார வசதி இல்லாதிருந்தும் கீழைத் தேசத்தவர்கள் இன்று உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளாக இருக்க வில்லையா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். சைவ சமயத்தின் முழுமுதற் தெய்வமான ஞானமா நடராசப் பெருமானின் ஐந் தொழிலைக் குறிக்கும் அழகிய திருஉருவமே அண்டசரா சரங்களை இயக்கிக் கொண்டிருப்பதை நாம் ஆராய்ந்தால் மற்றைய விஞ்ஞானப் புதுமைகள் எமக்கு பெரிதல்ல. இதை மாணிக்கவாசகரின் திருவாசகம் எமக்கு வலியுறுத்துகின்றது.

உள்ளவனிடம் இருந்து பறித்து இல்லாதவனுக்கு கொடு என்றார் கார்ல் மார்க்ஸ். சைவத்தில் அதை நடைமுறைப் படுத்திக் காட்டியவர் இளையான் குடிமாற நாயனார். ஒரு நாள் அடை மழை பெய்தது இளையான் குடிமாற நாயனாரின் வீட்டுக்கு ஒரு சிவனடியார் வந்து பசிக்குது அமுது ஏதேனும் உண்டோ என்றார். அப்பொழுது நாயனார் மனைவியை அழைத்து அடைமழை பெய்வதால் யாது செய்யலாம்! சிவனடியான் வந்து அமுது கேட்கிறாரே என்றார். மனைவியோ வந்தவரை உபசரிக்கும் பண்புள்ளவள். உடனே இளையான் குடிமாற நாயனாருக்கு ஒரு யோசனை வந்தது தான் முதல் நாள் விதைத்த நெல் வயலில் அடை மழைக்கு மிதந்திருக்கும் அவற்றை சேர்த்து அள்ளி வந்தால் அமுதளிக்கலாம் என உணர்ந்து நெல்லை பெட்டியில் அள்ளிக் கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்து இடித்து உமி நீக்கி அவித்து அமுது கொடுத்தாள். பசிப்பிணியை போக்க சைவம் இதைப் போலபல வற்றை செய்துள்ளது,

கம்யூனிசத்தைப் பற்றி பேசுபவர்கள் ஒன்றை மட்டும் சிந்திக்க வேண்டும். அது என்ன வெனில் சகல இன.மதமக்களும் உலகில் எல்லா வசதிகளும் சரி சமனாக கிடைத்து விட்டது என எண்ணிக் கொள்வோம். அப்படியானால் இனிமேல் ஒவ்வொரு மனிதனுக்கும் வேண்டியது என்ன? அது தான் ஆன்மீகம். இதை சைவம் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வருகின்றது.

உலிகில் மனித குலம் தொடங்கி இத்தனை வருடங்கள் சென்றும் இயற்கையை வெல்ல முடியாத மனிதன் எப்படி சமயங்கள் கூறுவன எல்லாம் பொய் என்று கருத முடியும்? எனவே சமயத்தை அக்காலத்தில் இருந்தவர்கள் பகுத்தறிவுடன் எடுத்து விளக்கியிருந்தால் இன்று சைவம் உலகிலே முதல் சமயமாக திகழ்ந்திருக்கும். சைவ நெறியை சிலர் குறுகிய நோக்கிற்காகவும், சுய நலனுக்காகவும் பயன் படுத்தி வருவது கவலை தருவதாகும்.

மார்க்ஸிச லெனினிச மாஓலிச பொருளாதார கருத்துக்கள் கூட சைவத் தமிழ் நெறியில் இருப்பதை நாம் அறியலாம். ஏகாதிபத்திய வாதிகளினதும், முதலாளித்துவ வாதிகளினதும் கைப் பொம்மையாக இருந்த கிறிஷ்தவ சமயத்தை பற்றி நன்கு அறிந்த கார்ல் மார்க்ஸ் சைவத்தை அறிந்திருந்தால் ''மதம் ஒரு அபின்'' என்று சொல்லியிருக்க மாட்டார். அவ்வளவு தூரம்சோஷலிச கருத்துக்கள் நிறைந்ததுசைவம்.

செந்தமிழ் சைவச் சுவையில் தம்மை ஈடு படுத்திய ஜேர்மனியர்கள் சிவபெருமானுடைய திருவிளையாடல்களை ஜேர்மனிய மொழியில் நூலாக வெளியிட்டுள்ளார்கள் இப்படியாக சைவத்தின் பெருமை இன்று மேல் நாடுகளில் எல்லாம் பரவுகின்றது இத்தனை உரிய சிறப்புக்களைக் கொண்ட சைவத்தை தமது மதமாக ஏற்றுக் கொண்ட தமிழர்கள் அதன் பெருமை அறியாமல் ''இந்து'' என்று கொண்டு ஆளுக்கொரு சங்கங்களும், சமயங்களும் உருவாக்கி வருவது சைவத் தமிழ் நெறிக்கே இழுக்காகும். எனவே எல்லாம் வல்ல ஆடல் வல்லான் ஞானமா நடராசப் பெருமானை முழுமுதற் தெய்வமாக கொண்டு எல்லா நலனும் பெற்று வாழ்வோமாக.

இங்ஙனம் ந. மகேந்திரன் ஔவையார் வீதி திருகோணமலை.

## கோயிலில் நடைபெற்றதுமணவாளக் கோலமா? அன்று அது பிணவாளக் கோலமா?

சென்ற சில நாட்களுக்கு முன் எமது ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் நடை பெற்ற மணவாளக் கோல விழா எத்தகையது.

மணவாளக் கோலம் என்பதன் அர்த்தத்தைத் தயவு செய்து விளங்கத்தரவும். சைவ சமய மரபு தழைத் தோங்க வேண்டுமாயின் சைவ நெறி எப்படிப் போற்றப் பட வேண்டும். என்பவற்றைக் கூறவும். கோயிலில் இரவு ஒலிபெருக்கியில் ஒப்பாரி இடம்பெறலாமா?

இப்படிக்கு மு, சண்முகநாதன்.

# மந்திரங்கள் யாகாதிகருமங்கள் நியாசங்கள் இவற்றின் தத்துவங்கள்.

## பிறவிற் சிறந்தது மனிதப்பிறவி. இந்த வாழ்வு ஒரு போராட்டம்.

நம் நாட்டில் வேதகாலம் தொட்டு நமக்குக் கிடைத்துள்ள முக்கியமான ரகசிய போதனை இது; நமது வாழ்க்கை ஓர் பெரும் போராட்டம். இந்த மானிட உலகு ஓர் பெரும் யுத்த களம். உண்மை பிரகாசம் இவற்றின் சக்திகளும் பொய் இருள் இவற்றின் சக்திகளும் நம் மானிட உலகை வசப்படுத்தி ஆட்கொள்ள ஸதா போராடிக் கொண்டே இருக்கின்றன. இந்த இருள் சக்திகள் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. வேதத்தில் விருத்திரன் வலன் பணி தஸ்யு என்றும் புராணங்களில் அசுரன் தானவன் என்றும் இதிஹாஸங்களில் ராக்ஷஸன் பிசாசன் என்றும் பலவிதமாகக் கூறப்படுகின்றன. வெளிச்சம் நம் கண்ணுக்குத் தென்படாதபடி எங்கும் இருளைப் பரப்புவது உண்மையைப் பொய்யால் மூடி மறைப்பது ஆனந்தத்தை சிதைத்து அதை துக்கமாக்குவது அமரத் தன்மையை மறைத்து வைத்து மரணம்தான் இயற்கை நியதி என்று தோன்றும்படி செய்வது – இவையே தீய அசுரசக்திகளின் முக்கிய வேலை. ஆனல் உண்மை ஒளி ஆனந்தம் இவற்றை தேவ சக்திகளே தரவல்லன.

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இப்பெரும் போர் தேவாசுர யுத்தம் ஒவ்வொரு கணமும் நடந்த வண்ணம் இருக்கின்றது. அவனது மனோ ராஜ்யத்தில் இந்த இரு தரத்தாரின் சைனியங்களும் கை கலந்து ஸதா சண்டையிடுகின்றன. தேவன் குடிகொண்டுள்ள ஹ்ருதயக் கோட்டையை முற்றுகையிட்டு இந்த அசுர சக்திகள் அவனை வெளிக் கிளப்ப முயற்சிக்கின்றன. உதாரணமாக ஒருவன் உண்மையே பேசவேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டால் உடனே அவன் பொய் பேசித்தான் ஆகவேண்டும் என்று நிர்ப்பந்தங்கள் ஏற்படுகின்றன. ஓர் நல்ல காரியம் செய்யவேண்டுமென்ருல் உடனே எங்கிருந்தோ இடையூறுகள் மலைபோல் குறுக்கே முளைக்கின்றன. இவ்வாறு இயல்பாகவே தெய்வத் தன்மை வாய்ந்த மனிதனை தங்கள் கோஷ்டியில் ஒருவனுக்க இந்த அசுர சக்திகள் முயற்சித்த வண்ணம் இருக்கின்றன. அது மட்டுமல்ல; இம்மானிட உலகையும் தங்களது ராஜ்யமாக்கப் பாடுபடுகின்றன.

## கிடைத்தற்கு மிக அரிய பிறவியில் உண்மை உணர்தல் முக்கியம்.

மானிட உலகிலும் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இவ்வாறு ஓர் போராட்டம் நடந்து கொண்டே இருக்கின்றது என்று நாம் உணர்ந்தாலே போதும். அதுவே ஓர் பெரிய சாதனை. அநேகருக்கு தங்கள் புறக் கண்ணல் பார்ப்பதை விட வேறு காட்சிகள் இருக்கின்றன என்றே தெரியாது. அவர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று எண்ணி ஆடு மாடுகள் போல் ஒருவித வாழ்வு நடத்தி மிகத் திருப்தி அடைந்து வெகு வேகமாக முன்னெறிக்கொண்டே இருக்கிருர்கள்; எதைக் குறித்து முன்னேறுகிரேம் என்று அவர்களுக்குத் தெரியாது, அதைப்பற்றிக் கவலை கொள்வதும் இல்லை. அவர்களது வாழ்வில் அவர்களுக்குப் பிடித்தது நடந்தால் அது தங்கள் பிரபாவத்தால் நடந்தது என்பதும் பிடிக்காதது நடந்தால் அது விதியின் கொடுமை என்பதும் அவர்களது திட்டமான அபிப்பிராயம். தேவாசுர யுத்தம் என்பதெல்லாம் ஏதோ சிலர் தாங்கள் ஏமாந்தது போதாது என்று பிறரையும் ஏமாற்ற வேண்டி எழுதி வைத்துவிட்டுச் சென்ற கட்டுக்கதைகள் என்பதே அவர்கள் தீர்மானமான கொள்கை. ஆகவே மனிதன் இந்த மனப்பான்மையிலிருந்து விடுபட்டு ஓர் பெரும் போராட்டம் தன்னுள்ளும் வெளியிலும் நடக்கின்றது என்று அறிவதே யோகம் ஞானம் இவைகளால் ஏற்படும் அறிவின் முதற்படி,

இவ்வாறு மனிதன் உணர்ந்தால்தான் தனது செய்கைகள் யாரை பலப்படுத்துகின்றன தான் சண்டையில் யார் பக்கம் இருக்கிரேம் என்பதை உணர முடியும். அவன் இவ்விதம் உணராவண்ணம் அசுர சக்திகள் சூழ்ச்சி செய்து அவனை எப்போதும் அறியாமையிலேயே வைத்திருக்கின்றன. ஏனெனில் அறிவு ஏற்பட்டவுடன் அறியாமை பறந்தோம்பாம். வெளிச்சம் வந்தவுடன் இருள் இருந்த இடம் தெரியாது. ஸத்தியத்தின் பெரும் சோதிக்கெதிரே பொய் நிற்கக் கூசும். தேவனை நேருக்கு நேர் கண்டால் அசுரன் குலைநடுக்கம் கண்டு தானே மயங்கி மடிவான். மனிதன் தேவனது பக்கம் சேர்ந்தால் தான் விருத்தியடைந்து தெய்வத் தன்மையைப் பெறுவதோடு நில்லாமல் அதை மானிட உலகிலும் கொணர்ந்து இப்பூமியை சொர்க்கமாக்குகின்ருன். அவன் அசுரனது பக்கம் சேர்ந்தால் அசுரன் தனது காரியத்திற்காக அவனை முழுதும் உபயோகித்துக் கொண்டு மனித குலத்தையே பூண்டோடு நாசமாக்கி விடுகின்ருன்.

## யாகங்கள் மந்திரங்களின் வலிமைகள்.

நமது வேத ரிஷிகள் மனிதன் தேவனது பக்கம் சேர்வதற்காகக் கையாண்ட ஓர் மாபெரும் உபாயமே யாகம், வேள்வி என்பது. அசுர சக்திகளை மனிதன் அசகாயனுய் ஒழிக்க முடியாது. தேவனின் உதவி அவசியம் என்றுணர்ந்து வேள்வியால் தேவனை இறைஞ்சி அவன் நம்மில் எழுந்தருளுமாறு பிரார்த்தித்தனர். நாம் நம்மில் எவ்வளவு இடம் தேவனுக்கு அளிக்கின்ரேமோ அவ்வளவு இடத்தில் அவனது சக்தி நிரம்புகின்றது. நமது அளிப்பினில் தேவன் களிக்கின்ருன். நாம் எவ்வளவு அவன்பால் நெருங்குகின்ரேமோ அவ்வளவு அவனும் நம்பால் இறங்கி வருகின்ருன். யாகம் என்பதே பெரியதோர் கொடுக்கல் வாங்கல். நாம் நம்மை ஒளிவு மறைவின்றி முழுதும் அவனுக்கு அர்ப்பணம் செய்தால் அவன் மனமுவந்து நம்மை அவனுடையவனுக்கிக் கொண்டு நம் வாழ்வை அவனே நடத்துகின்ருன். இவ்வாறு யாகத்தில் தேவனை அழைக்க ரிஷிகள் உபயோகித்த வாக்கே வேதம் மந்த்ரம் எனப்படுவது. தேவனை மானிடரிடையே கொணர வல்லது. மனிதனிடம் தெய்வப் பாதையை வகுத்து அவனை பத்திரமாக அசுர சக்திகளிடமிருந்து காத்து அழைத்துச் செல்லும் பேராற்றல் பொருந்தியதுவேயாகம்

ஆகவே தந்திர சாஸ்திரங்களும் வேத வழியைப் பின்பற்றி மந்திரங்களை உலகிலுள்ள எல்லாவற்றைக் காட்டிலும் மேலானதாயும் ரகசியமாயும் கருதின. மந்திரங்கள் தெய்வத்தை ஆவிர்பவிக்கச் செய்யும் சக்தி பெற்றமையால் அம் மந்திரத்தை மானிடனிடமிருந்து அபகரிக்க தெய்வத்தின் எதிரியான அசுர சக்திகள் காத்துக்கொண்டிருக்கும் என்று உணர்ந்துதான் பெரியோர்கள் மந்திரத்தை மிக மிக ரகசியமாய் வைத்துக்கொள்ள வேண்டும், தகுந்த குருவிடமிருந்தே கற்றுணர வேண்டும், வெளிப்படையாகக் கூறக் கூடாது, தகாதவரிடம் சொல்லக் கூடாது, தான் இன்ன தேவதையின் உபாஸகன் என்றுகூட பிறர்க்குத் தெரியக்கூடாது, என்றெல்லாம் கட்டுப்பாடுகள் விதித்துள்ளனர். அசுர சக்திகள் சில மனிதரைத் தன் வசப்படுத்திக் கொண்டு அவர்கள் மூலமாக தெய்வ வழியில் நடப்பவருக்குப் பொல்லாங்கு விளைவிக்கலாம். மாயாவிகளான அந்த சக்திகளின் வழிகளில் இது ஒன்று. ஆகவே தீங்கு செய்யும் மனிதரை வெறுப்பது தவறு. அம் மனிதர் மீது ஆரோகணித்திருக்கும் அசுரன் பிசாசு அவ்வாறு அவரைச் செய்விக்கின்றது. நாம் நம்மிடம் தெய்வ சக்தியை வளர்த்துக் கொண்டு விட்டால் அத்தீங்குகள் நம்மை ஒன்றும் செய்யா. அவை அம்மனிதரை விட்டுப் போய்விட்டால் நமது ஜன்ம சத்துருபோல் இருந்த அம்மனிதர் நம் ஆருயிர் நண்பனுய் விடுவார்.

## மந்திர நியாசங்களின் தத்துவங்கள்.

தவிர மனிதன் உடல் உயிர் மனம் இம் மூன்றிணுலும் ஆனபடியால் இம்மூன்றிலும் அசுர சக்திகள் ஆதிக்கம் செலுத்த முயல்கின்றன. உயிரிலும் மனத்திலும் தெய்வ சக்தி பரவிப் பாய்வது சுலபம். உடல் ஜடமானபடியால் தெய்வ சக்தி பரவுவது கடினம். ஆகவே அசுர சக்திகள் சாதகனது உடலை அதிகமாகத் தாக்குகின்றன. இந்த உடலும் தகுந்த பாதுகாப்புப் பெறவேண்டும் என்பதற்காக மந்திர உபாஸனையில் ஒரு ரகசியச் சடங்கு உள்ளது. ந்யாஸம் என்று இதற்குப் பெயர். ந்யாஸம் என்ருல் ஒப்படைப்பது என்று பொருள். அதாவது தெய்வ சக்திக்கு அது காப்பாற்றுமாறு ஒப்படைப்பது. தனது உடலின் அங்கங்களான ஹ்ருதயம் தலை முதலியவற்றை பரமனின் பாதுகாப்புக்கு விடுவது அங்க ந்யாஸம் கைவிரல்கள் பத்தையும் பரமனுக்கு ஒப்படைப்பது கர ந்யாஸம், கைகளைப் பரமனுக்கு ஒப்படைப்பதன் நோக்கம் கைகளால் செய்யும் காரியங்களனைத்தும் பரமனதாக வேண்டும் என்பதற்காகவே. உள்ளம் உடல் செயல் எல்லாம் மந்த்ரமயமாக ஆக வேண்டும். மந்த்ரமே தேவதையாதலால் மந்த்ரத்தின் அவயவ அக்ஷரங்களால் இந்த ந்யாஸங்களைச் செய்வது வழக்கம். பிறகு இந்த மந்த்ரமயமான ஆகாசத்தில் இடையூறு விளைவிக்கும் சலனம் ஒன்றும் ஏற்படாதபடி திக் பந்தனம் அதாவது திசைகளை அடைத்து விடுவர். இதுதான் மந்த்ர ஜபம் செய்யும் போது ஏற்படுத்திக் கொள்ளும் கவசம். அசுர சக்திகள் தாக்குதலைத் தவிர்க்கும் உறை. இதுவே நியாசங்களின் தத்துவங்கள்.

துக்கமில்லாமல் சுகம் வேண்டும் எமக்கு என்று நாம் வேண்டவில்லை. ஹே சம்போ எம்மரசே எம்மிடம் நீ ஒளிரவேண்டும். என்பதே எம் விண்ணப்பம். (சங்கர நாராயணன் எம் எ வெளியிட்டவை)

---

## பிராமணப் பிள்ளைகளுக்கு குருகுலப் பயிற்சி.

சைவ ஆலயங்கள் பலவற்றில் அநேக முறையீனங்களும் குறை பாடுகளும் காணப்படுகின்றன. இவற்றிற்கு முக்கிய காரணங்களில் ஒன்று, போதிய சமய அறிவும், சைவக் கிரியைகளைப் பற்றிய விளக்கமும், பயிறிசியுமுள்ள பூசகரினதும், ஆசாரியார்களினதும் பற்ருக்குறையேயாகும். இதை உணர்ந்த எங்கள் சங்கம் நல்ல பூசகர்களையும் ஆசாரியர்களையும் உருவாக்கத் தீர்மானித்துள்ளது.

முதற்படியாக தராதரமுள்ள பிராமண இளைஞர்களைத் தெரிந்தெடுத்து, ஒரு குருகுலத்தில் சேர்த்து, மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு அவர்களின் குருதல பயிற்சிக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தி உதவத் தீர்மானித்துள்ளது. சேர்ந்த மாணவர்களின் தராதரம், அவர்கள் குடும்ப நிலைமை மற்றும் வேண்டிய வற்றை ஆராய்ந்து அவற்றிற் கேற்றபடி சன்மானம் மாதாமாதம் ரூபா 100 - முதல் 150 - வரை இப் பயிற்சி ாகலத்தில் வழங்கப்படும்.

பிராமண இளைஞர் சமுதாயத்தினர் இவ்வித பயிற்சியில் எவ்வளவு ஆர்வமுடையோராயிருக் கின்றனரென்பதில் தான் எமது தீர்மானத்தின் வெற்றியும் பயனும் தங்கியிருக்கிறது. இதில் ஆர்வம் எவ்வளவு உள்ளது என்பதை அறியவே கீழே காணும் விளம்பரம் பிரசுரிக்கப் படுகிறது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரிட்சையில் தமிழில் திறமைச் சித்தி பெற்ற பிராமண இளைஞர்களிடமிருந்து மேலே குறிப்பிட்ட பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப் படுகின்றது, விண்ணப்பதாரர்கள் சமஸ்கிருத மொழியில் பயிற்சி பெற்றிருந்தால் அது விசேஷ தகைமையாகக் கொள்ளப்படும்.

செயலாளர்,மருதடி விநாயகர் ஆலய வழிபடுவேர் சங்கம்
சண்முக நிவாசா,மானிப்பாய்.

என்னும் விலாசத்துடன் எழுத்து மூலம் தொடர்பு கொண்டு விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு— பயிற்சியின் பின், ஒரு பரீட்சை நடாத்தப் படும். இப் பயிற்சியில் விசேட சித்தியடைபவர்கள்; ஆசாரியாபிடேகம் பெறத் தகுதி உடையவர்களாகவும் சாதாரண சித்தியடைபவர்கள் ஆலய பூசகர்களாகக் கடமையாற்றத் தகுதி உடையவர்களாகவும் கணிக்கப்படுகர். இவர்களின் தராதரத்திற் கேற்றபடி மாதாமாதம் நல்ல வேதவமும் இலவச இருப்பிடமும் உள்ளடக்கிய பலவித சேமநலங்களுடன் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் பணிபுரியும் வாய்ப்புக்களில் அமர்த்தப் படுவதற்கு எமது சங்கம் உத்தரவாதம் அளிக்கும்.

செயலாளர் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம். மானிப்பாய்

விநயகநம

# திருக்குருந்தடி உபதேசமாக வந்த திருவாசகம்

மாணிக்கவாசகர் திருக்குருந்தமர நீழலில் ... தேசம்பெற்ற பின்பு சிவன் அருளின் திறம் நன்கு உணர்கிறார். ... ரமும் அற்று குண... கள் எல்லாம் கடந்துநின்ற இன்பவடிவான ... அருளால்தான் ... வர்க்கு உண்மையைப் புல... டுத் ... முடியு... ரனைய ... என்ற நிலையி... நிற்கும் எவராலும் எவர்க்கும் உண்மைவழியைக் காட்டமுடியாது. சாத்திரங்கள் நூல்கள் இவைகள் பலவற்றையும் ஓத ஓத லித்துவச்சேட்டையின் அகந்... த முளைத்து அத்த ஒருநிலை பரம்பொருளை நாடச் சதா இடைஞ்சலை விளைவித்துக்கொண்டிருக்கும்.

இதனாலேதான் உண்மை உ...ந்தபின் மா...க்கவாசகர் கல்வி...ன்னும் பல்கடல் பிழைத்தும்; கற்ற...வெல்லாம் இனி அமையும் (போதும்) எனக் கூறிநின்றார். எங்கள் நாட்டில் சைவசித்தாந்த நூல்களெனப்படும் மெய்கண்ட சாத்திரம் 14 உள. அவற்றில் மெய்ப்பொருள் உணர்வைச் சாத்திர ரீதியாக உணர்ந்துகொண்டாலே அன்றி அநுபூதியாகவோ அநுபவரீதியாகவோ உணர்ந்தார் என்று நாம் மெய்கண்டசாத்திரம் இயற்றினோரைச் சொல்ல முடியாது: இந்தச் சாத்திரங்களைக் கற்று உணர்ந்தவர் பலர் தம்மைச் சித்தாந்த சாகரம் சித்தாந்தமணி சித்தாந்த சரபம் என்றெல்லாம் எத்தனையோ பட்டங்களை வைத்து ஆடைபோர்த்து மாலைசூட்டிக் குறி எழுதிக்கொடும் பாவிக்குச் செய்யும் பெரும் மதிப்பிற்கு நாம் உரியோம் என்று தம்மையும் ஏமாற்றிப் பிறரையும் தம்மைப் பாராட்டுவதில் வீண்பொழுது போக்கிடச் செய்து குழந்தைகள் பாவைக்கு அழுவதுபோல் பொய்மையே பெருக்கித் தம்பொழுதினைச் சுருக்குகின்றனர்

இந்தப் பொய்மைபெருக்கும் பேதையர்கூட்டத்து சமயத்துறை வானொலியாளர்கள் பிரசாரச் சுவாமிகள் மடாதிபதிகள் மணிகட்டி ஆடும் பாடும் பண்டிதர்கள் வித்துவான்கள் மேடை ஏறும் அடங்காப்பிடாரிப் பெண்கள் எல்லாரும் அடங்குவர், இவர்கள் யார் ஒருவரேனும் என்றோ ஒருநாளாகுதல் உண்மைக்கு வரப்போறவர் அன்று. 5-ம் பக்கத்தில் தரப்பட்ட கதா உபநிடத வாக்கியங்களை உணர்ந்துகொண்ட எந்த ஒருவர்க்கும் இந்தப் பேதையர்கூட்டம் ஒருக்காலும் நல்நிலைப்படார் என்பது விளங்கும்.

இதை நாம் இங்கு குறிப்பிடவேண்டிவந்ததன் காரணம் யாது என்றால் பலநூறு ஆண்டுகளாக எம் சைவநெறியில் போலிக்கௌரவம் பெருகிவந்துளது:

நான் அறிந்த அளவில் எத்தனையோ பெண்கள் தங்கள் காதலிலே தோல்வி உற்று அதன்பின் அம்மன் ஆனவர் உண்டு. சில ஆடவர் காதலிலே தோல்வி உற்று அதன்பின்னால் தாடிவிட்டுச் சாமிக்கோலம் பூண்டவர் உண்டு. இப்படி எமது நாட்டில் பலநிலையிலும் சாமிகளாக மாறியவர் பலர்உண்டு. இவர்கள் எல்லாரும் உண்மைநெறியை உணர்வதென்றால் இந்தப்பிறவி அதற்கு இடங்கொடுக்குமோ தெரியாது; அது மிகக் கடினம்,

இந்தக் காதல்தோல்விச் சாமிகள் அடங்காப்பிடாரி அம்மன்கள் சும்மா இருந்தாலும் அவர்களைப் பேதையர் கூட்டம் சும்மா இருக்கவிடாமல கொண்டுவந்து மேடையில்நிறுத்தி அவர்களைப் புகழ்ந்து மாலைபோட்டுக் கும்பிட்டு விழுந்து காலைக்கழுவித் தண்ணீரைத் தன்தலையில் தெளித்து இப்படிப் பலதடவை செய்து தாங்கள் சைவம் வளர்க்கின்றோம் என மேடையில் பிரபல பேச்சுக்கள் நடத்துகின்றனர். இத்தகைய செயல்கள் கொழும்பில் நடப்பன. இந்தப் பேதைத்தனமான செயல்களில் ஆசிரிய கூட்டமும் அரசாங்கசேவையில் ஈடுபட்ட பல்நிலைப்பட்ட நெறியறியாப் பாதகரும் பெரும் பங்கு எடுக்கின்றனர்,

சைவம் வளர்ப்பது என்றால் என்ன? என்பது தெரியாத பல ஆசிரியர்கள் மேடைமேல் வீரம் முழங்கி ஆர்ப்பரித்துக் கொக்கரித்துவிட்டால் சமயம் வளர்ந்துவிடும் என நினைக்கின்றார்கள். இப்படியான பேதைகளின் சைவம் வளர்ப்பு எங்கு பயனளியது என்றால் சில ஆசிரியர்கள் அரசசேவையிலுள்ளவர்கள் தங்கள் பதவிஉயர்வு இடமாற்றங்களில் தாம் விரும்பியதைப் பெறுவதற்கே பயனாகின்றது. அரசபதவியில் உள்ள சில மேலதிகாரிகளைச் சமயத்துறையில் பெரியோர் இவர்; போற்றத்தகுந்தவர் இவர் எனக் கால்வருடி கைவருடல் விளையாட்டில் சைவமார்க்கத்தில் விழாக்கொண்டாட்டம் சைவம் வளர்ப்பது என்றவகை இன்று மலிந்தது! இது உண்மையில் சைவம் வளர்ப்பதல்ல! வயிறு வளர்ப்பதாகும்.

இதனாலே இன்று நான் அறிந்த அளவில் எமது இலங்கை நகரில் உண்மை ஒளி காண நாடும் ஒரு சாதுவை காணமுடியாது இருக்கின்றது. இதன் உண்மைகட்கு 5ம் பக்க கதா உபநிடதத்தை சாட்சியாக வைக்கின்றேன்.

மாணிக்கவாசகர் குருந்த மர நிழலில் சென்று குருவைக் கண்டு உண்மை உபதேசம் பெற்ற பின் தான் உலகினை மறந்து சிந்தை ஒருமைப்படும் பாக்கியம் பெற்றார். அந்த ஒருமைப்பாட்டில் தன்னை மறந்த சிவயோக நிலை கைகூடியது. அதில் தான் மண் நீர் நெருப்பு காற்று வானம் சமயங்கள் ஆறு மந்திரங்கள் வேதங்கள் ... கலைகள் அகர முதல் 51 அட்சரங்களும் அதிசயமான ரூப... தேவர்கள் வான உலகங்களும் படைக்கும் பிரமன் மேகநிற மு... பரந்தாமன் செக்கர் வான் மேனியராகும் உருத்திரன் நிலவு ... தரும் சந்திரன் சூரியன் ஓங்கார மந்திரம் எல்லாம் ஏக வடிவமாய இருந்துணரும். சிவயோக நிலையில் எல்லாவற்றையும் காணுது கண்டு களிப்படைகிறார். இந்தக் களிப்பிலே தன்னை மறந்து மெய்ப்பொருளில் இலயித்து நின்று இன்புற்று எழுந்த பாடல் தான் திருவாசகம்: அந்த திருவாசகப் பாடல் சிலவற்றை உரையுடன் தந்து எம் தீபத்தில் வெளியிடுமாறு பெரியோர்கள் நமக்கு கட்டளையிட்டுள்ளனர். ஆதலின் பெரியோர் அவர் ஆணைக்கு இணங்க மாணிக்கவாசகர் பாடிய திருவாசகப் பாடல் சில கீழே காண்கின்றீர்கள்.

இந்த ஒரு பதிகத்திலே மணிவாசகர் என்ன சொல்கின்றார் என அவதானியுங்கள்: பரிவியேற்கும் உண்டாமோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து ஆவி யாக்கை யான் எனது இன்றி அறுதலே என சிவனைக் கேட்கின்றார்,

இதை எந்த சாத்திரி அல்லது பிராமணர் விளங்குவார். அல்லது எந்த ஒரு பிறசமயம் இதன் நுட்பத்தை உணரும்.

யோகசுவாமி ஒரு உண்மையை குருவருளால் உணர்ந்தது. அதன் நிலையால் உலவா இன்பச் சுடரை காணுது கண்டு மகிழ்வாகி அந்த மலர்ச்சியில் யாழ்ப்பாணத்து ஆரும் இந்த உண்மை நிலை உணர்தற்கு ஏற்ற ஒரு இடமாக தியான மண்டபம் ஒன்று கட்டி வைத்து சிவதொண்டன் நிலையம் எனப் பேரிட்டு அங்கு அங்கத்தவர் மாத்திரம் தான் பிரவேசிக்கலாம் என்று விதித்து அதை ஒரு தருமமாக்கி வைத்தார்:

மாணிக்கவாசகர் சொல்லிக் காண்பித்திடும் இந்த பரமானந்தப் பழங்கடலைத் தான் ஞானிகள் கண்டு அதனை அண்டி அதில் இன்பத்தை அள்ளி உண்டு தித்தித்திருப்பர்: இதற்காக ஒரு நிலையம் யாழ்ப்பாணத்திலே அமைவது போற்றற்குரியது.

ஆனால் சிவதொண்டன் நிர்வாகம் அதன் தாற்பரியத்தை உணருமோ எனக்குத் தெரியாது: யோகசுவாமிகள் சிவதொண்டன் நிலையத்தை சமயப் பரசார நிலையம் அல்லது விழாக் கொண்டாடும் நிலையமாக அமைக்கவில்லை. அவர் நோக்கம் சிவதொண்டின் நிலையால் தியான நிலை எய்தற்குரிய இடமாக அமைய அமைத்து வைத்தார்.

எனது ஒரு நணபர் சிவதொண்டன் நிலைய நிர்வாக அங்கத்தவர் என்னுடன் பேசும் போது கதையோடு கதையாக நான் நேற்று ஒரு கலியாண வீட்டிற்கு போக வேண்டி இருந்தது: அது சிவதொண்டன் நிலைய காரியதரிசியின் கலியாண வீடு. அங்கு சிவதொண்டன் அன்பர்கள் யாவரும் வந்திருந்தனர்: நானும் ஒருவர் பின்னாகச் சென்று இருந்தேன். பெண் வீட்டிற்கும் போனனான் எல்லாம் யோக சுவாமி கிருபையால் நல்லாய் நடந்தது என்றார்.

உடன் நான் அவரை நோக்கி யோக சுவாமி என்னை பல ஆண்டுகட்கு முன்பு நீ சிவதொண்டன் நிலையத்திற்கு போகப்படாது என்று தெருவால் போன என்னைக் கூப்பிட்டுச் சொன்னவர். அன்று நான் ஓர் பிழை செய்தவனாகக் கருதி சுவாமி போகக் கூடாது எனச் சொன்னார். போலும் என எண்ணி நான் மிக்க கவலைப்பட்டேன் இதேன் சுவாமி நான் ஓர் பிழையையும் செய்யா திருப்ப என்னை நீ போகக் கூடாது என மொழிந்தார் என பல நாள் அதை நினைந்து கவலைப் பட்டவன். அன்றில் இருந்து நான் சிவதொண்டன் நிலையத்திற்கு போவதை நிறுத்திக் கொண்டவன். எனக்கு நான் ஓர் தப்பான ஆள் என நினைந்து என்னைப் பற்றி மிகு வேதனைப்பட்டவன். அந்த ஒரு செயலில் முன்பிருந்தே நான் தவறான வழி நடக்காவிட்டாலும் பின்பும் மிக கவனமாக தவறு வழி செல்லாதிருந்தவன். இன்று நீங்கள் இது சொல்ல அன்றிருந்த கவலை நீங்கிவிட்டது. என்னாலும் அவர் ஓர் திகைப்புடன் என்னை நோக்கிட நான் இல்லைப்பாருங்கோ இனி சிவதொண்டன் நிலையம் ஓர் கலியாண மண்டபமாக மாறவும் கூடும் என்றேன். அப்போது அவர் மேற்கொண்டு எதுவும் பேசாது விட்டு விட்டார்.

இவை எல்லாம் நாம் எடுத்து சொல்வது எதற்காக எனின் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் என்ன சொல்கின்றார். அவர் திருவாசகம் எதை பொருளாகக் கொண்டு நிற்கிறது என்பதை விளங்கிக் கொள்வதற்காகும்:

கீழே தரப்படும் திருவாசகம் முழுவதும் மெய்ப் பொருளைப் பெறும் நோக்கமாக உளது என்றதை உறுதிபடக் காட்டுவதாகும்;

**கலந்து நின்னடி யாரோ டன்று வாளா களித்திருந்தேன்**
**புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னாள்**
**உலர்ந்து போனேன் உடையானே உலவா இன்பச் சுடர்காண்பான்**
**அலந்து போனேன் அருள்செய்யாய் ஆர்வங் கூர அடியேற்கே.**

சிவனே என் குருமணியே அன்று திருக்குருந்தடியில் உனது அடியருடன் கூடிக் கலந்து மனமகிழ்ந்து வீணே களிப்புற்று இருந்தேன். உய்யக் கொண்ட நாள் அன்று அடியருடன் களித்தாலும் பின்னரி இன்று வரையும் என் காலங்கள் பிரயோசனமற்று வாடின. பேசியதும் களித்ததுமாக நின்றது. ஆனால் எல்லார்க்கும் பொதுவான இடர்கள் பின்னால் வந்து கொண்டிருக்கின்றன. அந்தோ என் உடலமும் வாடிட வாடி உலர்ந்து போனேன். என்னை உடையவனே! என்றும் அழிவிலாத உண்மையின் சுடரைக் காணும்படி பெரிதும் அலைந்து விட்டேன். இனி எனக்கு அந்த அருள் ஒளிச்சுடரையே காணும் படியான ஓர் ஆர்வத்தை நீயே தந்தருள்வாய் உனது அடியேற்கு. 1

**அடியார் சிலருன் அருள்பெற்றார் ஆர்வங் கூர யான்அவமே**
**முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவால் அடியேன் மூக்கின்றேன்**
**கடியே னுடைய கடுவினையைக் களைந்துன் கருணைக் கடல்பொங்க**
**உடையாய் அடியேன் உள்ளத்தே ஓவா துருக அருளாயே.**

அடியார்கள் சிலர் உன் அருளினைப் பெற்றுக் கொண்டார். அது அவரிடத்துக் கொண்ட ஆர்வத்தின் கூர்மையால் நிகழ்ந்தது. ஆனால் யானோ என்றால் அவத்தின் பொழுதாக தாங்க முடியாத மணத்தினைக் கொண்ட பிணமாகிப் போகும் என் உடலைப் பொருளென்று அந்த உடலின் பற்றால் அவர் இவர் உவர் என்ற படி வேற்றுமை பாராட்டி கோபத்தினால் அடியேன் மூத்துப் போகின்றேன். (கோபம் தான் மூப்பிற்கும் காரணம் என்றவாறு) கொடியேனுடைய இழகிடும் மனமிலாத பாவியேனுடைய பொல்லாத வினைகளை நீ களைந்து உனது கருணையின் கடல் பொங்கிட என்னை உடைய நாதனே அடியேன் உள்ளத்து உன்னை நினைந்துருகும் அன்பினைத் தந்தருள்க. 2

**அருளா ரமுதப் பெருங்கடல்வாய் அடியார் எல்லாம் புக்கழுந்த**
**இருளா ராக்கை இதுபொறுத்தே எய்த்தேன் கண்டாய் எம்மானே**
**மருளார் மனத்தோர் உன்மத்தன் வருமால் என்றிங் கெனைக்கண்டார்**
**வெருளா வண்ணம் மெய்யன்பை உடையாய் பெறநான் வேண்டுமே.**

துற ... பு
இன் ... தனை ... ஒன்று ... மட்டவு
இந்த
அருள்

...ப்பருகும் அமுதம் என்னும் பெருங்கடல் ... நுகிறு..., கிட்ட நில்லாமல் ஓடுங்கள். இவனைப் பார்த்தவும் ...
...லாரும் புகுந்து திளைத்து நின்று அழுந்தி மகிழ நா... என்று ... வருளுகிறார் மக்கள். அவை அப்படிச் செய்யாத ...
... ள சூழ்ந்த இந்த உடம்பினை நான் பொறுத் ...
...ன பல பொய்மை செய்து எம்பெருமானே களைத்துப்போ... ஒன்று ... சொல்லுறேன். அது யாதெனில்
...தை நீ கண்டு கொள், இத்தகைய நிலையில் நான் பேசு... என்... யான் கொள்ள என்னை உடைய
...பக்கம் கொண்ட மனதுடைய விசரன் இதோ இவ் வழியால்கட்டு கனே நல்... வும் சொல... வேண்டும்.
... ல் ... ளர்கள். ...

வேண்டும் வேண்டும் மெய்யடியார் உள்ளே விரும்பி எனைஅருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த அமுதே அருமா மணிமுத்தே
தூண்ட . விளக்கின் சுடரனையாய் தொண்ட னேற்கு...உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே.

உனது அருளையே விரும்பி வேண்டி இரந்து நிற்கின்ற உண்மை நெறி நின்ற அடியார் உள்ளே என்னையே விரும்பி உன் அருளால் அடியேனை ஆண்டாய். அடியேனுடைய இடர் எல்லாம் நீக்கி விட்டாய் என் அமுதே அரிய பெரிய மணி முத்தே தூண்டாது இயல்பில் ஒளி விடும் விளக்கின் சுடர் ஒத்த... உன் தொண்டனேற்கும் ஒரு காலம் உண்டாமோ அது யாதெனின் ஏதும் ஒன்றையும் வேண்டாது அல்லது விரும்பாது உன்பால் மேலான அன்பை நான் பெற்றுக் கொள்வது. 4

மேவும் உன்றன் அடியாருள் விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா உன்றன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்து
ஆவி யாக்கை யானென்தென் றியாதும் இன்றி அறுதலே.

உன்னை அடைய விரும்பும் அடியாருள் நானும் சிறப்புற விரும்பி மெய்மையாக இதைக் கேட்கிறேன்: நீலோற்பல மலரை ஒத்து கயல் மீன் போலும் நீண்ட வரி விழி உடைய உமை அம்மையார் பாகனே அது யாதெனில் உன்னுடைய கருணையினால் பாவியான எனக்கும் உண்டாகிடுமோ பரமானந்தம் விளைகின்ற அந்த கடலிடை சேர்ந்து அதில் மூழ்கி மெய்மறந்து என் உயிர் உடல் யான் எனது என்று யாதும் இல்லாது இவை யாவும் அற்றுப் போகும் புனித நிலை. 5

அறவே பெற்றார் நின்அன்பர் அந்த மின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா மாளா இன்ப மாகடலே.

முழுவதும் நினது அன்பர் முடிவு என்பதில்லாது உள்ளம் நெக்கு நெக்கு உருகும் படியான ஒரு பெருவாழ்வு பெற்று அன்புருவாகி அக நோக்கில் திளைத்திடும் பேறு பெற்றுக் கொண்டனர். ஆனால் புலைத்தன்மையான கீழ்மைச் செயல் செய்யும் நான் மட்டும் வெளிப் பகட்டில் கிடந்து புறத்தே அலைந்து கொண்டு பல பல பேசிப் புலம்புகின்றேன். என்னை உடைய சிவ மூர்த்தியே உன் அருளால் நான் பெற வேண்டும் யாதினை எனில் உன்னிடத்து மெய்யான அன்பு பிரிவிலாது ஒழிவிலாது மறப்பிலாது நினைப்பிலாது அளக்கமுடியாது மாண்டு போகாததாகி இருக்கும் இன்பம் என்னும் பெருங்கடலை. 6

கடலே அனைய ஆனந்தம் கண்டார் எல்லாம் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி ஏசற்றிங்கு இருத்தல் அழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளுதியென் றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரார் அருளால் இருள்நீங்கிச் சோதீ இனித்தான் துணியாயே.

கடலைப் போல பொங்கி எழும் முடிவிலாத ஆநந்தம் கண்டு கொண்டார் எல்லாம் அதனை இரக...மாக அள்ளி அள்ளி உண்டு மகிழ்ந்திட உனது அடிமையான நாய் நான் மட்டும் இடரினைப் பெருக்கி கவலைப்பட்டு வகையறியாது இங்கு இருத்தல் அழகா அதைக்மோ? இவ்வளவு நாளும் நின் அடியார் பெற்ற பேரின்பத்தை எனக்கு அருளுவாய் எனவே உனக்கு சொல்லாது என் வாழ் நாளை வீணே கழித்து ஒழித்து விட்டேன். உனது சுடர் போலும் அருளால் இருளாய உள்ளத்தின் இருள் நீங்கிட சோதி இனி நீ துணிய வேண்டும். 7

துணியா உருகா அருள்பெருகத் தோன்றும் தொண்டர் இடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன் சிவனே நின்று தேய்கின்றேன்
அணியார் அடியார் உனக்குள்ள அன்புந் தாராய் அருளளியத்
தணியா தொல்லை வந்தருளித் தளிர்ப்பொற் பாதம் தாராயே.

துணிந்து உனக்கு அடிமையாகி உள்ளம் உருகி அருள் பெருகும் படி தோன்றுகின்ற தொண்டர்கள் இடையில் நானும் ஓர் தொண்டன் எனப்புகுந்து திண்ணிய மூங்கில் மரம் போல கசிவிலாத சிந்தை உடையேன் நான். என சிவனே இவ்வண்ணம் நான் நின்று தேய்கின்றேன். உனக்கு அணிமையாக உள்ள அடியார்கள் உன் மீது கொண்ட அன்பினை நானும் கொள்ளும்படி தந்தருளி அருள் கனிந்து ஒடிட இனித்தாமதியாது விரைவாக வந்தருளி உனது அழகிய திருப்பாதத்தை நான் தொழும்படி தந்தருள்வாயாக. 8

தாரா அருளொன் றின்றியே தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும் அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோகா
பேரானந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே.

தரவேண்டிய அருள் எல்லாம் ஒன்றும் தப்பாமல் தந்துவிட்டாய் என்று உனது அன்பராகும் அவர் எல்லாம் ஆனந்தக் களிப்பில் மூழ்கி நின்றார்கள். அவர் யாவரும் உனக்கு உற்றாண்மையராயினர் அவர் எல்லாம் அப்படி இருப்ப என்னை மட்டும் நீ பிறம்பானவன் என வைத்திட நான் ஓர் அயலவன் போல மனம் சோரலாமோ உன்னுடைய சிறந்த அருளாலே எனது சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோக நாதனே என் பெருமானே பேரானந்தம் என்னை விட்டு என்றும் பிரிந்து போகாதபடி நீ வைத்திட வேண்டும். 9

மானேர் பங்கா வந்திப்பார் மதுரக் கனியே மனநெகா
நானேர் தோளாச் சுரையொத்தால் நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனைஉணர்ந்தே யுருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளுங் காலந்தான் கொடியேற் கென்றோ கூடுவதே.

பெண் ஒரு பாகத்து உடைய கடவுளே! கும்பிடுவார்க்கு மதுரமான கனியே என் மனம் நெக்குருகாதபடி ஓர் வற்றல் சுரைக்காய் போல் ஆகிவிட்டால் இப்படி என்னைச் செய்வதால் என் தலைவா நீ வாழ்ந்து விட்டாயோ? என் ஊனில் புகுந்த உனை உணர்ந்து உருகி ஆனந்தம் பெருகும் உள்ளத்தை என் தலைவா நீ அருளும் காலம் தான் ஒன்று கொடியேனுக்கும் என்று கூடப்போகின்றது. 10

கூடிக் கூடி உன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடிவாடி வழியற்றேன் வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி யூடி உடையாயொடு கலந்துள் உருகிப் பெருகிநெக்கு
ஆடிஆடி ஆனந்தம் அதுவேயாக அருள்கலந்தே-

உன் அடியார் கூடிக் கூடி கூத்தாடுவார் அருள் வந்தவகை நினைந்து சிரிப்பார் களித்திடுவார். ஆனால் நானோ உலக மயக்கில் கிடந்து வாடி வாடி அருள் பெறும் வழி அற்றேன். வற்றல் மரம் போல ஈரம் இன்றி அன்பின்றி கசிவின்றி நிற்பேனோ! என் கவலை சொல்லி வேறு யாருடன் கோவிப்பேன், உன்னுடன் வெறுத்து வெறுத்து என்னை உடைய உன்னோடு கலந்து உள்ளம் உருகி ஆநந்தம் பெருகி நெக்கு நெக்கு கசிந்து ஆடி ஆடி அதுவே ஆநந்தமாக அருள் கல[ந்து] நிற்பேனே.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் திரு. வை நல்லையா அவர்களால் பிரசுரிக்கப் பட்டது.